கல்கி



KALKI 29-9-1957 30 நயா பைசா


பளபளப்போடு
நறுமணமோங்கும் கேசத்திற்கு...
இராஸ்மிக்
பர்ப்யூம்ட்
கோகனட்
ஹேர் ஆயில்
(கேசத்திற்கு பரிமள தேங்காயெண்ணெய்).
ரோஜா அல்லது மல்லிகை மணமூட்டியது
இலவசம்...
பெரிய சீசா ஒவ்வொன்றுடனும் நல்லதொரு
'ப்ரைட்' ரக 'அளிடேட்' சீப்பு இலவசம்
லண்டனிலுள்ள இராஸ்மிக் கம்பெனி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது
RCH. 2-50 TM

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 17 | தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற | ஹேவிளம்பி
இதழ் 9 | தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | புரட்டாசி 13

முதுகுளத்தூரில் மூண்ட தீ

தேர்தல்கள் சமயத்தில் தமிழ் நாட்டில் யாத்திரை செய்துகொண்டிருந்த வினோபா அடிகள், "தேர்தல்கள் சாதி வெறியைக் கிளப்பிவிட்டிருக்கிறதே தவிர வேறில்லை!" என்று சொன்னார். தமிழ் நாட்டின் சூழ் நிலையை வைத்துத்தான் அப்படிச் சொன்னார். அது எவ்வளவு மகத்தான உண்மை என்பது காங்கிரஸ் மேலிடத்தாருக்கு நன்றாகப் புரியும்படி இன்றைய முதுகளத்தூர் பயங்கரச் சம்பவங்கள் நிரூபணம் செய்து விட்டன!

தேசபக்தி மிகுந்த வீர மறக்குலத்தைச் சேர்ந்தவர்களும், காந்தி மகானின் அன்பைப் பெற்ற ஹரிஜனங்களும் சகோதரர்கள் என்பதை மறந்து ஒருவரை யொருவர் வெட்டிச் சாய்த்து மடிந்து வருகிறார்கள்!

தமிழன்னை கண்ணீர் வடிக்கிறாள்!

நூற்றுக்கணக்கான வீடுகள் தீக்கிரையாகியுள்ளன! ஆயிரக்கணக்கான பேர்கள் வீடுவாசல் உடைமையெல்லாம் துறந்து அனாதைகளாகத் தங்கள்தங்கள் சொந்தக் கிராமங்களை விட்டு ஓடி ஒளிந்து வருகின்றனர்! குழந்தைகளையும், மாதர்களையும், திக்கற்றவர்களையும், கிழவர்களையும் கட்டிப் பிடித்துத் தீயிலே தூக்கி எறிந்திருக்கின்றனர். இன்னும் பலர் போலீஸ் குண்டுகளுக்கு இரையாகி மடிந்துள்ளனர்!

இவ்வளவு உற்பாதங்களுக்கும் அடிப்படைக் காரணம் என்ன என்ற ஆராய்ச்சியில் இப்போது இறங்குவது அவ்வளவு உசிதமாக இருக்காது.

ஒருபுறம் சர்க்கார் தரப்பில் விசாரணை நடந்து வரும்போது, நமது ஊகங்களை வெளியிடுவதும் அவ்வளவு நல்லதல்ல.


உண்மை எப்படியிருப்பினும், தவற்றுக்கு யார் காரணமாயினும், இவ்வளவு கடும் உற்பாதங்கள் நடந்திருக்கவே கூடாது. நடக்கவும் விட்டிருக்கக் கூடாது!

முதுகுளத்தூர் தொகுதியிலிருந்து முதன் முதலில் கலவரச் செய்தி வந்த போது "இத்தகைய சாதிச் சண்டைகள் இருபது வருஷங்களாகத்தான் நடந்து வருகின்றன! தேர்தல் காலங்களில் இது கூடுதலாவது சகஜம்!" என்று கூறி முதன் மந்திரி காமராஜ் அவர்கள் அந்தச் செய்திகளை அலட்சியப்படுத்தி விட்டார்! சென்னையிலிருந்து கலகம் நடந்த இடத்துக்குப் போய் விட்டு வந்த போலீஸ் உயர்தர அதிகாரி, சரியாக நிலவரம் புரிந்து கொள்ளாமல் "எல்லாம் அமைதியாகத்தான் இருக்கிறது" என்று கூறி நிம்மதி யடைந்து விட்டார். சர்க்கார் மட்டும் சற்று முன்ஜாக்கிரதையாக இருந்திருந்தால், அந்த வட்டாரத்து ஹரிஜனங்களிடையேயும் மறவர்களிடையேயும் செல்வாக்கு பெற்ற தலைவர்களைக் கொண்டு சமாதானம் நிலவ ஏற்பாடு செய்திருந்தால், இந்தப் பயங்கரக் கொலைகளையும், படுபாதகமான அட்டூழியங்களையும் தவிர்த்திருக்கலாம்!

முதன் மந்திரி காமராஜ் அவர்களும் போலீஸ் மந்திரி பக்தவத்ஸலம் அவர்களும் இந்தக் கிராமங்களுக்குச் செல்லாமல் கிராமதான மகாநாட்டுக்கு மைசூர் சென்றதைப் பற்றிப் பலர் பலவிதமாக அபிப்பிராயப் படுகிறார்கள்.

கிராமதான இயக்கம் மிகவும் முக்கியமானதே. அதைப்பற்றி யோசிக்கவும் முடிவுகள் செய்யவும் இந்தியாவின் பல பிரதேசங்களிலிருந்து தலைவர்கள் வந்து மைசூரில் கூடி யிருக்கும்போது திரு காமராஜ் அவர்களும் திரு பக்தவத்ஸலம் அவர்

பொம்மலாட்டம்



யாரோ பிறரால் தூண்டிவிடப்பட்டே முதுகுளத்தூர் கலகங்கள் நடைபெற்றிருப்பதாக வதந்தி உலவுகிறது.

களும் மேற்கொண்டு யோசனைகள் சொல்லிக் காரியங்கள் முடிக்கும் வாய்ப்பு ஏதும் இருந்ததாகக் காணப்படவில்லை. அதற்குப் பதிலாக, கலவரப் பிரதேசத்துக்கருகே இருந்து நிர்வாகிகளுக்குப் பல யோசனைகள் கூறியிருக்கலாம். அந்தப் பகுதி மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பீதியைப் போக்கிச் சமாதானத்தை நிலைநாட்டியிருக்கலாம்.

ஆனாலும் நமது சர்க்கார் சும்மா இருந்து விடவில்லை. கலகத்தைப் பற்றி விசாரணை நடத்துவதற்கு திரு எஸ் வெங்கடேசுவரன், ஐ. ஸி. எஸ். அவர்களை நியமித்திருக்கிறது.

கலகம் நடந்து கொண்டிருக்கும் இடத்தில் திரு எஸ். வெங்கடேசுவரன் விசாரணை நடத்துகிறார். விசாரணைக்குச் சமயமாவது இடமாவது இது அல்ல. மக்கள் தைரியமாக சாட்சி சொல்ல மாட்டார்கள்.

சமீபத்தில் மதுரை திலகர் சதுக்கத்தில் திரு முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பேசிய போது, பத்தாயிரம் மக்கள் கொட்டும் மழையில் நின்று அவர் பேச்சைக் கேட்டனர் என்றால் அவரைக் கொண்டு தேவர் மக்களிடையிலும் பொதுமக்களிடையேயும் பல முயற்சிகள் செய்து அமைதி நிலவுவதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கலாம்.

சர்க்கார் கட்சியில் சேராதவர்களும் எந்த உத்தியோகமும் வகிக்காதவர்களுமான திரு ம. பொ. சிவஞான கிராமணியார், திரு சேதுபதி, திரு பி. ராமமூர்த்தி, திரு சா. கணேசன் போன்றவர்கள் சமாதானக் கமிட்டி ஒன்று அமைத்து, கலகப் பகுதிகளில் சுற்றுப் பிரயாணம் செய்ய முயன்று வருகிறார்கள்.

இந்தக் கலவரங்களின் காரணமாகப் பலப்பல இன்னல்களுக்கு ஆளானவர்களுக்கு நமது மனப்பூர்வமான அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்! உடனே இவர்களுக்கு வேண்டிய எல்லாவித உதவிகளையும் செய்வது அரசாங்கத்தின் கடமை.

அமெரிக்காவின் கடன் உதவி

அமெரிக்க சர்க்காரிடமிருந்தும், அமெரிக்கத் தனி முதலாளிகளிடமிருந்தும் மூலதனம் பெற்றுவர நிதிமந்திரி டி. டி. கே. அமெரிக்கா சென்றிருக்கிறார். அமெரிக்க முதலாளிகள், பாரத நாட்டில் முதலீடு செய்தால், அவர்களுக்கு வேண்டிய சலுகைகள் அளிக்கப்படும் என்று உத்தரவாதமும் அளிக்கிறார். இந்திய முதலாளிகளுக்குப் பல வரிகளை விதித்து அவர்களை இடைஞ்சல்களுக்கு உள்ளாக்கியிருப்பதுபோல் அமெரிக்க முதலாளிகளைக்

கஷ்டப்படுத்த மாட்டோம் என்று கூறியிருக்கிறார். பாரத நாட்டில், அமெரிக்க முதலாளிகள் ஆரம்பிக்கும் ஸ்தாபனங்களைத் தேசியமயமாக்க மாட்டோம் என்றும் சொல்லி வருகிறார்! இவை எல்லாவற்றுக்கும் மேலாக, பாரததேசம், முதலாளித்துவத்தில் நம்பிக்கை கொண்ட நாடு என்று பேசியிருக்கிறார்!

நம் நாட்டில் நமது முதலாளிகளுக்கு இது வரை உலகில் யாரும் கேட்டறியாத செலவு வரியும் சொத்துவரியும் இன்னும் பல வரிகளையும் விதித்து விட்டு, "இந்த வரிகளினால் பாதிக்கப்படுபவர்கள் எத்தனை பேர்? மிக சொற்பப் பேர்களே! இவர்கள் தொந்தரவுக்கு ஆளானாலும் என்ன?" என்று வாய் கூசாமல் கேட்டவர்தான் அமெரிக்க முதலாளிகளின் தயவைச் சம்பாதிக்க இப்படிப் பேசிவருகிறார்!

இடத்துக்குத் தகுந்தபடி, தேசத்துக்குத் தகுந்தபடி பேசி, சென்ற காரியத்தைச் சாதித்துக் கொள்ளவேண்டும் என்று டி. டி. கே. இப்படி நடந்துகொண்டு வருகிறார்!


அமெரிக்க முதலாளிகளாவது சர்க்காராவது ஏமாந்துபோகும் சாம்பிராணிகள் அல்ல. ஆயினும் தங்களுடைய உலக அரசியல் போராட்டத்தின் பலத்தைப் பெறுவதற்காகக் கடன் உதவி அளிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை! கடன் உதவி அளிப்பதனால் பாரத நாட்டைக் கைவசப்படுத்திக் கொள்ளலாம் என்ற ஆசையோடு உதவி செய்வார்கள்.

இனி பாரத நாட்டு அரசியல் கொள்கைகள் வெளிநாட்டு விவகாரங்கள் முதலிய யாவும் அமெரிக்காவின் கொள்கைகளை அனுசரித்தபடியே இருக்க வேண்டியிருக்கும்! காகிதத்தில் இப்படி அனுசரிக்கவேண்டும் என்றிராது! ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் தங்களுக்கு இஷ்டமான கொள்கைகளை அனுசரிக்கலாம் என்றே இருக்கும். ஆனால் நடைமுறையில் பாரத தேசம் தன்னுடைய அபிப்பிராய சுதந்திரத்தைப் பூரணமாக இழந்துவிட நேரும் என்று பயப்பட இடமுண்டு.

இந்தக் கடன் பெருந்தொகையாக இருக்குமாதலால், விரைவில் திருப்பித்தர இயலாமற் போகும். வருங்காலத்தில் பாரத நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்பவர்கள் பண்டித ஜவாஹர்லால் நேரு போன்ற உலகப் புகழ்பெற்ற தலைவர்களாகவும் இருக்க மாட்டார்கள்! ஏன், ஜவாஹர்லால் நேரு அவர்களும்கூட இனிமேல் ஒரு ஸ்தாயி குறைத்துக் கொண்டுதான் பேசுவார்.

ஜெர்மன் மக்கள் வீரத்தைப் பற்றியோ, மன உறுதியைப் பற்றியோ யாரும் சந்தேகப் படமாட்டார்கள். பல அல்லல்களுக்கு உட்பட்டுச் சோதனைத் தீயில் சோதிக்கப்பட்டு இஸ்ரேல் நாட்டில் விரோதிகளுக்கிடையில் வீரத்துடன் அரசியல் நடத்தும் யூதர்களின் சுதந்திர உணர்ச்சியைப் பற்றியும் யாரும் சந்தேகப்பட மாட்டார்கள். ஆனபோதிலும்

எல்லோருக்கும் நல்லவர்



மேற்கு ஜெர்மனியும் இஸ்ரேல் நாடும் அமெரிக்கா ஆட்டுகிறபடி ஆடிவருகின்றன.

வருங் காலத்தில் நம் நாடு ஒரு இஸ்ரேல் நாட்டைப் போலவோ இன்றைய மேற்கு ஜெர்மனியைப் போலவோ ஆகிவிடும். பாரத நாட்டில் தொழிலும் செல்வமும் பெருகுமோ என்னவோ! ஆனால் எத்தனை எத்தனையோ தியாகங்கள் புரிந்து பெற்ற சுதந்திரம் மட்டும் நாம் அமெரிக்காவிடம் கடன் வாங்கிய பணத்துக்கு அடிமைப்பட்டுப் போகும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் மகாகவி பாரதியாரின் பாடல் நினைவுக்கு வருகிறது.

"மண்ணில் இன்பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை இழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ!"

தென்னாட்டின் குரல்

"வட நாட்டினரால் தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது!" என்று தமிழ் கூக்குரல் அடிக்கடி கேட்கிறோம்!

இதைக் கேட்ட வட இந்தியர்கள், "தென்னாட்டில் என்ன என்ன தொழிற்கூடங்கள் ஏற்படுத்த வாய்ப்புக்கள் இருக்கின்றன. உங்கள் குறைகள் என்ன, கனவுகள் என்ன, சொல்லுங்கள்" என்று உண்மையிலேயே அறிந்திடக் கேட்கத்தான் செய்கின்றனர்!

தென் பகுதி மக்களின் நல்வாழ்வுக்கு வேண்டிய திட்டங்கள், அபிலாஷைகள், கனவுகள் யாவும் பாரத சர்க்காருக்கு எடுத்து இயம்பும் பொறுப்பைச் சட்டசபை அங்கத்தினர்களுக்கும், பார்லிமெண்ட் அங்கத்தினர்களுக்கும், மந்திரிகளுக்கும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் மட்டும் ஒப்படைத்தால் போதாது! அவர்கள் வடநாட்டினரின் தயவைப் பலவிதத்தில் எதிர்பார்த்து வருகிறார்கள். அவர்கள் தயவில்லாவிட்டால் அந்த ஸ்தானங்களுக்கே அபாயம் ஏற்பட்டுவிடும் அல்லவா? வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் முன்ன போட்டா போட்டியில் தென்னாட்டுக் காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்குச் சுதந்திரம் அவ்வளவாக இல்லை. அகில இந்திய அமைப்பான காங்கிரஸில் இவர்களும் ஒரு பகுதியான படியினால் இந்தச் சங்கடம் உண்டு.

இத்தகைய சிக்கலில் சிக்கிக் கொள்ளாத ஒரு ஸ்தாபனம் இப்பொழுது நமக்குத் தேவை. அந்த ஸ்தாபனம் தென்னாட்டு மக்களின் உரிமைகள், வேலை வாய்ப்புக்கள் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் தக்க புள்ளி விவரங்களோடு எவ்விதக் கட்சிப் பற்றுமின்றித் தொகுத்துத்தரக் கூடியதாக இருக்க வேண்டும். இத்தகைய லட்சியங்களைக் கொண்ட ஸ்தாபனம் ஒன்று சென்னை நகரில் ஆரம்பிக்கப்பட்டது. தென்னக ஆராய்ச்சி மன்றம் என்ற பெயரில் சென்ற வாரம் இந்த ஸ்தாபனத்தின் ஆரம்பவிழா நடைபெற்றது.

மொழிக் கமிஷன் அங்கத்தினர்களில் ஒருவராக இருந்து, அதில் பெருவாரியான அங்கத்தினர்களின் அபிப்பிராயத்துக்கு மாறாக, தென்னாட்டு மக்களின் கருத்தை ஓரளவு தைரியமாக வெளியிட்ட டாக்டர் சுப்பராயன் எம். பி. அவர்கள் இந்த ஸ்தாபனத்தை ஆரம்பித்து வைத்தது நல்ல சகுனமாகும்.

இந்த ஸ்தாபனத்துக்குத் தலைவராகவும் காரியதரிசியாகவும் பல படித்த அறிவாளிகள் இருக்கிறார்கள். அதனால் இந்த மன்றம் நல்ல முறையில் பணி செய்து தென்னாட்டு மக்களின் உரிமைகளை எடுத்துக் கூறும் என்று நம்புகிறோம். இந்த ஸ்தாபனத்தில் தென்னாட்டு நலனில் அக்கறை கொண்டவர்கள் அனைவரும் சாதி மத பேதமும் கட்சிபேதமுமின்றி சேர்ந்து தொழில்புரிவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

தமிழ் நாட்டு மக்கள் தங்களுக்கு உரிய உரிமைகளைப் பெற வேண்டுமானால் பாரத நாட்டிலிருந்து பிரிந்து தனியாட்சி ஏற்பட்டால்தான் முடியும் என்று இப்பொழுது சிலர் எண்ணி வருகிறார்கள். இது தவறு. முறையுமல்ல. தென்னாடும் வடநாடும் பிரிந்து வாழ இயலாது. நியாயத்தை எடுத்துச் சொல்லி உரிமைகளைப் பெற வேண்டும். பிரிந்து போவோம் என்கிற மிரட்டல், கவுரவமாகாது. பிரிந்தால் நமக்கே பெரும் நஷ்டமாகும். நம்முடைய உரிமைகளை எடுத்துப் பேசுவார் இல்லாதபடியினால்தான் தற்போதைய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கட்சி சார்பற்று நேர்மையான முறையில் தமிழ் நாட்டு மக்களின் உரிமைகளை எடுத்துச் சொல்ல ஒரு ஸ்தாபனம் ஏற்பட்டிருப்பதைக் கண்டு மகிழ்கிறோம். அதைத் தமிழ் மக்கள் அனைவரும் மனமார வரவேற்க வேண்டும். இந்த ஸ்தாபனத்தை திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் அல்லது வேறு கழகங்களின் துணை ஸ்தாபனம் என்று யாரும் எண்ணலாகாது. இதன் வளர்ச்சிக்கு முழு ஆதரவைத் தரவேண்டும்.

காந்தி ஜயந்தி இதழ்

அக்டோபர் இரண்டாம் தேதி என்றால் காந்தி ஜயந்தி என்பதைப் பாரத மக்கள், ஏன், உலக மக்களே உணர்வார்கள்; மிகுந்த உற்சாகத்துடன் அந்த நாளைக் கொண்டாடுவார்கள். நம்முடைய பாரத நாட்டிலோ அக்டோபர் மாதம் முழுவதுமே காந்தி ஜயந்தியைக் கொண்டாடி நமக்குச் சுதந்திரம் வாங்கித்தந்த மகானுக்கு நன்றி செலுத்துவார்கள். காந்தி ஜயந்தியை யொட்டி அடுத்த அக்டோபர் ஆறாந் தேதி 'கல்கி' இதழ் காந்தி ஜயந்தி இதழாக வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த விசேஷ இதழில் காந்தி மகானைப் பற்றிய கட்டுரைகளும், காந்திஜியின் மணிமொழிகளும், அவருடைய பல்வேறு தோற்றப் படங்களும் வெளியாகின்றன.



சென்னை மா நகரும் மகா ஜனங்களும் செய்த தவப்பயனாக காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்யார் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சென்னைக்கு விஜயம் செய்துள்ளார். அந்த மகானின் வருகையைப் பல வருஷங்களாக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த பதினாயிரக் கணக்கான பக்தர்களிடம் கருணை கொண்டு இங்கு விஜயம் செய்துள்ள நடமாடும் தெய்வத் திரு உருவாக விளங்கும் ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் நவராத்திரி முடியச் சென்னையிலேயே தங்கியிருந்து பக்தர்களுக்குத் தரிசனம் தந்து அருள்புரிவார் என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்ப் பல்கலைக் கழகம்

—கொழும்பு, செப்டம்பர், 21வ

இவ்வாரம் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தைச் சேர்ந்த ஒரு தூதுகோஷ்டியினர் பிரதம மந்திரி ஸ்ரீ பண்டார நாயகாவைப் பேட்டி கண்டு தமிழ் மாணவர்களுக்காக ஒரு தனி பல்கலைக் கழகத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்கள். இலங்கையில் தற்சமயம் இருக்கும் ஒரே ஒரு பல்கலைக் கழகத்தில் போதிய இட வசதியில்லை யென்றும், தமிழ் மாணவர்களுக்கு இடம் கிடைப்பது குதிரைக் கொம்பாயிருப்பதாயும், இடம் கிடைக்கும் தமிழர்களுக்குச் சிங்கள கலாசார சூழ்நிலையில் கல்வி போதிக்கப் படுகிறதென்றும், ஆகையால் தமிழர்களுக்காக ஒரு தனி பல்கலைக் கழகம் அத்தியாவசியமென்றும் அவர்கள் பிரதம மந்திரியிடம் எடுத்துக் காட்டினார்கள்.

பிரதமர் இந்த யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்க முடியாதென்று சொல்லி நிராகரித்து விடவுமில்லை. இரண்டு விதமாகவும் சொல்லாமல் சங்கடங்களைத் தவிர்ப்பதிலே சமர்த்தரான பிரதமர் ஸ்ரீ பண்டாரநாயகா தமிழர்களுக்குத் தனியாக ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவ வேண்டிய அவசியம் இன்னும் ஏற்படவில்லை யென்றும், தற்சமயமுள்ள பல்கலைக் கழகத்தில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பாட போதனை நடப்பதினால் தமிழ் மாணவர்கள் அதில் சேர்ந்து தமிழ்மொழியில் படிப்பதிலே ஆட்சேபணையில்லையென்றும் கூறினார். ஒன்றுக்கு மேற்பட்ட பல்கலைக் கழகங்கள் இலங்கைக்குத் தேவையா? தேவையானால் அவை எங்கே அமைய வேண்டும்? என்பவை போன்ற பிரச்னைகளை அரசாங்கம் விரைவில் நியமிக்கப் போகும் பல்கலைக் கழக விசாரணைக் கமிஷன் ஆராயும். அப்பொழுது தமிழ்ப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தும் பிரச்னையும் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப் படும் என்று பிரதம மந்திரி அறிவித்திருக்கிறார். தூதுகோஷ்டியின் வேண்டுகோளை ஏற்காமலும் நிராகரிக்காமலும் இனிமையாகப் பேசி நிலைமையை ஒருமாதிரியாகப் பிரதம மந்திரி சமாளித்து விட்டபொழுதிலும் அவருடைய பதில் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தினருக்குத் திருப்தி யளிக்கவில்லை. —ரஜனி

சகல கலா வல்லியே!

"அறிவினுக்கு அதிகாரிய தெய்வம்"

—பாரதியார்

"வீடுதோறும் கலையின் விளக்கம்" என்றார் கவியரசர் பாரதியார். தமிழ் நாட்டிலே நவராத்திரி விழா அப்படியொரு வீடுதோறும் விளங்கும் கலைவிழாவே யாகும். அழகு அழகான வண்ணப் பொம்மைகளை வரிசை வரிசையாகவும் கவர்ச்சியோடும் வைத்து, ஊர் கூட்டி தம் பெண்கள் விழாக் கொண்டாடுகிறார்கள். பொம்மைக் கலை இதனால் வளர்கிறது. ஊர் அழைக்கச் செல்லும் பெண் குழந்தைகளுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வேஷம் போட்டுத் தாய்மார்கள் அனுப்புவார்கள். இதனால் அலங்காரக் கலையும் வளர்கிறது. கலைமகளை எழுந்தருளச் செய்திருக்கும் கொலு மேடைக்கு முன்னால் இருந்து அருமையான பாடல்களைப் பாடுவார்கள். இதனால் இசைக்கலையும் வளருகிறது. அண்டை அயலில் உள்ள மக்கள் ஒருவர் வீட்டுக்கு ஒருவர் சென்று அந்தந்த வீட்டில் கலைமடந்தை எழுந்தருளி யிருக்கும் கோலத்தைக் கண்டு மகிழ்வார்கள். இதனால் சமூக ஒற்றுமை உண்டாகிறது. இப்படிப் பல துறைகளில் கலைமடந்தையைப் போற்றுகிறோம், வணங்குகிறோம்! தொழிலாளர்களும் அறிவாளிகளும் ஆயுதங்களையும் புத்தகங்களையும் ஒன்று சேர வைத்து ஒரே தெய்வத்தை வணங்குகிறார்கள். ஆகவே தொழிற் கலைக்கும் அறிவுக் கலைக்கும் உரிய தெய்வம் கலைமகள்தான் என்பதை நம்முடைய முன்னோர்கள் எவ்வளவு சிறிய முறையில் உணர்ந்து, அதைச் சிறப்பாக வழிபட வழிவகுத்திருக்கிறார்கள்.

இந்த ஆண்டிலும் நாம் அனைவரும் கலைமடந்தையைப் போற்றுவோம்: அறிவுத் தெய்வத்துக்கு வணக்கம் செலுத்துவோம்.

இந்தியப் பண்பாட்டின் ஓவியக் கலையில் நிபுணரான திரு ராஜம் அவர்கள் வரைந்துள்ள கலைமகள் இவ்விதழ் அட்டையை அலங்கரிக்கிறாள். அத்துடன் ஒவ்வொரு தமிழர் இல்லங்களிலும் இவ்வாரம் எழுந்தருளப் போகிறாள். அறிவாளிகளாகிய தமிழர்கள் கலைமடந்தைக்கு நல்ல வரவேற்பு அளிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

பிரார்த்தனைக் கூட்டம்

— கிண்டி ராஜபவனம் —

காந்தி மண்டபத்தில்

செப்டம்பர், 27-ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்கு

தாம்பரம் "சேவை இல்லத்"தைச் சேர்ந்தவர்கள் துதி கீதங்கள் பாடுவார்கள்.

நாகஸ்வர இன்னிசை - தக்கர்பாபா வித்தியாலய மாணவர்கள்,
சாரதா வித்தியாலய போதனாமுறை பயிற்சிப் பள்ளி மாணவிகள்,
நூற்பு யக்ஞம், கீதை பாராயணம், ராமநாம பஜனை


இதோ
உங்களுக்கு
முற்றிலும் புதிய
மாதிரியான
இரு பவுடர்கள்
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
TOILET POWDER
ஸாண்டால்
சந்தனத்துடன் கூடிய
டால்கம் பவுடர் ...
ஸாண்டல் வுட்
டாய்லட் பவுடர்
சுத்தமான தனி
சந்தனத்தை
மென்மையாக்கப்பட்டது.
டி.எஸ்.ஆர். & கோ
கும்பகோணம்



நான்தான் டீ...
நான் விதைகளிலிருந்து
பயிராக்கப்படுகிறேன்
TEA BOARD INDIA

வட்ட மேஜை

ஏன் காலதாமதம்?

தேர்தல் நடந்தது மார்ச் மாதம். மாதங்கள் ஆறு உருண்டோடி விட்டன. ஆனால் தேர்தலில் வேலை செய்த எங்களில் சிலருக்கு இன்னும் பிரயாணப்படி கிடைக்கவில்லை: சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் விசாரித்தால் தினமும் அனுப்பிக் கொண்டிருப்பதாகவும், சீக்கிரம் வரும் என்றும் சொல்லுகிறார்கள். அவ்வாறு அனுப்புவதற்கு இவ்வளவு மாதங்கள் ஆகின்றனவா? இனியாவது சீக்கிரம் பிரயாணப்படி கிடைக்கும்படி ஏற்பாடு செய்வார்களா?

தெத்தாகைத்தூர் டி. வி. கணேசன்
21—8—57 பள்ளி ஆசிரியர்

பர்மாவாழ் இந்தியரின் நிலைமை

பர்மாவில் சுமார் ஆறு அல்லது ஏழு லட்சம் இந்திய சமூகத்தினர் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பாதிப் பேருக்கு மேல் இங்கேயே பிறந்து வளர்ந்து இந்தியாவே தெரியாதவர்கள். பர்மா அரசாங்கத்தார் தங்களுடைய வரவு செலவு நிர்வாகத்தைச் சரிசெய்து கொள்ளுவதற்கு அன்னியர்களுக்கு வரி போடுவது என்று வைத்திருக்கிறார்கள். இதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால் ரூபாய் இருபத்தைந்துக்கு உயர்த்தி ஒரு வருடம் முடிவதற்குள் எவ்வளவோ மன்றாடிக் கேட்டுக் கொண்டும், முடிவு காண்பதற்குள் இப்பொழுது ரூபாய் ஐம்பதுக்கு உயர்த்தியிருக்கிறார்கள். ரூபாய் இருபத்தைந்தே கட்ட முடியாமல் பதினாயிரக் கணக்கான இந்தியர்கள் அவதிப்பட்டுக் கொண்டு என்ன செய்வதென்று ஒன்றும் தோன்றாத நிலையில் இருக்கிறார்கள். இந் நிலையில் ரூபாய் ஐம்பதாக உயர்த்தியது அவர்களுக்குப் பேரிடி போன்று இருக்கிறது. பர்மா இந்தியன் காங்கிரசும் சென்ற ஆண்டு எவ்வளவோ முயற்சி எடுத்தும் தீர்மானங்கள் இயற்றியும் ஒன்றும் இதுவரை பலனேற்படவில்லை. பர்மாவில் வசிப்பவர்கள் என்று பர்மா பிரஜா உரிமைப் பத்திரம் வைத்திருக்க வேண்டும். அல்லது அன்னியர் பதிவுப் பத்திரம் வைத்திருக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. பர்மாவிலேயே பிறந்து வளர்ந்தவர்கள், அன்னியர்களாக இருந்து பர்மா பிரஜா உரிமைக்கு மனுச் செய்து கொண்டிருப்பவர்கள் அநேகம் பேர்கள் இருக்கிறார்கள். மனுச் செய்து கொண்டு ஐந்தாறு ஆண்டுகளாகியும் இன்னும் முடிவு தெரியவில்லை. இன்னும் எத்தனை ஆண்டுகள் செல்லுமோ, அதுவும் தெரியவில்லை. அதுவரை இவர்களும் அன்னியர்களாகக் கருதப்பட்டு வருடா வருடம் ரூபாய் ஐம்பது கட்ட வேண்டுமென்பது தாங்க முடியாத பளுவாக இருக்கிறது. பிரஜா உரிமைக்கு மனுச் செய்து கொண்டிருப்பவர்களுக்கு மனுவின் முடிவு தெரியும் வரையில் விலக்கு அளிக்கப்பட வேண்டும்.

பர்மாவில் வாழும் இந்தியரில் பெரும்பாலோர் தமிழர்கள். அதிலும் கூலி வேலை பார்ப்பவர்களும் நடுத்தர வகுப்பினரும்தான் அதிகம். அன்றாட வாழ்க்கைக்கே அல்லல் படுபவர்கள். நமது சென்னை மாகாண அரசாங்கத்தார் வழக்கம்போல் 'பார்க்கலாம், யோசிக்கலாம்' என்று சொல்லாமல் மத்திய அரசாங்கத்தாருடன் ஆவன செய்யுமாறு மிகவும் வேண்டிக் கொள்ளுகிறோம். மத்திய சர்க்காரும் கடல் கடந்து வாழும் இந்தியர்களின் கஷ்ட நஷ்டங்களையும் கவனிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

பர்மா
10—9—57 "சேது" டாங்கே

நாட்டு வைத்தியம்

பாரதத்தின் பெருமையை விளக்கும் நாட்டு வைத்தியம் மேனாட்டு வைத்தியத்தினால் அழிந்துபோய் விடுமோ என்ற பயம் இருந்து வந்தது. அந்த பயம் இப்போது நீங்கி விட்டது. இந்திய வைத்திய ஆஸ்பத்திரியில் உபயோகத்திலிருந்து வந்த மருந்துகளின் எண்ணிக்கையைப் பெரிதும் குறைத்துச் சிகிச்சை யளிப்பதற்கு இடையூறு விளைவித்து வந்த ஓர் இடைக்கால உத்தரவை மாற்றி, முன்னாளில் வழக்கிலிருந்த மருந்துகளில் பலவற்றையும் மறுபடியும் கையாளும் வாய்ப்பை யளிக்கும் புதியதொரு உத்தரவு பிறந்துள்ள நற்செய்தியைப் பெருமையுடன் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். மேலும், நோயாளிகளைத் திறம்படச் சிகிச்சை செய்து வியாதியை அறவே நீக்குவதற்கு அவசியமான மருந்தையோ மருந்துகளையோ அவ்வப்போது நிச்சயிக்கும் செல்வாக்கை அங்குள்ள இந்திய வைத்தியர்களுக்கு இந்த உத்தரவு அளித்திருப்பது சகல தடைகளையும் தகர்த்ததற்கு ஒப்பாகுமென்று சொல்வதில் மிகை ஏதுமில்லை.

நாட்டு வைத்திய சாஸ்திரங்களின் போதனா முறைகளிலும் நேர்மையான அளவுக்கு மாற்றங்களும் இதைத் தொடர்ந்து ஏற்படலாமென்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது.

இணைப்பு வைத்தியத்தில், இந்திய வைத்திய சாஸ்திரங்களின் குறையைப் பூர்த்தி செய்யும் அளவுக்குத்தான் மேனாட்டு வைத்திய சாஸ்திரங்களின் பாகத்தைச் சேர்க்க வேண்டுமே யன்றி, மேனாட்டு வைத்திய சாஸ்திரங்கள் ஏற்க விரும்பிடும் அற்ப அளவுக்கு மட்டும் இந்திய வைத்தியங்களை இவ்விணைப்பு முறையில் சேர்த்திடல் முறையல்ல. குழம்புக்கு உப்பு தேவைதான். இந்திய வைத்தியத்துக்கும் ஓரளவு மேனாட்டு வைத்தியத்தின் இணைப்பு தேவைதான். ஆனால் இவ் விணைப்பு விஷயத்தில் குழம்புக்கு உப்பு என்பதை மறந்து 'உப்புக்குக் குழம்பு வைத்தல்' என்ற விபரீதமான முறையை உவந்து ஏற்க முடியாதல்லவா!

சென்னை
24—8—57 பண்டிட் முஹம்மது

பரிதாப நிலை

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் தொழிலானது தேசிய மயமாக்கப்பட்டுச் சுமார் ஒன்றரை வருஷ காலமாகியும் அரசாங்கத்தார் எதிர்

அருள்வாக்கு

எவ்வளவோ பாபம் பண்ணி இந்த ஜன்மாவை அடைந்து கஷ்டப்படுகிறோம். இந்தப் பாபங்களைப் போக்கப் புண்ணியம் பண்ண வேண்டும். பாபங்களையெல்லாம் கரைத்துவிடத் தீர்க்கமான தர்மங்களைப் பண்ண வேண்டும். அந்தத் தர்மங்களை இந்த உடம்பு இருக்கும்பொழுது செய்ய வேண்டும். ஆகையால் உடம்பை ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேண்டும். அதனால்தான் ரிஷிகள் அதற்கு உபயோகப்படும்படி ஆயுர்வேத சாஸ்திரங்களைச் செய்திருக்கிறார்கள். ஆயுர்வேதத்தில் நாஸ்திகனுக்கு வைத்தியம் செய்யாதே என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாஸ்திகன் பாபத்தை அதிகமாகச் செய்து கொண்டேயிருக்கிறான். அவனுக்கு ஆயுள் எவ்வளவு தீர்க்கமாக இருக்கிறதோ, அவ்வளவு பாபத்தையும் சம்பாதித்துக் கொள்கிறான். எவ்வளவு சீக்கிரம் அவன் இறந்து போகிறானோ அவ்வளவுக்குப் பாபத்திலிருந்தும் அவன் தப்பித்துக் கொள்கிறான். நாஸ்திகனுக்குத் தீர்க்காயுள் வேண்டியதில்லை; வைத்தியமும் வேண்டியதில்லை.

ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்

பார்த்த அளவுக்கு அந்தத் தொழிலில் அபிவிருத்தி ஏற்படவில்லை. காரணங்கள் அதற்குப் பல உண்டு. ஆனால் முக்கிய காரணம் அரசாங்கத்தார் இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டுகளைச் சரியானபடி நடத்தாததுதான். இந்தத் தொழிலுக்கு முதுகெலும்பே போன்றவர்கள் இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டுகள்.

இன்ஷ்யூரன்ஸ் சட்டமானது லோக் சபையில் நிறைவேற்றப்பட்ட சமயத்தில் நிதி மந்திரியாக இருந்த திரு தேஷ்முக் அவர்கள் இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டுகளின் நிலைமை இனி சரியானபடி பாதுகாக்கப்படுவதுடன் நல்ல முறையில் சீர்திருத்தமும் செய்யப்படுமென்று உறுதியளித்தார். ஆனால் நடைமுறையில் இன்று நடப்பது அதற்கு முற்றிலும் நேர்மாறானதாக இருக்கிறது. ஏஜண்டுகளின் நிலைமை படுமோசம் அடைந்திருக்கிறது. அதுபற்றி இத் தொழிலில் ஈடுபட்டு வந்த பழைய ஏஜண்டுகள் பலர் மனம் உடைந்து இத்தொழிலில் ஈடுபடுவதை நிறுத்திக் கொண்டனர். அப்படி ஈடுபடும் ஓர் சிலரும் உத்சாகம் குன்றி ஏதோ கடனுக்கு வேலை புரிந்து வருகின்றனர்.

ஏஜண்ட்களின் குறைகள் சம்பந்தமாக இரண்டு விண்ணப்பங்கள் மத்திய அரசாங்க நிதி மந்திரி அவர்களுக்கும் இதர சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிப் பல மாதங்களாகியும் நாளதுவரையில் அவை வந்து சேர்ந்ததற்குக்கூட யாதொரு தகவலும் கிடையாது. அப்படியிருக்க அக்குறைகளை நிவர்த்திக்க அரசாங்கத்தார் தக்க நடவடிக்கைகள் எடுப்பார்களென்று எப்படி எதிர்பார்க்க முடியும்? 'கொட்டினால் தேள். கொட்டாமல் போனால் பிள்ளைப் பூச்சி' என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது.

அரசாங்கத்தாரின் இந்த அலட்சிய நடவடிக்கை எங்கு கொண்டு செல்லுமென்று கணிக்க முடியவில்லை. தற்சமயம் நாட்டில் நடமாடி வரும் தொத்துநோயான வேலை நிறுத்தம் இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்ட்களையும் பிடித்து அவர்களையும் வேலை நிறுத்தம் செய்ய வைத்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சேலம் ஈ. எஸ். பாலசுப்ரமணியம்
2—9—57 தலைவர், இ. ஏ. சங்கம், சேலம்

வேலையை இழந்த ஆசிரியர்

வட ஆற்காடு ஜில்லா போர்டில் திட்டக் கமிஷன் கீழ் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க எஸ். எஸ். எல். ஸி. பூர்த்தி செய்து வேலையில்லாதவர்களை ஓராசிரியர்களாக நியமித்தார்கள். என்னை முதன்முதலாக 1956ம் வருஷம் மார்ச்சு மாதம் வேலைக்கு நியமித்தனர். அதே வருடம் எங்களுக்கு நாலு வார குறுகிய காலப் பயிற்சி என்று போளூரில் போட்டனர். நானும் அந்தப் பயிற்சியை முடித்தேன். பின் நான் வேலை செய்த இடம் 'ஆதாரக் கல்விப் பிரதேசம்' ஆகிவிட்டபடியால் என்னைச் செப்டம்பர் மாதம் வேலையிலிருந்து நீக்கிவிட்டனர். நான் பலமுறை ஜில்லா போர்டில் போய்க் கேட்டதற்கு இணங்க என்னை மறுபடியும் நவம்பர் மாதம் வேறு ஒரு ஊருக்குப் போய் வேலை செய்யுமாறு உத்தரவு வந்தது. நானும் அங்கு சென்று வேலைசெய்து கொண்டிருந்தேன்.

திடீரென்று 1957-ம் வருடம் ஏப்ரல் மாதம் நான் வேலை செய்த இடத்தில் ஒரு பயிற்சி பெற்ற ஆசிரியரைப் போட்டு என்னை நீக்கி விட்டனர். உடனே ஜில்லா போர்டில் போய்க் கேட்டதற்கு, "லீவு நாட்களில் சம்பளம் கொடுக்க வேண்டும். அதற்காக இம்மாதிரி செய்துள்ளோம். லீவுக்குப் பிறகு அதே இடத்தில் உத்தரவு போடுவோம்" என்று சொன்னார்கள். ஆனால் இன்றுவரையிலும் உத்தரவு வரவில்லை.

உபாத்தியாயர் பயிற்சிக்காக மனுப் போட்டேன். ஒன்றரை வருடத்துக்குமேல் பள்ளிக்கூட அனுபவம் இல்லாததால் எடுக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள்.

ஜில்லா போர்டுக்குச் சென்று நான் பதினேழு தடவைகள் கேட்டேன். காலி இருந்தால் போடுவதாகச் சொன்னார்கள். பிறகு "பயிற்சியற்ற உபாத்தியாயரை நியமிக்கக் கூடாது என்று சர்க்கார் உத்தரவு வந்துள்ளது. ஆகையால் உனக்கு வேலையில்லை" என்று சொல்லி விட்டனர். ஒன்றரை வருடம் வேலை செய்து தற்பொழுது வேலையில்லாமல் சும்மா இருக்கிறேன். ஆகையால், சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகள் உடனே இவ்விஷயத்தில் தலையிட்டு எங்களுக்கு வாழ்வு அளிக்குமாறு மிக்க தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

வட ஆற்காடு பாதிக்கப்பட்ட ஆசிரியர்
7—9—57

கேட்டு மகிழுங்கள்

இனிக்கும் இசை

ஒவவொரு சனிக்கிழமையும்
மாலை 6-30 முதல் 7 மணி வரை

ரேடியோ ஸிலோன் (41 மீட்டரில்)

தென்னிந்திய சர்வீஸ் தமிழ் நிகழ்ச்சி

ஓ. கே. பிராடக்டுகள்
தயாரிப்பவர்கள் அளிப்பது

ஒவ்வொரு சனிக்கிழமை மாலையும் 6–30 மணி முதல் 7 மணி வரை 'ரேடியோ ஸிலோனை'க் கேளுங்கள். ஓ. கே. பிராடக்ட்ஸ் "இனிக்கும் இசை" நிகழ்ச்சியில் உங்களுக்குப் பிடித்தமான சினிமாப் பாடல்களைக் கேட்டு மகிழுங்கள்.

நீங்கள் ஒரு பரிசுகூடப் பெறலாம்!

விபரங்களறிய இந்தச் சனிக்கிழமை "இனிக்கும் இசை" நிகழ்ச்சியை அவசியம் கேளுங்கள்.

CUT HERE:

INIKKUM ISAI

POPULARITY POLL · ENTRY FORM

Heard every Saturday 6-30—7 p. m.

Col. One	Col. Two	Col. Three.
1		
2		
3		
4		
5		
6		
7		

How to fill this form:

Column 1. Gives the order of the songs as played.
Column 2. Write the title of the song here.
Column 3. Indicate the order of your preference numerically in this column.

Sender's Name: Mr/Mrs/Miss ______________________

Full address ______________________

____

Address your entries to:

'INIKKUM ISAI', P. B. No. 146, MADRAS-1.

"This is a Radio Ceylon Popularity Poll Contest to determine the most popular discs of the week."

CUT HERE:

இலக்கியச் செல்வம்-43



சோம்பல் சித்தாந்தம்

பேராசிரியர்: அ. சீநிவாச ராகவன்

தானாக முதிர்ந்து சருகாகி உதிரும் இலை, தானாய்ப் பழுத்து விழுந்து மறையும் பழம், ஒரு கவலையும் இல்லாமல் மண்ணிலே வேரூன்றி மலர்ந்து, மணத்தைப் பரப்பி, பின்னர் வாடி மாய்கின்ற மலர்-இவை மூன்றிலும் உண்மை ஒன்று பளிச்சிடுவதாக, துயிற்கனி அருந்திய கிரேக்க வீரர்களுக்குத் தென்படுகிறது. இயற்கையிலே உள்ள பொருள்கள் அத்தனையும், எவ்விதமான உழைப்பையும் மேற்கொள்ளாமல், ஓய்வில் அழுந்தித் தம் காலத்தைக் கழிக்கின்றன என்பது தான் அவர்கள் காணும் முடிவு. இது ஏற்றுக் கொள்ளக் கூடியதா? இல்லை என்று நீங்களும் நானும் நினைக்கலாம். ஆனால், கடலிலும் புயலிலும் அடிபட்டு, அலுத்துச் சலித்து, பிறகு துயிற்கனியின் போதையில் மயங்கிக் கிடக்கும் கிரேக்க வீரர்களுக்கு, உலகம் முழுவதுமே சோம்பல் மடமாகக் காட்சி அளிக்கிறது. இதில் வியப்பில்லை. பெரும்பாலோருக்கு உண்மை என்பது உள்ளத்தின் நிழல்தான். தம்முடைய விருப்பு வெறுப்பையும், உணர்ச்சியையும் ஒதுக்கி வைத்து விட்டு, உண்மை எது என்று காணச் செல்கின்றவர் எத்தனை பேர்? கண்டு, அதன்படி தமது மனத்தை அடக்க முற்படுகின்றவர் எத்தனைபேர்? விரல்விட்டு எண்ணி விடலாம். பெரும்பாலும், மனிதனுடைய மனநிலை, தனக்குச் சார்பான செய்திகளை, வெளி உலகத்திலிருந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறது: அந்தச் செய்திகள் மட்டுமே உண்மை என்று நம்பி, அவற்றால் பின்னிய சித்தாந்தம் ஒன்றை, தன்னைச் சுற்றிச் சிலந்தி வலையைப் போல், அமைத்துக் கொள்கிறது. சித்தாந்தம் மனத்தை ஆட்கொண்டு அதைத் திருத்துவதற்கு மாறாக, மன நிலையே சித்தாந்தமாக விரிகிறது. இதைத்தான் துயிற்கனி அருந்திய கிரேக்க வீரர்களிடம் காண்கிறோம். அவர்கள் மன நிலை என்ன? அவர்களே சொல்லுகிறார்கள், கேட்போம். பாட்டு வருகிறதே என்று தயங்க வேண்டாம், வசனத்தைவிட எளிமையானது, படியுங்கள்:

கறுப்புக் கடல் மேல் கவியும் கார்வானத்தை
உறுத்து உறுத்துப் பார்த்தே நம் உள்ளம்
கசந்ததடா!
காணக் கசக்குதடா, கண் பூத்துப் போச்சுதடா!
வாழ்நாள் முடிவில் வருவதும் சாவானால்
ஏனோ பொழுதெல்லாம் எய்த்து உழைத்து
வீழ்கின்றோம்?
ஆனபடி ஆகட்டும், விட்டுவிடு. காலவெள்ளம்
பாய்ந்து இழுத்துச் செல்லும் சுழலிலே
ஓர் நொடியில்
வாயடைத்துப் போவோம். அவ்வளவே.
செத்திடுவோம்.
என்றும் உலையாமல் இருக்கும் பொருள் இல்லை.
ஒன்றும் நிலை இல்லை உற்றது எதுவும் இல்லை.
எல்லாப் பொருளும் பறிபோய் நமைவிட்டுப்
பொல்லாப் பழங்காலப் பாழில் புதைந்திடுமால்
விட்டுவிடு. வீணாகத் தீமையுடன் போராடிக்
கிட்டும் பயன் என்ன? கீறிக் கருங்கடலை
ஏறும் திரைமேலே ஏறுவதில் இன்பமென்ன?

இந்த மன நிலையில்-சோர்வும், சலிப்பும் கலந்த இந்த நிலையில்-எல்லாப்

பொருளும் ஓய்வில் அழுந்திக் கிடப்பதாக, கிரேக்கவீரர்கள் எண்ணுகிறார்கள்:

ஆழியே ஓய்வில் அழுந்தும் பொருள்யாவும்
கூடி அமைதி குலையாமல் வாழ்ந்திருந்து
நாடியே சாவைத் தம் நாவும் அசைக்காமல்
ஓடி உலையாமல் ஓய்வு கலையாமல்
வாடி முதிர்ந்தேபின் வாழ்வு முடித்திடுமாம்.

' ஆகவே, நாமும் அப்படி வாழ்வதே விவேகம்' என்ற முடிவுக்கு வருகிறார்கள். 'ஒன்று, உழைப்பில்லாமல் கனவிலே தோய்ந்து காலம் கழிக்க வேண்டும். இல்லை என்றால், சாவை வரவேற்றுத் தழுவ வேண்டும். பகற் கனவு, இல்லா விட்டால் சாவு, இரண்டில் ஒன்று, இதுவே நமது இலட்சியம்' என்று அறுதி இடுகிறார்கள்.

பிறகு, பிறகென்ன, பகற்கனவில் விளையும் இன்பத்தைப் பற்றிய பரவசப் பேச்சுத்தான்! அரைத் தூக்கத்தில் ஆழும் அந்த அற்புத அமர நிலைக்குக் கட்டியம் பாடுவதுதான்!

செருகும் விழியைச் சொருசாய் இமைதழுவ,
அருவி ஒலி காதில் அமர்ந்து கிளுகிளுக்க,
பாதிவிழி மூடிப் பகற்கனவின் போதையிலே
நிதமாய் எப்போதும் நீந்துவதே இன்பமடா!
குன்றின் குடுமியிலே குத்துச் செடியின்மேல்
நின்று மயங்கி அதை நீங்காத பொன்
ஞெவி போல்
ஓங்கும் கனவில் உறைந்து பெறுகின்ற
பாங்கிற்கு இணையாம்ப் பாரிலே இன்பம் எது?
மென்குரலில் பேசி அந்தமென்மை செவியேந்தி
ஒன்றுமே செய்யாமல் ஓய்ந்து துயிற்கனியை
நாளும் அருந்தி, கரைமேல் தவிர் அலைகள்
நிலத் திரிந்து, சிலிர்த்து, நுரை தூவி,
வாங்குவென் கோல நவினம் வரைகுவதை
சங்கிருந்தே கண்டு, உணர்வு முழுவதையும்,
தேயாமல், சற்றும் தவராமல், எல்லையிலா
ஓய்வு வெளியில் உலவ வகை செய்து,
சும்மா இருக்கும் சுகத்தில் அழுந்திவிட்டால்,
அம்மா, அருமையடா, ஆருத இன்பமடா!

இந்த 'ஆருத இன்ப' நிலையில், பழைய நினைவுகள் பனிப் படலம் போல மெல்ல வருகின்றன. 'நம்மோடு இளமைப் பருவத்தில் வாழ்ந்த உற்றார், உறவினர், நண்பர், எத்தனையோ பேர் இன்று மறைந்து விட்டார்கள், பிடி சாம்பராகி, குடத்தில் அடைந்து, மயான மேடு ஏறிவிட்டார்கள்.* அதனால் என்ன? அவர்களை எண்ணுவதற்குத்தான். எண்ணி எண்ணிப் பழங்காலத்தை நெஞ்சில் புதுப்பிக்கத்தான், நாள் முழுதும் நீண்டு கிடக்கிறதே, வாழ்நாள் முழுதும் காத்துக் கிடக்கிறதே!'

என்றோ இளமையிலே எம்மோடு இருந்தவரும்
பொன்றி இரண்டுபிடி சாம்பராய்ப்
போய் விட்டார்.
சாம்பராய் இன்று சிந்து குடமேறிக்
கூம்புபுல் மேட்டுக் குரட்டுள் உறங்குகிறார்.
ஆனாலும் இன்று அவரை எண்ணி அகத்தினிலே,
போன அந்த வாழ்வைப் புதிப்பித்து
உயிர் பெய்து,
வாழலாம்; வாழ்ந்து வரையில் நெடுநினைவில்
ஆழலாம்; ஆழ்ந்தால் அதுவே பேரின்பமடா!

பழைய நினைவு என்னும் பாதையில், துயிற் கனி உண்ட கிரேக்க வீரர்களின் மனம் இப்பொழுது நடந்து செல்லத் தொடங்குகிறது. (தொடரும்)

*இறந்தவர் உடலை எரித்துச் சாம்பராக்கி, அந்தச் சாம்பரை வண்ணச் சிறு குடத்தில் இட்டுப் புதைப்பது பண்டைக் கிரேக்கர் வழக்கம்.

"கல்கி" அக்டோபர் மாதச் சிறுகதைப் போட்டி

பரிசு ரூபாய் நூறு

மாதந்தோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் எழுத்தாளர்கள் எல்லோரும் கலந்து கொள்ளலாம். எழுத்தாளர்கள் சொந்தமாகவே கதைகள் புனைந்து அனுப்ப வேண்டும். போட்டிக்கு ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். கதைகள் "கல்கி"யில் ஆறு பக்கத்திலிருந்து எட்டு பக்கத்துக்குள் இருக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதப் போட்டிக்கு வந்த கதைகளில் சிறந்ததற்கு நூறு ரூபாய் பரிசு வழங்கப்படும்.

முந்திய மாதப் பரிசுக் கதை அடுத்த மாத மூன்றாவது வாரத்தில் வெளியாகும். பிரசுரத்துக்குத் தகுதியுள்ள மற்றக் கதைகளும் "கல்கி"யில் பிரசுரமாகும். கதைகள் அந்தந்த மாதம் 20-ம் தேதிக்குள் "கல்கி" காரியாலயத்துக்கு வந்துவிட வேண்டும்.

கதைகளைத் திரும்பப்பெற விரும்பும் எழுத்தாளர்கள் கதைகளுடன் போதிய தபால்தலைகள் வைத்து அனுப்பவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

தேர்ந்தெடுத்த கதைகளைத் திருத்துவதற்கும், குறைத்து வெளியிடுவதற்கும் ஆசிரியருக்குப் பூரண உரிமை உண்டு



கீழே குறிப்பிட்டுள்ள நபர்களை விசாரிக்கவும் :-

(1) கனிலால் சந்தன்மால் (2) நிலிப்குமார் ராமன்லால்
(3) மிஸ்ரீமால் அசோக்குமார் (4) கேசவலால் ஸ்ரீதரலால்
(5) காந்திலால் லாக்பாய், மஸ்கட்டி மார்க்கெட் ஆமதாபாத்

மலைநாட்டின்



பினங்குத் துறைமுகத்தின் கரை தெரிந்து விட்டது ; இன்னும் சற்று நேரத்தில் மலை நாட்டின் தலைவாசலில் அடியெடுத்து வைக்கப் போகிறோம் என்று எங்களுக்கு எவ்வளவோ குதூகலமாக இருந்தது. மலேயாவை 'மலை நாடு' என்றுதான் பழகு தமிழில் அழகாக அழைக்கின்றனர், அங்கு வாழும் தமிழ்ப் பெரு மக்கள். மலைவளமும் கனி வளமும் செறிந்த மலேயாவுக்கு இந்தப் பெயர் எவ் வளவு பொருத்தமாக இருக்கிறது !

கரையிலிருந்து சுமார் ஒரு மைல் தொலை வில் கப்பல் நிறுத்தப்பட்டது. கரை என்னும் காதலியை அணையச் செல்லும் கப்பல் என்னும் அருமை மாப்பிள்ளையை எதிர் கொண்டு அழைக்க வரும் மாமனாரைப் போல மாலை ஆறரை மணிக்கு ஒரு விசைப் படகிலே வந்து சேர்ந்தார் 'பைலட்' ஒருவர்.

கப்பலின்' பொறுப்பைக் காப்டனிட மிருந்து பெற்றுக் கொண்டார் பைலட். பினங்குத் துறைமுகத்தை விட்டுப் புறப் பட்டுச் செல்லும் வரை கப்பல் இந்தப் 'பைலட்'டின் பொறுப்பிலேதான் இருக் கும் என்றும் தெரிய வந்தது.

பைலட் வந்து வெகு நேரம் ஆகியும் கப்பல் நின்ற இடத்திலிருந்து புறப்படவில்லை. இது கப்பலிலிருந்த பிரயாணிகளின் பொறுமை யைச் சோதிப்பதாக இருந்தது.

" கைகாட்டி இறங்கவில்லையா ? துறை முகத்தில் கப்பல் நிற்பதற்கு உரிய இடம் காலியாக இல்லையா ?" என்றெல்லாம் ஐய ங்களுக்கள் பிரயாணிகளின் உள்ளத்தில் எழுந்தன. பின்னர் வந்த செய்தி எல்லாருக் கும் ஏமாற்றத்தைத் தந்தது. கப்பல் மறு நாள் காலையிலேதான் துறைமுகத்தை அணை யும் என்பதுதான் அந்தச் செய்தி.

கரை தெரிந்தபிறகும் அதைப் பார்த்துக் கொண்டே ஓர் இரவு முழுவதும் கப்பலிலே அடைபட்டுக் கிடப்பதா ? சலிப்பிலே தோன் றிய இந்தக் கேள்வியினால் ஐந்து நாட்கள் கப்பல் பயணம் செய்த அலுப்பைவிட அதிக மானபாரம் எங்கள் நெஞ்சத்தை அழுத்தியது.

" பொறுத்தது பொறுத்தீர் ! பொழுது விடியும் வரை பொறுக்கக் கூடாதா ?" என்று எங்கள் பொறுமையின்மையைக் கேலி செய்வது போல் காரிருளைக் கிழித்துக் கொண்டு கண் சிமிட்டியது மின்னல் ! கை கொட்டிச் சிரிப்பது போல் முழங்கியது இடி யோசை ! தூரத்தில் தீவுக்குள் மழை பொழி வதை உணர்த்தியது ஈர வாடை !

இருளுக்குச் சவால் விடுவது போல் எண் ணற்ற மின்விளக்கு வரிசைகள் சற்றுத் தொலைவிலே குறுக்கும் நெடுக்குமாக நகர்ந்து சென்ற கோலாகலக் காட்சியைக் கண்டோம்.



தலைவாசல்

டி. கே. சண்முகம் - புத்தனேரி சுப்பிரமணியம்

பெரிய பெரிய நீராவிப் படகுகளிலே பொருத்தி இருந்த ஒளி விளக்குகளின் காட்சியே அது என்பதை உணர்ந்து கொண்டோம். பினாங்குத் தீவையும் மலேயா பெரும் பகுதியையும் இணைக்கும் போக்குவரவு சாதனங்களாக விளங்குபவை எண்ணற்ற இந்த நீராவி இயந்திரப் படகுகள்.

பினாங்குத் துறைக்கு அக்கரையில் உள்ள படகுத் துறைக்கு "மிக்கேல் பியர்" என்ற பெயர். பட்டர்வொர்த் என்ற இடத்திலே இந்தப் படகுத் துறை உள்ளது. இதற்குக் "கோலப் பிறை" என்ற அழகான பெயரைச் சூட்டியுள்ளனர் தமிழ் மக்கள்.

இருட்டுக்கும் எழிலூட்டிய பகட்டான காட்சிகளைக் கண்ட வண்ணம் அதைப் பற்றிப் பேசிக் கொண்டே இராப் பொழுதைக் கழித்தோம்.

மறுநாள்; ஏப்ரல் இருபதாம் தேதி பொழுது விடிந்ததும் பினாங்குத் தீவின் வனப்பு பளிச்சென்று தெரிந்தது. துறைமுகத்துக்கும் கோலப் பிறைக்கும் இடையில் இயந்திரப் படகுகளின் நடமாட்டமும், துறைமுக எல்லைக்குள் காத்து நின்ற பலசரக்குக் கப்பல்களின் காட்சியும் அற்புதமாக இருந்தன. இயந்திரப் படகுகள் பிரயாணிகளை மட்டுமன்றிப் பெரிய பெரிய கார்களையும் லாரிகளையுங்கூட ஏற்றிச் செல்லும் அருமையைக் கண்டு வியந்தோம்.

காலை எட்டரை மணிக்கு, போலீஸ் அதிகாரிகளும், சுகாதார அதிகாரிகளும் விசைப் படகுகளில் வந்து கப்பலில் ஏறினார்கள். பிரயாணிகளின் பாஸ்போர்ட், சுகாதார நற்சான்று இதழ் முதலியவற்றை அதிகாரிகள் பார்வையிட்டு முத்திரை பொறித்தனர். உயர்வகுப்புப் பிரயாணிகளுக்கு இந்தப் பரிசீலனை பொழுது போக்கு மண்டபத்தில் நடைபெற்றது. டெக் பிரயாணிகள் சம்பந்தமான பரிசீலனை, கப்பலின் மருத்துவ சாலைக்கு அருகாமையில் நிகழ்ந்தது.

பினாங்குத் துறையில் கப்பல் சுமார் பன்னிரண்டு மணி நேரத்துக்குமேல் தங்கக் கூடும் என்று தெரிந்தது. எனவே, நகருக்குச் சென்று தமிழர் பிரதிநிதித்துவ சபையின் வரவேற்பை ஏற்றுக் கொள்வதென்று முடிவு செய்திருந்தோம். நகருக்குள் செல்லும்போது பொது உடையை அணிந்து கொள்ளவும் எண்ணியிருந்தோம்.


துணிகளைச் சலவை செய்து தரும் வசதி கப்பலிலே இருந்தது. எனவே, பயணத்தின் போது சேர்ந்த அழுக்குத் துணிகளைச் சலவைக்குப் போட்டு வாங்கினோம். சலவைக் கட்டணம் உருப்படி ஒன்றுக்கு நாலணா. சலவை செய்யப்பட்ட எங்கள் கோட்டுகள் சிலவற்றில் சாயம் வெளுத்துப் போகவில்லை; கறுத்துத்தான் போயிற்று! கோட்டுகளின் முன்பக்கத்தில் கருமேகச் சுருள் போன்ற கறைகள் அழுத்தமாகப் படிந்திருந்தன! 'பெட்ரோல்' சலவையா? அல்லது 'குருட் ஆயில்' சலவையா? என்று எங்களுக்கு ஒரே ஆத்திரமாக இருந்தது!


கோட்டுகளுக்கு நேர்ந்த விபத்தின் விவரத்தைக் கப்பலின் 'பர்ஸர்' என்று அழைக்கப்படும் பொருளாளரிடம் காண்பித்தோம். கறைக்குக் காரணமான பணியாளரை அவரும் விசாரணை செய்தார். நாங்கள் புறப்படும் போது சென்னையில் எங்களுக்குச் சூட்டப் பட்ட ரோஜாப் பூ மாலைகளின் கறைகளே அவை யென்று பணியாளர் விளக்கம் தந்தார். மீண்டும் வெளுத்தாலும் கறை இலேசிலே போகாது என்றும் தெரிந்தது. அன்புமாலைகளின் அழியாச் சின்னம்











களாக அந்தக் கறைகள் படிந்து விட்டன என்று ஆறுதல் அடைய வேண்டியதாயிற்று. ஆனால் கறைகள் படிந்த கோட்டுகளை மீண்டும் பயன்படுத்த முடியாத நிலைமையைத் தவிர்க்க முடியவில்லை. எனவே பொது உடை அணிந்து கொள்வதிலிருந்து எங்கள் குழுவினரில் சிலருக்கு விதிவிலக்குக் கிடைத்தது.

பகல் சரியாக ஒரு மணிக்கு எங்கள் கப்பல் பினாங்குத் துறைமுகப் பாலத்தை அணுகி அணைத்துக் கொண்டது.

துறைமுகத்தில் திரண்டிருந்த தமிழ்ப் பெருமக்களின் அன்பு முகங்களில் பாச உணர்ச்சி பொங்கித் ததும்பி நின்ற பான்மையைக் கண்டோம். "கலை வாழ்க! கலைஞர்கள் வாழ்க! தமிழ் வாழ்க!" என்றெல்லாம் வாழ்த்தொலிகள் வானதிர முழங்கின. எங்கள் கண்களிலே மகிழ்ச்சிக் கண்ணீர் தேங்கி நின்றது. கைகுவித்து அன்பர்கள் அனைவருக்கும் வணக்கம் செலுத்தினோம். "கடல் கடந்த தமிழர்கள் வாழ்க!" என்று முழங்கி எங்கள் நன்றியைத் தெரிவித்தோம்.

இணைப்புப் பாலம் போடப்பட்டதும் தமிழர் பிரதிநிதித்துவ சபை, தமிழ் இளைஞர் மணிமன்றம் முதலிய நிறுவனங்களைச் சேர்ந்த அன்பர்கள் ஆர்வத்தோடு கப்பலுக்குள் வந்தனர். பொழுதுபோக்கு மண்டபத்தில் எங்கள் கலைக் குழுவினரைக் கண்டு மாலை மரியாதைகள் செய்தனர்.

தமிழர் பிரதிநிதித்துவ சபைத் தலைவர் திரு டி. பி. எஸ். கிருஷ்ணசாமியும் ஏனைய நண்பர்களும் வேண்டிக் கொண்டபடி பிற்பகல் மூன்று மணிக்குக் கப்பலை விட்டு இறங்கிப் பினாங்கு நகரில், அதாவது மலை நாட்டின் தலைவாசலில் அடியெடுத்து வைத்தோம். கப்பல்நாயகரின் இசைவுடன் நகருக்குள் சென்று திரும்பக் கூடிய சலுகை உயர் வகுப்புப் பிரயாணிகளுக்கு இருந்தது.

பேரன்பர்கள் ஏற்பாடு செய்திருந்த 'காடி'களில் முதலில் தண்ணீர் மலைக்குச் சென்று வருவதென்று முடிவாயிற்று. 'காடி' என்றால் என்னவோ ஏதோ என்று நினைக்க வேண்டாம். கார்களைத்தான் காடிகள் என்று சொல்லுகின்றனர் மலை நாட்டு மக்கள்.

சாலையில் செல்லும் போதே நண்பர்களிடம் பினாங்கு நகரைப் பற்றிய சில விவரங்களைத் தெரிந்து கொண்டோம் :

பினாங்குத் தீவு துறைமுக நகரம் என்ற நிலையை எய்தி நூற்றி எழுபது ஆண்டுகளே ஆகின்றன. ஆங்கிலேயர் கிழக்கிந்தியக் கம்பெனியார் என்ற பெயரோடு கீழைநாடுகளில் வாணிபம் செய்து வந்தார்கள் அல்லவா?

அந்தக் காலத்தில் சோழ மண்டலக் கரைக்கும் கெடா (கடாரம்) ராஜ்யத்துக்கும் இடையே வசதியான ஒரு துறைமுகத்தைத் தேடிக் கொண்டிருந்தனர்.

இந்த எண்ணத்தோடு முதன் முதலாகப் பினாங்குத் தீவைக் காணும் வாய்ப்புப் பெற்ற

1. புகழ் பெற்ற "ஸ்ட்ராபரி ஹில்" 2. பினாங்கில் உள்ள போலீஸ் பாரக்ஸ் ரோடு. 3. மகா யுத்தத்தில் உயிர் துறந்த வீரர்களுக்காகப் பினாங்கின் முக்கியப் பகுதியில் எழுப்பியிருக்கும் ஞாபகார்த்த ஸ்தூபி. 4. ச அண்டு ஓ. ஜெட்டியின் தோற்றம்.

வர் காப்டன் பிரான்சிஸ் லைட் என்பவர். கம்பெனிக்குச் சொந்தமான கப்பல் ஒன்றின் காப்டனாக இருந்தார் அவர்.

அவர் நுழைந்த சமயம் இந்தத் தீவு காடு போல் காட்சியளித்தது. பாக்கு வியாபாரத்துக்காகக் குடியேறிய தமிழர்கள் சிலரைத் தீவிலே கண்டார் திரு லைட். அவருக்கு ஒரே வியப்பாக இருந்தது.

"என்ன இது? நான்தான் வியாபார நோக்கோடு முதன் முதலாக இந்தத் தீவைத் தேர்ந்தெடுத்தேன் என்றல்லவா பெருமைப் பட்டேன்! எனக்கு முன்னாலே இந்தத் தமிழர்கள் எப்படி இங்கே குடியேறினார்கள்?" என்று தம்மைத் தாமே கேட்டுக் கொண்டு ஆச்சரியப்பட்டார் திரு லைட்.

தமிழ் நாகரிகத்தின் பெருமை அவருக்கு எப்படித் தெரியும்? தேம்ஸ் நதிக்கரையிலே லண்டன்மாநகரம் உள்ள இடம் காடாக இருந்த காலத்திலேயே தமிழர்களிடம் திருக்குறள் போன்ற இலக்கியங்கள் தோன்றியிருந்தன என்பதை அந்தக் காலத்தில் திரு லைட்டுக்கு வெளிச்சம் கொடுக்க ஆளில்லை!

தமிழ் வர்த்தகர்கள் மட்டுமன்றிச் சீன வணிகர்கள் சிலரும், ஆயிரத்துக்குக் குறைவான மலாய்க்கார மீனவர்களும் தீவிலே வாழ்ந்து வந்தனர். பாக்கு வர்த்தகத்தின் காரணமாகவே இந்தத் தீவுக்குப் பினாங்கு என்ற பெயர் நிலைத்தது. பினாங்கு என்ற சொல்லுக்குப் பாக்கு என்றுதான் பொருள்.

இந்தத் தீவு கெடா ராஜ்யத்தின் சுல்தானுக்குச் சொந்தமாக இருந்தது. இதன் மலை வளமும் வனப்பும் அமைப்பும் திரு பிரான்சிஸ் லைட்டை வெகுவாகக் கவர்ந்தன. எனவே, இதனைத் துறைமுகமாக உருவாக்க எண்ணி, கெடா சுல்தானிடமிருந்து 1786 ஆகஸ்டு 11-ல் வாடகைக்கு அமர்த்திக் கொண்டார் திரு லைட். பினாங்கு ஆங்கிலேயரின் ஆளுகைக்குள் வந்த வரலாறு இது.

உலக வர்த்தகர்களின் கவனத்தை இழுப்பதற்காகத் தீர்வையில்லாத துறைமுகமாகப் பினாங்கு வளர்ச்சி பெறச் செய்தனர் ஆங்கிலேயர். இதன் முதல் கவர்னராகும் பொறுப்பையும் திரு லைட் பெற்றார். 1805-ல் ஒரு தனி மாகாணம் என்ற நிலைமைக்கு முன்னேறியது பினாங்கு. சிங்கப்பூர்த் துறைமுகம் உருவாவதற்கு முப்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பாகவே பினாங்குத் தீவு துறைமுக நகரமாகி விட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

குன்றாத வளம் கொழிக்கும் பினாங்குத் தீவு குணதிசையின் சொர்க்கம் என்று புகழப்படுகிறது. இதன் நிலப்பரப்பு 108 சதுரமைல்: நீளம் பதினைந்து மைல்; அகலம் எட்டு மைல். இங்கு இப்போது வாழும் மக்களின் எண்ணிக்கை சுமார் இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம். இவர்களில் பாதிக்குமேல் சீனர்கள். அடுத்தபடியாக, அதிக எண்ணிக்கையுள்ள



1. கண்கவரும் கற்பகத் தோட்டம். 2. துறைமுகத்தை ஒட்டியுள்ள வியாபாரத் துறை. 3. கலங்கரை விளக்கம். 4. எப். எம். எஸ். ரயில்வேத் துறை.

வர்கள் மலாய்க்காரர்கள். மொத்த ஜனத் தொகையில் பதின்மூன்று சத விகிதம் இந்தியர்கள் இங்கே வாழ்கின்றனர்.

பொதுவான இந்த விவரங்களை மட்டும் தெரிந்து கொண்டு தண்ணீர் மலையை அடைந்தோம். பினாங்கின் சிறப்புக்குரிய மற்ற அம்சங்களை யெல்லாம் எங்கள் குழு பினாங்கில் முகாம் இடும் சமயம் நன்றாகக் கண்டறிந்து கொள்ளலாம் என்று எண்ணித் தண்ணீர் மலையை மட்டும் கண்டு திரும்ப முடிவு செய்திருந்தோம்.

மலைக்குச் சென்ற சாலையின் அழகும் அதன் இருமருங்கிலும் பச்சைப் பசேலென்று காட்சியளித்த இயற்கை எழிலும் இதயத்துக்கு எழுச்சி தந்தன. ஓங்கி உயர்ந்த மலைகள் சூழ்ந்து வட்டவடிவமான பூந்தோட்டமாகக் காட்சியளித்தது தண்ணீர்மலை.

நகருக்குக் குடி தண்ணீர் வசதியளிக்கும் நிலையம் இந்த மலைப் பூங்காவிலேதான் உள்ளது. அதனால்தான் இதனைத் 'தண்ணீர் மலை' என்று அழைக்கின்றனர்.

கண்ணுக்குக் குளுமையாகவும் கருத்துக்கு விருந்தாகவும் அமைந்த தண்ணீர் மலைப் பூங்கா நகர மக்களுக்கு உல்லாசச் சோலையாகப் பயன்படுவதில் வியப்பில்லையே!

எங்கள் குழுவின் பினாங்கு முகாமின்போது இந்த மலைக்கு வந்திருந்த சமயம் உள்ளத்தில் தோன்றிய பின்வரும் பாடல் தண்ணீர் மலையின் சிறப்பை உணர்த்தும் :—

"வாடிடத் தெரியா மரங்களைக் காக்கும்
மதிலென நிமிர்ந்தன மலைகள் :

மூடிடத் தெரியா மேகமுங் கிழிந்து
முழு நிலா வெளிவரக் கண்டோம் ;

கூடிடின் தெரியாதென்றுமே கொஞ்சிக்
குலாவிடக் காதலர் வந்த

காடிகள் கூடும் பினாங்குநீர் மலையில்
காரிருள் கந்றிய தம்மா!"

[காடிகள்—கார்கள்]

ஆமாம்; தண்ணீர் மலையில் உள்ள மரங்களுக்கு வாடலே தெரியவில்லை! எப்போதும் பசுமையாகவே இலங்குகின்றன!

மலையிலிருந்து நகருக்கு வழங்கப்படும் தண்ணீரின் சுவைக்குப் பணியாத நாவே இல்லையென்று சொல்லலாம். தண்ணீரா? இளநீரா? என்று ஐயுறும் வண்ணம் சுவை தருகிறது. நமது கோவை மாவட்டத்தில் கிடைக்கும் சிறுவாணி நீரைவிடச் சுவையாக இருக்கிறது. பினாங்கிலே வழங்கப்படும் தண்ணீர் என்று சொல்வது மிகையாகாது.

தண்ணீர் மலையிலிருந்து நேராக 'ஈஸ்டர்ன் அண்டு ஓரியண்டல் ஹோட்டல்' என்ற விடுதிக்கு அழைத்து வரப்பட்டோம். மேல் நாட்டு முறையிலே அமைந்த அந்த ஒய்யாரமான மண்டபம் உள்ளது. கடலை நோக்கிக் காட்சி தரும் அந்த மண்டபத்திலேதான் எங்கள் குழுவினருக்கு வரவேற்புத் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

ஆண் பெண் அடங்கலாகச் சுமார் அறுநூறு அன்பர்கள் அந்த விருந்திலே கலந்து கொண்டதாகக் கூறினார்கள். தமிழர்கள் பிரதிநிதித்துவ சபையின் சார்பிலும், தமிழ் இளைஞர் மணிமன்றத்தின் சார்பிலும், எங்களுக்கு மலர் மாலைகள் சூட்டப்பட்டன.

சபைத் தலைவர் திரு டி. பி. எஸ். கிருஷ்ணசாமி நாடகக் குழுவினரையும், விருந்தினரையும் அகம் குளிர வரவேற்றுப் பேசினார்.

"தென்னபராக்கிரம மும்முடிச் சோழனை இராஜ ராஜ சோழனே தம் பரிவாரங்களுடன் மலை நாட்டுக்கு வருகை தந்துள்ளது போன்ற உணர்ச்சியைப் பெறுகிறோம்!" என்றெல்லாம் பலவாறாகப் பாராட்டிப் பேசினர். திருவாளர்கள் துரைசாமித் தேவர் ஜே. பி., டி. எஸ். ராமநாதன் (தொழிற் சங்கத் தலைவர்) கலைதாசன் முதலிய இன்னும் பல அன்பர்கள்.

கலைக் குழுவின் சார்பில் நாங்களும் திருவாளர்கள் பகவதி, சிவதாணு, கருப்பையா, சீதாராமன், ஒலிமுகமது ஆகியோரும் வரவேற்புக்கு நன்றி கூறுகையில் எங்கள் கலை உலாவின் நோக்கத்தை விளக்கினோம்.

பின்னர் அந்த ஹோட்டலில் உள்ள விசாலமான அறைகளில் எங்களைச் சிறிது நேரம் இளைப்பாறச் செய்து தமிழகத்துக்கே உரிய முறையில் அறுசுவை விருந்தளித்து மகிழ்வித்தனர் வரவேற்புக் குழுவினர்.

"மேல் நாட்டுப் பாணியில் உள்ள ஹோட்டலில் நம் நாட்டுக்குரிய அறுசுவை விருந்தும் படைக்கிறார்களா?" என்று கேட்டோம்.

"இல்லையில்லை! வேறு தென்னிந்திய உணவுச் சாலையிலிருந்து வரவழைத்தோம்" என்றார் திரு கிருஷ்ணசாமி.

எங்களைக் காண வந்த அன்பர்கள் சிலர், "என்ன? பசியாறி விட்டீர்களா?" என்று சொல்லின்பம் பொங்கக்கேட்டார்கள்.

"சாப்பாடு ஆச்சா?" என்பதைவிட, "பசியாறி விட்டீர்களா?" என்று சொல்வதிலே புதுமையும் சிறப்பும் பொருள் நிறைவும் பொலிகின்றன அல்லவா?

கடலுக்கு அப்பால் உள்ள பினாங்கு நகரின் சாலைகளிலே காணும் பலகைகளிலேயும் தமிழ் மணம் கமழ்வதைக் கண்டு மகிழ்ந்தோம்.

"Stop, Look, Go"

என்ற ஆங்கிலச் சொற்களும், அவற்றுக்குக் கீழே "நில், பார், போ" என்ற தமிழ் மொழிபெயர்ப்பும் மிகப் பொருத்தமாகப் பலகைகளிலே எழுதப்பட்டுள்ளன.

இது போன்ற காட்சிகள் 'தமிழ் மணக்கும் நிலத்திலேதான் நாம் இருக்கிறோம்' என்ற பெருமித உணர்ச்சியைத் தந்தன.

இரவு ஒன்பதரை மணிக்கு நகரத்திலிருந்து கப்பலுக்குத் திரும்பினோம்.

கப்பல் வரை வந்து கைகூப்பி வழியனுப்பினர் பினாங்குவாழ் தமிழ்ப் பெருமக்கள்.

ஏற்றுமதி இறக்குமதி யெல்லாம் முடிந்து இரவு இரண்டேகால் மணிக்குக் கப்பல் பினாங்குத் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டது. துறையிலிருந்து ஐந்தாவது மைல் வரையில் துறைமுகப் பைலட் கப்பலை ஓட்டி வந்தார். பின்னர், காப்டனிடம் ஒப்படைத்து விட்டு இறங்கி விசைப் படகிலே சென்று விட்டார். இரவு நேரத்தில் கப்பலுக்கு வழிகாட்டுவதற்காகக் கடலிலே "கண்சிமிட்டி விளக்குகள்" மிதந்து கொண்டிருந்தன. (தொடரும்)

The South Indian Education Society

BOMBAY

★

SILVER JUBILEE CELEBRATIONS-1957

For the purpose of preparing a register of Ex-pupils in connection with the celebrations of the Silver Jubilee of the Society's High School before the end of this year, all Ex-students of the School, wherever they may be, are requested to send full particulars of their present full address, their attainments and position to Hony. Secretaries, The South Indian Education Society, Matunga, Bombay-19

பாவை விளக்கு

அத்தியாயம் 13

விளையாட்டா, வினைதானா?

அடுத்த நாள் அதே இடத்தில், அதே நேரத்தில், முதல் நாள் சொல்லாமல் போய் விட்ட செய்தியைக் கூறினாள் செங்கமலம்.

"நாங்கள் பரம்பரை பரம்பரையாய் இந்தக் கோவிலுக்கு அடிமைப் பட்டவர்கள். உண்மையைச் சொல்வதற்கு வெட்கம் என்ன? நான் உங்களிடம் மனம் விட்டுப் பேசுகிறேன். என் தாய் பொட்டுக் கட்டிக் கொண்டவள். அவளுடைய போக்குப்படி நான் வளர்க்கப்பட்டிருக்கிறேன். என்னை விட்டால் அவளுக்கு வேறு குழந்தை குட்டி கிடையாது. எனக்குப் பாட்டு, வீணை, நாட்டியம் எல்லாம் கற்றுக் கொடுத்திருக்கிறாள். இந்த வருஷத்திலிருந்து நானும் இந்தக் கோயிலுக்கு அடிமையாக வேண்டும்; பொட்டுக் கட்டிக் கொள்ள வேண்டும்."

தணிகாசலம் யோசனை செய்தான்.

"இதுவரையில் நான் விவரம் தெரியாமலே வளர்ந்து விட்டேன். இப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாய்த் தெரிகிறது. ஆனால் முழுவதும் தெரியவில்லை. 'பொட்டுக் கட்டிக் கொள்ள மாட்டேன்' என்று பிடிவாதம் பிடித்தேன். அம்மா கேட்கவில்லை. அதனால் தப்பில்லை என்று சொன்னாள். இல்லாவிட்டால் சமஸ்தானத்தார் கொடுத்துள்ள பத்து ஏக்கர் நிலத்தையும் பிடுங்கிக் கொள்வார்களாம். அம்மாவிடம் நிறையப் பணம் இருக்கிறது. இருந்தாலும் கோயில் மானியத்தை விடுவதற்கு மனம் இல்லை."

"யாரையுமே நீ கல்யாணம் செய்து கொள்ள முடியாதா?" என்று கேட்டான் தணிகாசலம்.

"முடியும் என்றுதான் அம்மா சொல்கிறாள். ஆனால் எப்படி என்று தெரியவில்லை. வேறு எந்த வழிக்காவது என்னை அவள் இழுத்தால் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு செத்துப் போவேன்." செங்கமலத்தின் கண்கள் கலங்கின.

"அழாதே, செங்கமலம்! நான் ஒன்றும் உன்னைத் தப்பாக நினைக்க மாட்டேன்" என்றான் தணிகாசலம்.

"வருஷத்துக்கு ஒரு தரம் நாங்கள் இங்கே வரும்போதுதான் என்னை என் இஷ்டப்படி இருக்க விடுவாள். கன்னபுரத்தில் எனக்குக் கட்டுப்பாடு அதிகம். நான் அங்கே இதுவரை யாரையும் சந்தித்ததுமில்லை, பேசியதுமில்லை, மனத்தால் நினைத்ததுமில்லை."

"இங்கே வந்து பிறகு....?"

"தயவு செய்து அதைக் கேட்காதீர்கள்!" என்று தேம்பினாள் அவள்.



அகிலன்

அதற்குமேல் அவளைப் புண்படுத்த அவனுக்குத் துணிவில்லை. எனவே, பேசாமல் விட்டு விட்டான்.

அன்றைக்கு இரவில் சித்தி அவனிடம் கதை சொல்ல உட்கார்ந்தபோது, அவனுக்கு அடுத்த வீட்டுக் கதையைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் போலிருந்தது. மயில் ராவணன் கதை பாதி நடந்து கொண்டிருக்கும்போதே, குறுக்கே பேசிக் கதையைத் தடம்புரட்டி விட்டான். அவனுடைய சித்திக்குக் கதை சொல்ல வேண்டுமென்கிற ஆசையே தவிர, எந்தக் கதை என்பது முக்கியமில்லை. செங்கமலத்தின் தாயார் செல்லக்கண்ணுவின் கதையைக் கச்சிதமாய்ச் சொல்லி விட்டாள். கண், காது, மூக்கு வைத்துக் கதை சொல்லும் திறமையில் அவளை யாரும் மிஞ்ச முடியாது.

''புதுப்பட்டி கிராமத்துக்கே முதன் முதல் நாகரிகத்தைக் கொண்டு வந்த பெருமை செல்லக்கண்ணுவினுடையது தானும். செட்டிநாட்டுப் பிரமுகர் ஒருவரின் ஆசை நாயகியாக இருந்து வெளிநாடுகள்கூடச் சுற்றி வந்தாளாம். முதல் முதலாக இசைத்தட்டு சங்கீதம் முழங்கியது அவள் வீட்டில்; முதல் முதலாக சின்னஞ் சிறு 'பிளஷர் கார்' வந்து நின்றது அவள் வீட்டில்; முதன் முதலாக அவள் வீட்டு வாசலில் அந்தக் கிராமத்து ஜனங்களுக்கே 'பயாஸ் கோப்' காண்பித்தார்களாம். எல்லாம் அந்தப் பிரமுகரால் வந்த செல்வம்; செல்வாக்கு. அவர் இறந்துபோகும் போது அவளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து வைத்து விட்டுத்தான் இறந்து போனாராம்.

''புதுப்பட்டிக்குக் கோடை காலத்தில் வந்து இரண்டொரு மாசம் தங்குவார்கள். சித்திரைத் திருவிழா ஐந்தாம் மண்டகப்படி அன்றைக்குச் செல்லக்கண்ணு சதிராடுவாள். அன்றைக்கு ஒரு நாள் அவள் சதிராடினால் அந்த வருஷமெல்லாம் ஆடினமாதிரி! உன் சித்தப்பாவும் அப்படியே பொய்க் கணக்கு எழுதி விடுவார். இதில் ஒன்றும் ரகசியம் இல்லை.''

மகளைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்பியவனிடம் தாயைப் பற்றிச் சொல்லிக் கொண்டு போனாள் சித்தி.

''இந்தத் திருவிழாவுக்கும் செல்லக்கண்ணுதான் நாட்டியமா?'' என்று 'ஒரு குறுக்குக் கேள்வி போட்டு வைத்தான்.

''பச்சைக் கிளிமாதிரி பெண்ணை வைத்துக் கொண்டு இனிமேல் எதற்கு அவள்



சிரமப்பட வேண்டும்? வெள்ளரிப் பிஞ்சு போல் மதமதவென்று அந்தக் குட்டி வளர்ந்து விட்டாளே! செங்கமலத்துக்குப் பொட்டுக் கட்டி அவளைத் தான் ஆடச் சொல்வார்கள். தினமும் 'தை-தா' வென்று குதிக்கிறாளே, உனக்குச் சத்தம் கேட்கவில்லையா?''

''பொட்டுக் கட்டுகிற பழக்கமே எனக்குப் பிடிக்கவில்லை. இந்தச் சமஸ்தானம் பத்தாம் பசலி சமஸ்தானம். வெளியே மதுவிலக்குச் சட்டம் வந்து விட்டது; கோவிலடிமை ரத்துச் சட்டம் வந்து விட்டது. இங்கே இன்னும்...''

''எது வந்தாலும் உனக்கு கஷ்டம் தான்'' என்று சிரித்தாள் சித்தி. ''நீ கள்ளுக் கடை கணக்குப் பிள்ளை. கண்ணுச்சாமி உனக்கு இருபது ரூபாய் தரமாட்டார். இன்னும் பத்து நாட்களில் நீ இலவசமாய் நாட்டியம் பார்க்க முடியாது.''

''இதைவிட அவளை நான் கல்யாணக் கோலத்தில் பார்க்க ஆசைப்படுகிறேன்'' என்றான் தணிகாசலம்.

''ஏன், நீயே அவளைக் கல்யாணம் செய்து கொள்ளுகிறாயா? தினமும் தான் அவள் உன்னைப் பற்றிக்



கேட்டு நச்சரிக்கிறாள்.'' சித்தி விழுந்து விழுந்து சிரித்தாள்.

இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறதென்று அவனுக்கு விளங்கவில்லை. ''ஏன் செய்து கொண்டால் என்ன?'' என்றுகேட்க நினைத்தான். ஆனால் கேட்க நாவெழவில்லை.

இந்தக் கேள்வி அவன் மனத்தின் ஆழத்தில் - வெகு ஆழத்தில் - பதிந்து அவனையறியாமலே தொழில் புரிந்தது. 'ஏன் செய்து கொண்டால் என்ன?'

நாள்தோறும் வழக்கம்போல் குளத்தங்கரைச் சந்திப்பு நடந்து கொண்டே வந்தது. தனக்குள்ளே விழுந்த எண்ணத்தை அவன் அவளிடம் வெளிப்படுத்தவில்லை. அதற்கு முன்பு அதுபற்றித் தான் ஒரு முடிவுக்கு வந்து விட்டுப் பிறகு



அவளிடம் வெளியிட நினைத்தான். அதற்குள் எத்தனை எத்தனையோ விசித்திரமான பேச்சு வார்த்தைகள் அவர்களுக்குள் நடந்தன. தன்னுடைய வாழ்நாளில் கண்டறியாத இன்பக் காட்சிகளை அந்தத் தாமரைக் குளம் கண்டு களித்தது. அவர்கள் அர்த்தமில்லாமல் சிரித்துக் கொண்டதையும், சிணுங்கிக் கொண்டதையும், பார்த்துக் கொண்டதையும், பிணங்கிக் கொண்டதையும் அந்தக் குளம் தன்னுடைய நூற்றுக்கணக்கான தாமரை மலர்க் கண்களால் கண்டு பூரித்தது. யாருமில்லாத சமயங்களில் இரண்டு பேருமே போட்டி போட்டுக் கொண்டு நீரில் நீச்சலடித்தார்கள். தண்ணீரை அள்ளி வீசிக் குளத்தைக் கலக்கினார்கள். கந்தர்வ



உலகமென்பது கற்பனையில்லை என்று நிரூபித்தார்கள்.

தணிகாசலம் மாறிக் கொண்டு வந்தான். அவனை அவள் மாற்றிக்கொண்டு வந்தாள். ஏற்கனவே செய்து வைத்திருந்த முடிவுப்படி அவன் சம்பளப் பணத்தில் பதினைந்து ரூபாயைப் பொன்வயலுக்கு அனுப்பவில்லை. பாக்கிப் பணத்தைப் பத்திரிகைக்குச் சந்தா கட்டவுமில்லை. பதினைந்து ரூபாய்க்குப் புதுச் சட்டை வேட்டிகள் வாங்கிக் கொண்டான். இரண்டு ரூபாய்க்குப் புதுச் செருப்புக்கள் புற்று மண்ணுக்கு முழுக்குப் போட்டுவிட்டுச் சந்தன சோப்பும் பெட்டியும் வாங்கிக் கொண்டான். செங்கமலத்துக்கு முன்னால் புது மாப்பிள்ளை போல் காட்சி அளிப்பதே இப்போது அவனுடைய லட்சியம்!

காமனை எரித்த கடவுளை, தனக்குள்ளே உள்ள காமனை எரிக்கச்சொன்ன கடவுளை, இப்போது தன்னுடைய காதலுக்குக் கைகொடுக்கும்படி வேண்டிக் கொண்டான் தணிகாசலம்.

உலகத்தில் இத்தனை இன்பம் இருக்கக் கூடுமென்று அவனுக்கு இதற்கு முன்பு தெரியவில்லை. அழகும் கலையுள்ளமும் கொண்ட ஓர் வண்ண மயில் தன்னைச் சுற்றி வந்து இப்படித் தோகை விரித்தாடுமென்று அவன் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. மாலையில் அடுத்த வீட்டிலிருந்துவரும் குரலோசைக்கும், சதங்கை ஒலிக்கும் தாளத் துடிப்புக்கும் அவன் காத்திருந்தான். பொழுது புலர்ந்ததுடன் தாமரைக் குளத்தில் மலரும் புது மலர் நகை முகத்துக்காக அவன் கனவு கண்டான்.

எத்தனை இன்ப மயமானது, இந்த உலகம்!

தணிகாசலத்துக்குள்ளே மறைந்து கிடந்த மற்றொரு மனிதன் அவ்வப்போது எழுந்து நின்று கொண்டு புரட்சி செய்யாமல் இல்லை.

ஓடும் ரயிலில் உட்கார்ந்து பார்த்த தாழம் புதரின் மணம், அவனுடைய தகப்பனார் விட்ட கடைசி மூச்சு, பொன்வயலின் சீர்குலைந்த வாழ்வு, தேவகி தன்னை உயர்ந்த மனிதன் என்று மதித்து எழுதிய கடிதம், எல்லாவற்றுக்கும் மேலே தனக்காகக் காத்திருக்கும் கௌரி - இந்த நினைவுகளையெல்லாம் அந்த மற்றொரு மனிதன் அவன் முன்னே கொண்டு வந்து விட்டான்.

இத்தனைக்கும் மத்தியில் அவனால் கௌரியை மறக்கவும் முடியவில்லை.

மாட்டு வண்டியில் சென்ற தன்னைக் கண்டு விட்டுக் குதித்தோடிய கௌரியின் கால்கள், வீரம்மாள் பாட்டி தன்னை அவமதித்தபோது பாயசம் பரிமாற வந்த அவள் கரங்கள், தன்னைப் பார்த்து, 'பட்டணத்துக்குப் போகாதீர்கள், அத்தான்!' என்று அழாக்குறையாக வேண்டிக் கொண்ட அவள் முகம்-இத்தனையும் அவன் மனக்கண்முன் வந்தன.

என்றாலும் அவனுடைய மனத்தராசு இப்போது செங்கமலத்தின் பக்கமே சாய்ந்திருந்தது.

கௌரி விவரம் தெரியாத குழந்தை. பெரியவர்கள் பேசிப் பேசி ஓர் பாசத்தை ஏற்படுத்தி விட்டார்கள். அந்தப் பாசம் தான் அவனை ஆட்டி வைக்கிறது. கன்னிப் பருவத்தின் நினைவுகள் இதற்குள் அவளிடம் மலர்ச்சி பெற்றிருக்க முடியாது. பெரியவர்களின் வற்புறுத்தலுக்காகவா ஒருத்தியை மணந்து கொள்வது? தந்தை, தாய், பாட்டி யாருடைய விருப்பமும் அவனுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை.

முடிந்தால் செங்கமலத்தையே மணந்து கொள்வது என்ற முடிவுக்கு வந்தான்.

இந்த முடிவு அவனுக்கே சிரிப்பைத் தந்தது. தன்னைச் சார்ந்தவர்கள் ஒப்ப மாட்டார்களே என்ற கவலை அவனுக்கு இல்லை. செங்கமலம் சம்மதிப்பாளா? அவளுடைய தாயார் செல்லக்கண்ணு அவளை விட்டு விடுவாளா? தன்னைப் போன்ற ஓர் பரம ஏழையின் கையில் ஒப்புவிப்பதற்காகவா அவள் இவ்வளவு கலைகளையெல்லாம் அவளுக்குக் கற்றுத் தந்திருக்கிறாள்?

ஆசை வெட்கமறிய வில்லை; தகுதி அறியவில்லை; சுற்றுப்புறம்-சூழ்நிலையை அறிய வில்லை.

செங்கமலம் எத்தனை பணக்காரி என்பதற்கு அவளுடைய மாடி வீட்டைப் பார்க்க வேண்டாம். அவளுடைய தினசரி அலங்காரத்தைப் பார்த்தாலே போதும். பட்டைத் தவிர அவள் வேறு உடுத்துவதில்லை. வைரக் கம்மலும், சங்கிலியும், மோதிரங்களுமே மூவாயிரம் பெறும். அதாவது, அவனுக்கு இரவல் சாப்பாடு அந்த வீட்டில் தொடர்ந்து கிடைத்தால், கண்ணுச்சாமி கொடுக்கக் கூடிய நூற்றைம்பது மாதச் சம்பளத்துக்கு அவள் ஈடாக இருந்தாள்! அப்படிப் பட்டவள் ஏன் தன்னைப் போன்ற வெற்று மனிதனிடம் ஆசை வைக்க வேண்டும்? அவளுடைய அன்பு உண்மையானதுதானா?

நேரில் அவளைக் கேட்டு விடுவதென்று இரண்டு மூன்று நாட்கள் முயற்சி செய்தான். எப்படிக் கேட்பது, எதைக் கேட்பது என்பது அவனுக்குப் புரியவில்லை. தனிமையில் ஒத்திகை செய்து வைத்திருந்த வார்த்தைகளெல்லாம் அவளைக் கண்டவுடன் தொண்டைக்குள் அடங்கிப் போய் விட்டன. அவனை வெட்கம் பிடுங்கித் தின்றது.

பலமுறை அடித்துத் திருத்தி அவளுக்கு ஓர் கடிதம் எழுதினான்:—

அன்புள்ள செங்கமலம்,

எனக்குக் காதலைப்பற்றிச் சரியாகத் தெரியாது. ஆனால் நாம் பழகுவதைப் பார்த்தால், நாம் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறோம் என்று தோன்றுகிறது. என்னைப் பொறுத்த வரையில் நீ என்னைப் பைத்தியமாக அடித்து விட்டாய். நீ இல்லாமல் என்னால் வாழ முடியாது.

எனக்கு இரண்டு விஷயங்களை உடனே தெரிந்து கொள்ள வேண்டும். நீ என்னை விரும்புகிறாயா? அப்படியானால் உனக்கு என்னைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதமா?

என்னைப் பற்றிச் சொல்லி விடுகிறேன்: நான் பரம ஏழை. தங்கைக்கு முதலில் கல்யாணம் செய்து வைக்க வேண்டும். சீக்கிரத்தில் சமஸ்தானத்தில் ஒரு குமாஸ்தா வேலை கிடைக்கும். தாயாரை அழைத்து வைத்துக் கொண்டு குடும்பம் நடத்தப் போகிறேன். நீ 'சரி' என்று சொன்னால் கட்டாயம் நாலைந்து வருஷங்களுக்குள் உன்னைக் கல்யாணம் செய்து கொள்வேன். அதற்குள் வேண்டிய பணத்தையும் தேடிக் கொள்ளலாம். சொந்தக்காரர்களின் எதிர்ப்பையும் விலக்கிக் கொள்ளலாம்.

நீ பொட்டுக் கட்டிக் கொண்டு, வருஷந்தோறும் புதுப்பட்டிக்கு வந்து நடனமாடுவது பற்றி எனக்குக் கவலையே இல்லை. என்னிடம் நேரில் சொன்னாயே, அதுபோல் வேறு யாரையும் மனத்தால் கூட நினைக்காமல் இருந்தால் போதும். நாலைந்து வருஷங்கள் இப்படி உன்னால் இருக்க முடியுமா?

உன் தாயாரின் சொத்து நமக்கு வேண்டாம். அதற்காக உன்னை விரும்புவதாக



உன்தாயார் நினைத்துக்கொள்வார்கள். என் சம்பளத்தில் நீ குடும்பம் நடத்த வேண்டும்.

எழுதுவது போல் எனக்குப் பேச வராது. அதனால் எழுதுகிறேன். உடனே பதில் சொல்லி விடு. உனக்கு இஷ்டமில்லையென்றால் கடிதத்தைத் திருப்பிக் கொடுக்கலாம். பிறகு நாம் சந்திக்க வேண்டாம்—ஆனால் நல்ல முடிவையே நான் எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு, ப. தணிகாசலம்

படித்துறையில் வேறு யாருமில்லை. கடிதத்தை அவளிடம் நீட்டும் போது அவன் கரம் நடுங்கியது. செங்கமலம் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள். அவன் அதைக் கொடுத்தவுடன் தண்ணீரில் 'குபுக்' கென்று முழுகி எதிர்க் கரைக்குப் போய் விட்டான்.

படித்து முடிக்கட்டும். நன்றாக யோசிக்கட்டும். அரை நாழிகைப் பொழுது தண்ணீரில் இருந்து விட்டு, பரபரக்கும் நெஞ்சோடு, ஆவலுடன் அவள் பதிலுக்காக எதிரில் வந்து நின்றான்.

அத்தியாயம் 14

ஐந்தாம் திருவிழா

மறுநாள் பொழுது விடிந்தால் புதுப்பட்டியில் ஐந்தாம் திருவிழா. ஆனால் அது பொழுது போய்த்தான் ஆரம்பமாகும்; மறுநாள் விடிவதற்குள் முடிந்துவிடும். இந்த ஒரு இரவுக்குள் அந்த ஊர் படுகிற பாட்டைச் சுலபமாய்ச் சொல்லிவிட முடியாது.

மாலைநேரம் நெருங்க-நெருங்க அக்கம் பக்கத்துப் பட்டி தொட்டிகளெல்லாம் ஒன்றாய்த் திரண்டெழுந்து புதுப்பட்டியில் வந்து கூடிவிடும். நடுச் சாமத்துக்குள் எல்லோரும் சேர்ந்து அந்த ஊரைத் தூள் பறக்க அடித்து விடுவார்கள். சாமி கும்பிட வருவோர், அந்தச் சாக்கில் சதிராட்டம் பார்க்க வருவோர், கும்மியடிக்க வரும் பெண்கள், ஒயிலாட்டம் ஆடவரும் ஆண்கள்—இப்படிப் பலரை அங்கு காணலாம்.

பெண்கள் வருவார்கள்:

நிமிர்ந்த நடை போட்டு, உல்லாசக் கை வீசி, செம்பரத்தம் பூக்களைப்போல் சிவந்து மலரும் உதட்டுச் சிரிப்போடு அவர்கள் உற்சாகமாக வருவார்கள். கரு கருவென்ற தேகம் மினுமினுக்க, வேப்ப எண்ணெய்ப்பூச்சால் கொண்டை முடிச்சு பளபளக்க, வெற்றிலைக் காவி ஏறிய மாதுளம் முத்துப் பற்கள் தெரியப் பேசிக் கொண்டே வருவார்கள். அவர்களிடம் மென்மை இருக்காது: மிடுக்கு இருக்கும். வெட்கம் இருக்காது; வீரம் இருக்கும். ஆண்களை அவர்கள் கண்ணிமைக் காந்தத்தாலோ, நீண்ட பெருமூச்சாலோ கவர்வதில்லை. நிமிர்ந்த நடைக் கைவீச்சில் அடிபட்டுத் தவிக்கும் ஆண் உள்ளங்கள் எத்தனை எத்தனையோ! உரக்கப் பேசிச் சிரிக்கும் சிரிப்பொலியில் பறி போகும் பஞ்சை மனங்கள் எத்தனை எத்தனையோ!

ஆண்கள் வருவார்கள்:

சந்தனம் வீசும் பரந்த மார்பு, குடுமியில் சுற்றிய மல்லிகைப் பூச்சரம், பெண்களின் உதட்டோடு போட்டியிடும் சிவந்த கண்கள்—இவற்றோடு அந்தக் கட்டிளம் காளைகள் வருவார்கள். கைதேர்ந்த சிற்பிகளால் செதுக்கி இழைக்கப் பெற்ற கருங்காலிச் சிற்பங்கள் போல் அவர்கள் கம்பீரமாக வருவார்கள். தோள்கள் துடிதுடிக்க, முழங்கால் தசை நார்கள் ஏறி இறங்க, வளையாத முதுகெலும்பின் வண்ணக்குழி பின்னால் தெரிய அவர்கள் வரும் காட்சி தமிழ்நாட்டுப் பழங்குடி மக்களின் பெருமையை நினைவூட்டும். காதலுக்கென்றே பிறந்தவர்கள் என்பதை அவர்களுடைய கண்களின் சிவப்பும், வீரத்துக்கென்றே பிறந்தவர்கள் என்பதை அவர்களுடைய தோள்களின் துடிப்பும், அழகுணர்ச்சிக்கும் குறை உணர்ச்சிக்கும் அடிமைப்பட்டவர்கள் என்பதைச் சந்தனப் பூச்சும் மல்லிகைச் சரமும் கதை சொல்லும்.

நிலாக் காலத்தில் நடக்கும் அற்புதமான திருவிழா அது:

ஒரு பக்கம் பெண்கள் கும்மியடிப்பார்கள்; கோலாட்டம் போடுவார்கள். மறு பக்கம் ஆண்கள் ஒயிலாட்டம் ஆடுவார்கள்; கரகம் வைத்துப் பாடுவார்கள். ஒயிலாட்டம் பார்த்திருக்கிறீர்களா? கால்களில் சதங்கை கட்டி, கைகளில் துவாலைத் துணி பற்றி, வரிசை வரிசையாக நின்று, குனிந்து நிமிர்ந்து தாளத்துக்குத் தக்கபடி கிராமத்து இளவட்டங்கள் ஆடும் ஆட்டமது. ஒயிலாட்டப் பாட்டுக்கள் ஒய்யாரமாக வானத்தில் கிளம்பி உயரத்தில் உள்ள சந்திரனைக் கூவி அழைப்பதுண்டு.

சின்னபுரம் சமஸ்தானத்துக் கிராமங்களில் சரிவர மேலை நாகரிகம் பரவாததால் அதுவரை அங்கு தமிழ் நாகரிகம் சிறிது எஞ்சி நின்றது.

இரவில் சுவாமியும் அம்மனும் கோயிலிருந்து கீழ்வாசல் மூகப்புக்கு வருவதற்குள் பத்து மணியாகிவிடும். அதிர் வேட்டுச் சத்தம் கேட்டவுடன் தங்கள் ஆடல் பாடல்களை முடித்துக் கொண்டு அனைவரும் கீழ வாசல் திறந்த வெளியில் கூடுவார்கள். அங்கே செல்லக்கண்ணு சதிராடுவான். (இந்த வருடம் செங்கமலம் ஆடப்போகிறாள்) வைத்த கண் வாங்காமல், திறந்த வாய் மூடாமல், சுவாமி—அம்மனைக்கூட மறந்து ஆட்டம் பார்ப்பார்கள். பிறகு ஊர்வலம் நடக்கும்; நாயனக் கச்சேரியுடன் எல்லோரும் ஊர் சுற்றி வருவார்கள். கடைசியாக, சிவபெருமான் தம்பதிகள் பள்ளியறைக்குப் போனவுடன் கிராமவாசிகளும் படுக்கப் போவார்கள். வெளியூர் வாசிகளுக்குத் தெருத்திண்ணை, திறந்த வெளி, மரத்தடி, குளத்தங்கரைப் படிக்கட்டு, ஒதுக்குப்புறம் இவையே பள்ளி அறைகள். குறட்டை விடுவோரும் உண்டு; நெம்மாளமடிப்போரும் உண்டு.

தணிகாசலம் இந்த ஐந்தாம் திருவிழாவை எதிர்பார்த்தது போல் வேறு யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

ஆனால் அவனைப்போல் அதற்காகச் சஞ்சலப்பட்டவரும் வேறு யாருமில்லை. திருவிழாவில் மூதன் முதலாகச் செங்கமலத்தின் நடனத்தைப்பார்க்கலாம். இருதயத்துக்குள்ளே என்றென்றும் வைத்துப் பூட்டிக் கொள்ள வேண்டிய நிகழ்ச்சி அது. ஆனால் நடனம் முடிந்தவுடன், திடீரென்று அவள் ஊருக்குப் போய் விட்டால் என்ன செய்வது? ஒரே ஒரு நாள் கூடிக் கலையும் திருவிழாக் கூட்டத்தின் கதி தலைக்கும் செங்கமலத்துக்கும் நேர்ந்துவிட்டால் என்ன செய்வது?

தணிகாசலம் இதற்காகவே அவசரப்பட்டு அவளுக்குக் கடிதம் எழுதினான். சாதகமான பதிலைச் சொல்லி விட்டு அவள் எங்கே வேண்டுமானாலும் போகட்டும். எப்படியாவது அவள் திரும்பி விடுவாள்; அல்லது அவளைத் தேடிக் கொண்டு போகலாம்.

பாதகமான பதிலாக இருந்தால்.... அதை நினைக்கவே அவனுக்கு நடுக்கமாக இருந்தது. அப்படி ஒன்றும் சொல்ல மாட்டாள். சொன்னால் பிறகு ஒரு கணம் கூட அவள் முகத்தில் விழிப்பதில் அர்த்தமில்லை. நாளைக்கு நடக்கப் போகும் நடனத்தை ஆயிரம் ஆயிரம் பேர்கள் கண்டு களித்துக் கொள்ளட்டும். சமஸ்தானத்து மன்னர் சார்பில் வரப் போகும் பெரிய அதிகாரி கண்டு களித்தாலும் சரி, அல்லது கடவுளே கண்டு களித்தாலும் சரி, தான்மட்டிலும் அந்தப்பக்கம் தலை வைத்துப் படுக்கப் போவதில்லை. சம்மதப்படாதவளின் நடனத்தில் சாரமென்ன இருக்கப் போகிறது!

குளத்தங்கரைப் படிக்கட்டில் செங்கமலம் கடிதமும் கையுமாக உட்கார்ந்திருந்தாள். தணிகாசலம் ஆவலுடன் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டு தண்ணீரில் நின்றான். நீண்ட நேரம் ஆயிற்று. அவள் கடிதத்தை மடித்துப் பத்திரமாகத் தன் சோப்புப் பெட்டிக்குக் கீழே மறைவாக வைத்துக் கொண்டாள். அவனிடம் ஒன்றும் பேசவில்லை. யோசனையுடன் அவனைப் பார்த்தாள்.

எவ்வளவு நேரந்தான் இப்படித் தன்னை அவள் பார்த்துக் கொண்டிருப்பது? தணிகாசலத்தின் பரபரப்பு அதிகமாகவே அவன் ஒரு அடி முன்னால் எடுத்து வைத்தான். அவனுக்குள்ளே ஓடிக்கொண்டிருந்த எண்ணங்கள், தங்களின் உருவத்தைக் காட்டிக் கொள்ளாமல், அவனைத் துன்புறுத்தத் தொடங்கின. 'பேசு, செங்கமலம்! பேசு!' என்று அவன் தனக்குள் பேசிக் கொண்டான். 'பேச மாட்டாயா?'

செங்கமலத்தின் கண்கள் கலங்கின; உதடுகள் துடித்தன; ஆனாலும் அவள் வாய் திறந்து பேசவில்லை.

''பதில் சொல், செங்கமலம்!''

''என்ன சொல்வது?''

''என்னையா கேட்கிறாய்?'' கோபத்துடன் கேட்டான் தணிகாசலம்.

''நாளைக்கு இங்கே ஊர் கூடிவிடும். நம்மால் சந்திக்க முடியாது. அப்புறம் நீ திடீரென்று ஊருக்குப் போனாலும் போய் விடுவாய். அதற்குள் எனக்கு உன்னைத் தெரிந்து கொள்ளவேண்டும்.''

''இன்னும் தெரியவில்லையா?''

''இல்லை; சரியாய்த் தெரியவில்லை. உன் எண்ணம், உன் முடிவு இரண்டையும் சொல்லி விடு.''

''நீங்கள் மிகவும் நல்லவர்'' என்றாள் செங்கமலம். ''நன்றாக எழுதியிருக்கிறீர்



கள். பேச்சில் உள்ள வெட்கம் உங்கள் கடிதத்தில் இல்லை.''

''எனக்குப் புரியவில்லை. நான் எழுதியிருப்பது தப்பா?''

''இல்லை.''

''பிறகு பதில் சொல்.''

''எனக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை.''

தணிகாசலத்துக்கு அவள் கன்னத்தில் ஓங்கி அறைய வேண்டும்போல் தோன்றியது. தன்னை அவள் ஏமாற்றுவதாக எண்ணிக் கொண்டான்.

''சுற்றி வளைத்துப் பேசாதே! உனக்கு விருப்பம் இருக்கிறதா, இல்லையா? இரண்டில் ஒன்று சொல்லிவிடு.''

''உங்களுக்கு எழுதத்தான் தெரிகிறது. பேசத் தெரியவில்லை. ஏன் இப்படி அவசரப் படுகிறீர்கள்?''

''மண்ணாங்கட்டி!'' என்று ஆத்திரத்தோடு அந்தக் கடிதத்தை எடுக்கப் போனான் தணிகாசலம். அதற்குள் அவளே பாய்ந்து சென்று அதை எடுத்துக் கொண்டாள்.

''அதை இங்கேகொடுத்துவிடு; விருப்பமில்லாவிட்டால் வேண்டாம்.''

''எழுதிய கடிதம், எழுதிய பிறகு, எழுதியவருக்குச் சொந்தமில்லை; தெரியுமா?'' என்றாள் செங்கமலம்.

''விளையாட்டுப் பேச்சு வேண்டாம். எனக்கு நேரமாகி விட்டது. நான் போக வேண்டும்.'' என்றான் தணிகாசலம்.

''கொஞ்சம் பொறுமையாக இருங்கள்'' என்று கெஞ்சினாள் செங்கமலம். ''இஷ்டமிருந்தால் மட்டும் போதுமா? நம்முடைய எண்ணம் நடக்குமா, நடக்காதா என்று பார்க்க வேண்டாமா? என்னைப் பெற்றவள் ஒருத்தி மலைபோல் இருப்பதை நீங்கள் மறந்துவிட்டீர்கள்.''

''எனக்குந்தான் இருக்கிறார்கள்'' என்றான் தணிகாசலம். ''அப்படியானால் நீ உன் தாயாரைக் கேட்டுக் கொண்டு என்னிடம் பழகியிருக்க வேண்டும். எதற்காகச் சும்மா இருந்தவனுக்குப் பத்திரிகைகொண்டு வந்து கொடுத்தாய்? நானா உன்னைக் கேட்டேன்? எதற்காகப் பூப் பறித்துத் தரச் சொன்னாய்? உன்னால் நான் பட்டிருக்கும் பாடு....''

முன்னொரு நாள் நீச்சல் பழக்கத்தில் மூன்று வாய்த் தண்ணீர் உள்ளே போனது அவன் நினைவுக்கு வந்தது.

செங்கமலத்தின் முகம் கோபக்குறி காட்டியதால், சமாதான முறையில் மீண்டும் பேசினான்: ''இன்றைக்கோ நாளைக்கோ உன்னை நான் ஒன்றும் செய்யச் சொல்லவில்லை நாலைந்து வருஷங்கள் வரை நாம் பொறுத்திருப்போம். சம்மதமா?''

''நாலைந்து வருஷங்கள்?......'' என்று அவள் நெடுமூச்செறிந்தாள். ''எவ்வளவு சுலபமாய் இதைச் சொல்லி விட்டீர்கள்!''

''ஏன், முடியாதா? 'முடியாது' என்பது தானே உன் பதில்? சரி—அப்படியானால் நாளையிலிருந்து உன் அம்மாவைக் கேட்டுக் கொண்டு என்னிடம் பேசு. இந்தத் தொல்லையை இன்றோடு நிறுத்திக் கொள்வோம். இந்த நிமிஷத்திலிருந்து நீ வேறு, நான் வேறு!''

தண்ணீருக்குள் மீண்டும் 'குபுக்' கென்று மறைந்து கொண்டான் தணிகாசலம். மூச்சுக் கொப்புளங்கள் நீர்ப் பரப்பில் வெடித்து அவனுடைய உள்ளத்து நெருப்பை நீரில் கரைத்தன. பிறகு அவளைத் திரும்பிப் பாராமல் எழுந்து நின்று தலையைத் துவட்டிக் கொண்டான். அவசரம் அவசரமாகக் கரையேறப் போனான்.

''நில்லுங்கள்!'' என்று ஆத்திரத்தோடு கத்தினாள் செங்கமலம்.

''எதற்காக?''

''நீங்கள் உண்மையான ஆண் பிள்ளையாக இருந்தால் நான் சொல்கிறபடி செய்ய வேண்டும்.''

அவனுடைய ஆண்பிள்ளைத்தனத்தை அவள் சவுக்கால் அடிப்பது போல் அவனுக்குச் சுரீரென்று தைத்தது. பேசத் தோன்றாமல் பிரமித்து நின்று விட்டான்.



''நாளைக்கு இரவு நாட்டியம் முடிந்தவுடன் நான் உங்களோடு புறப்படத் தயார். எங்கு வேண்டுமானாலும் வருகிறேன். நீங்கள் விரும்புகிறபடி நான் உங்களோடு வாழ்கிறேன். பணமும் நகையும் வேண்டுமா? எடுத்து வருகிறேன். கடைசி வரையில் என்னை வைத்துக் காப்பாற்றுவதாக இந்தக் கோயில் சாட்சியாக எனக்கு நீங்கள் கையடித்துக் கொடுங்கள்.''

கையை நீட்டினாள் செங்கமலம். அவளுடைய அந்த மெல்லிய விரல்கள் பதற்றம் காட்டின.

அப்போதுதான் தணிகாசலம் என்ற ஆண்பிள்ளை, தான் இன்னும் சரியான ஆண் பிள்ளையாக வளர்ச்சி பெற

வில்லையென்பதை முற்றிலும் உணர்ந்தான். அவன் வாய் அடைத்துக் கொண்டது.

''ஏன் தயங்குகிறீர்கள்?'' என்றாள் செங்கமலம். ''ஐந்து வருஷங்கள் என்பதெல்லாம் நிலையில்லாத பேச்சு. நீங்கள் ஆணாக இருப்பதால் உங்களைப் போல் நானும் இருக்க முடியும் என்று நினைக்கிறீர்கள். நான் என் அம்மா பெண். அவள் என்னைப் பற்றி என்ன எண்ணிக் கொண்டிருக்கிறாளோ, தெரியாது. உங்களுக்கு இன்றைக்கு வாக்குக் கொடுத்து விட்டால் அதன்படி நடக்க வேண்டும். அதற்கு முன்பு நான் யோசனை செய்ய வேண்டாமா?''

கரத்தைக் கீழே தாழ்த்திக் கொண்டாள். ''என் அம்மா ஒருகாலும் இதற்கு ஒப்பமாட்டாள். என்னை நீங்கள் இனிமேல்தான் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதில்லை. எப்படியும் நீங்கள் சொல்கிறபடி நடக்க முடியுமா என்று பார்க்கிறேன். திரும்பவும் ஊருக்குப் புறப்படுவதற்குள் உங்களிடம் முடிவு சொல்கிறேன். அம்மாவோடு இருந்து கொண்டு ஐந்து வருஷமும் உங்களுக்காகக் காலம் தள்ள முடிந்தால் அது நான் செய்த பாக்கியம்.''

அவளுடைய கண்ணீர் தணிகாசலத்தின் நெஞ்சைக் கரைத்தது.

''என்னை மன்னித்துக் கொள்; நீ என்னைப் பைத்தியமாக அடித்து விட்டாய். உன்னால் நான் எவ்வளவு மாறிப் போனேன், தெரியுமா?''

''கடிதத்தை எடுத்து அவள் பத்திரப் படுத்திக் கொண்டாள். ''நாளைக்கு அரங்கேற்றத்தின்போது நான் கடவுளையும் உங்களையும் நினைத்துக் கொண்டு தான் ஆடப்போகிறேன். என் கண் படுகிற இடத்தில் உட்காருங்கள்.''

இருவரும் பிரிந்தார்கள். கோயிலின் கோபுரத்து உச்சியை எட்டிப் பிடித்து விட்ட வெற்றி உணர்ச்சியுடன் வீடு திரும்பினான் தணிகாசலம்.

ஐந்தாம் திருவிழாப் பொழுது அலங்காரமாக விடிந்தது. முதல் நாளிரவு அடுத்த வீட்டில் நடந்த ஒத்திகை ஒலிகள் அவனைச் சின்னாபின்னப் படுத்தின. செங்கமலத்தின் நீண்ட விரல்கள் அவன் கண்களை மூடவிடாமல் எதிரில் நின்று நர்த்தனம் புரிவது போலவும், அவள் பாதச் சிலம்போசை அவன் இதயத் துடிப்போடு சேர்ந்து ஒலிப்பது போலவும் அவனுக்குத் தோன்றின. அவள் ஆடினாள், ஆடினாள், அப்படி ஆடினாள் அவன் கனவுகளில்! எத்தனை, எத்தனை இன்பக் கனவுகள்!

மத்தியானப் பொழுதில், அவன் எதிர்பார்த்திருந்த _ இறவாத நேரத்துக்கு மத்தியில், எங்கிருந்தோ ஒரு சிறு துன்பம் முளைத்தது. இருந்திருந்தும் அன்றைக்குப் பார்த்துத்தானா அந்த சமஸ்தான உத்தரவு அவனைத் தேடி வர வேண்டும்? ஒரே ஒரு நாள் கழித்து வரக்கூடாதா? இரண்டு மாதமாக இல்லாத தலைபோகிற அவசரம் இன்றைக்கு எங்கிருந்து வந்தது?

தபால்காரத் தாத்தா நீட்டிய சமஸ்தானத் தபாலைப் பிரித்துப் பார்த்தான் தணிகாசலம் :—

''நீங்கள் வேலைக்குச் செய்து கொண்ட விண்ணப்பம் கிடைத்தது. நீங்கள் இந்த சமஸ்தானத்தில் பிறந்தவர் என்பதற்கு அத்தாட்சி வேண்டும். அதற்கு இப்போது கொடுத்திருக்கும் கிராம அதிகாரியின் அத்தாட்சி போதாது. ஓர் கெஜட் பதிவுள்ள பெரிய அதிகாரியிடம் புதிதாய் ஒன்று வாங்கி அனுப்ப வேண்டும். இரண்டு நாட்களுக்குள் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும்.''

தணிகாசலத்தின் தலை சுற்றியது! இரண்டு நாளைக்குள் கிடைக்கும்படி அனுப்ப வேண்டுமென்றால், இன்றைக்கே கண்ணபுரத்துக்குப் போக வேண்டும். இன்றைக்கே மட்டுமில்லை, இப்போதே போக வேண்டும். இப்போதே புறப்பட்டால் செங்கமலத்தின் நடனத்தைப் பார்க்க முடியாது.

கடமை அவனைக் கண்ணபுரத்துக்கு அழைத்தது; காதல் அவனைப் புதுப்பட்டியில் இருக்கும்படி இழுத்தது. இருபுறமும் அகப்பட்டு அவன் செய்வதறியாமல் நின்று திகைத்தபோது, அவன் சித்தப்பா அங்கு வந்து சேர்ந்தார். கடிதத்தை வாங்கிப் படித்தவர், ''உனக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது; உடனே நீ கண்ணபுரத்துக்குக் கிளம்பு'' என்றார்.

தணிகாசலம் தயங்கித் தயங்கி அவர் முகத்தைப் பார்த்தான். அவன் முகத்தில் அசட்டுக் களை தட்டியது. தலையைச் சொறிந்து கொண்டான். பிள்ளையாண்டான் சந்தோஷப் படவேண்டிய இந்த நேரத்தில் ஏன் இப்படித் துக்கப்படுகிறான் என்பது அவருக்குப் புரியவில்லை.

''என்னடா விழிக்கிறாய்? உடனே புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்! இப்பொழுதே புறப்பட்டால்தான் சரியாக இருக்கும்!'' என்றார்.

அவன் உள்ளத்திலே உருவாகியிருந்த கனவுகள் இப்படியா கலைய வேண்டும்? செங்கமலத்தின் அரங்கேற்றத்தைப் பார்க்காமலா புறப்படுவது?

செங்கமலத்தின் நடனத்தைக் காரணம் காட்டிச் சித்தப்பாவிடம் பேச்சுக் கொடுக்க அவனுக்குத் துணிவு உண்டாகவில்லை. பரிதாபமாக அவரை நோக்கி விழித்தான். (தொடரும்)



அவள் எவ்வளவு மள
மளவென்று வளர்ந்து
கொண்டிருக்கிறுள் !
தன் பேத்தி, வயதிற்கேற்ற வளர்ச்சி அடைந்துகொண்டிருப்பதைக் கண்டு பூரிக்கிறுள் பாட்டி. க்ளாக்ஸோதான் இந்த வளர்ச்சிக்கு காரணம் என்பதை தாயார் அறிவாள். தாய்ப்பாலைப்போல் சுத்தமானதும், புஷ்டியளிப்பதும், எளிதில் ஜீரணிக்கக் கூடியதுமான க்ளாக்ஸோ தாய்ப்பால் இல்லாத குழந்தைகளுக்கு மிகவும் ஏற்ற பால் உணவு.
Glaxo
க்ளாக்ஸோ குழந்தைகளுக்குச்
சிறந்த பால் உணவு
க்ளாக்ஸோ பேபி புக் இலவசமாக வேண்டுவோர்,
(தபால் செலவிற்காக) 30 நயா பைசா ஸ்டாம்புகள் அனுப்பவும்.

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

32. பழைய புராணம்

"சம்போ! சங்கர! மஹாதேவ! சரணாகத ரக்ஷக! சரணம். சரணம். காப்பாற்றவேணும் தயாநிதே! பாவி ராவணன் என்னைத் தின்று விட்டான்... பிரபோ! பிரபோ" என்று அலறியடித்துக் கொண்டே வந்து பகவான் சங்கரரின் தாள்களில் வீழ்ந்தான் குபேரன்.

பிரபு சிரித்தார். குபேரனை எழுந்திருக்கச் சொல்லி, "வத்ஸ! நீதான் இதோ இருக்கிறாயே! ராவணன் தின்று விட்டான் என்ற பிராந்தி ஏன்? அது வீண்" என்று கூறினார்.

"இல்லை, இல்லை, பிரபோ! என்னைச் சூலத்தில் குத்தி எடுத்து நெய்யில் பொரித்து விட்டான். இன்னும் இமைக்கும் நேரத்தில் என்னை வாயிலிட்டு மெல்லப் போகிறான். இதோ இருக்கும் சிவகணங்களைக் கேட்டால் இது உண்மை என்பது தெளிவாகும்" என்றான் குபேரன்.

பரமசிவன் சிரித்தார். "குபேரா! இதோ பார். நீ என் முன் நிற்கிறாயே! சூலத்திலும் இல்லை. பொரிக்கப்படவும் இல்லை உனக்கு ஏன் இந்த பிராந்தி?" என்று சொல்லிச் சிவகணங்கள் சூழ்ந்திருந்த பக்கம் திரும்பிப் பார்த்தார் பரமசிவன்.

ஆடு திருடினவன் போல விழித்தவராய்ச் சிவகணங்களில் ஒவ்வொருவரும் தலையைக் கவிழ்ந்தபடி நமட்டுச் சிரிப்புடன் நின்றனர்.

பரமசிவனுக்கு ஒருவாறு விஷயம் புரிந்தது. இதற்குள் "இல்லை! பிரபோ.. ஆமாம், ஆமாம், மெய்தான். ராவணன் மிக மிகப் பெரியதொரு இரும்பு வாணலியையும் - ஒரு பெரிய இரும்பு சூலத்தையும் உண்டாக்கி விட்டான். அந்த இரும்பு வாணலியில் நெய்யை விட்டு உருக்கி, இரும்புச் சூலத்தால் என்னைக் கோத்தி எடுத்து அந்த நெய்யில் பொரித்து, (கண்கள் இரண்டையும் பொத்திக் கொண்டு) ஐயோ! ஐயோ! என்னைத் தின்னப் போகிறான் ராவணன். பிரபோ! பிரபோ! தின்று விட்டானே!" என்று அலறினான் குபேரன்.

சிவகணங்கள் யாவரும் தம்மையும் மீறிச் சிரித்து விட்டனர். சிவன் பார்த்தார்... "ஓஹோ! இது உங்கள் விளையாட்டா! குபேரனோ எந்த நிமிஷத்தில் ராவணனால் தனக்கு என்ன ஆபத்து வருமோ என்று நடு நடுங்கிக் கொண்டே அல்லும் பகலும் உறக்கமோ மன நிம்மதியோ இன்றி நரக வேதனைப்படும் பீதியில் தவித்துக் கொண்டிருக்கிறான். இதைச் சிறிது அதிகப்படுத்திக் குபேரன் படும் அவஸ்தையைக் காண விரும்பி நீங்கள் செய்த விளையாட்டின் விளைவா இது?" என்று சிவகணங்களைக் கடிந்து விட்டு, "இனி நீங்கள் யாராவது குபேரனிடம் பேசினால், பத்திரம்; எனக்குக் கடுங் கோபம் வரும்" என்று குபேரனையும் சமாதானப்படுத்தி யனுப்பி வைத்தார் பரமசிவன்.

மறுநாள். சிவகணங்கள் குபேரனைச் சந்தித்தனர். ஆனால் வாய் திறந்து ஒரு சொல் சொல்லவில்லை. நாம் ஏன் அதைச் சொல்ல வேண்டும்? பரமாத்மா நம் பேரில் கோபமடைய வேண்டும்? எல்லாம் அவரவர் தலைவிதி போலாகட்டும் என்று ஜாடைகாட்டியே தெரிவித்தனர். குபேரனின் மனத்துயர் அதிகமாயிற்று. 'என்ன ஆபத்து? என்ன ஆபத்து? சொல்லித் தானாகவேணும்' என்று வழியை மறித்துச் சிவகணங்களை வற்புறுத்தினான் குபேரன். அதற்கு ஏதோ குபேரனிடம் தமக்குள்ள அனுதாபத்தினால் சொல்வதுபோல் நடித்து ஊமை பாஷையில், அபிநயம் பிடித்தே, முதல் நாள் செய்தபடி குபேரனுக்குப் பெரும் பீதியை உண்டாக்கி விட்டனர்.

மறுபடியும் முதல்நாளைய நாடகந்தான். 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பதற்கு இவ்வித கதை யொன்று பழைய புராணத்தில் உண்டு.

இந்த ப்ளூ ஜுரம் மறுபடியும் வரலாம். வந்தாலோ முன்முறை இருந்ததைவிட மிகக்கடுமையானதாய் இருக்கலாம். ஏராளமான உயிர்ச் சேதம் ஏற்படலாம் என்ற ஜோஸ்யங்களைச் சொல்லி வருகின்றனர். மிகக் கடுமையாய் இருக்கும். பெருவாரியான மக்கள் மாள்வர் என்று சொல்லிப் பிறகு இந்த மழை குளிர் காலத்திலேயே வரலாம், வரும் என்று உலகத்துக்கு ஒரு மனச்சஞ்சலத்தையூட்டி யுள்ளனர் சில பிரமுகர்கள். "வருவது இன்னம் என்று சொல்ல முடியுமா?" என்று சிலர் கேட்பதும், "உம்! அதெல்லாம் ஒன்றும் வராது" என்று சிலர் சொல்வதுமாக ஏற்பட்ட கலவரத்தால் இன்று நம் முன்பலர் அன்றையக் குபேரனின் நிலையை அடைந்துள்ளோம்.

கார்காலத்தில் ஏற்படக் கூடிய சாதாரண நோய்களுக்குச் சிகிச்சைகளைச்



"நானு பாட்டு பாடு, அம்மா!"
"தொண்டை சரியாக இல்லை, மாமி! பேப்பர் பேனா கொண்டாங்கோ. நானு பாட்டையும் வேணுமானால் எழுதிக் காண்பித்து விட்டுப் போகிறேன்!"

சொல்லி வரும் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த 'ப்ளு' விஷயமாக உடனடியாக ஏதாவது எழுதா விட்டால் இப்போது நம்முள் 'குபேரன்' பதவியைப்பெற்றுள்ளவர் சமாதானமடைய மாட்டார்கள்.

"பழையமுது சாப்பிட்டவரை முதல் பந்தியில் உட்காரச் சொல். பட்டினி இடப்பவர் அடுத்த பந்தியில் சாப்பிடலாம்" என்றது போல இந்த ப்ளு விஷயத்தைச் சொல்லியாக வேண்டும்.

ப்ளுவைத் தடுப்பதற்கு என்ன முறை? வந்த ப்ளுவைக் குணப்படுத்த என்ன செய்யலாம் என்ற வகையில்தானே இதற்கு நிவாரணம் தேட வேண்டும்? இந்த ப்ளுவுக்குக் காரணமான கிருமி இன்னதென்று தெளிந்து, அந்தக் கிருமிகளைக் கொல்லும் மருந்துகள், ஊசி மருந்துகள் ஆகியவற்றைக் கண்டு பிடிப்பதில் பல ஆராய்ச்சி மேதைகள் அல்லும் பகலும் உழைத்து வருகின்றனர். ஏதோ ஒரு மருந்தைக் கண்டு பிடித்தாயிற்று என்று சிலர் சொல்கிறார்கள். அதை மும்முரமாகப் பரீட்சித்துத் தெளிந்த பிறகு தெரிவிக்கிறோம் என்று வேறு சிலர் சொல்கிறார்கள்.

இனி வரப்போவதாக ஹேஷ்யப்படும் நோயின் கிருமிகள் (வருவதற்கு முன்பே) எத் தன்மையதாயிருக்கும் என்று இப்போதே தெளிவதும் அதற்குத் தக்க ஊசி மருந்துகளை இப்போதே நிச்சயிடப்பதும் எப்படிச் சாத்தியமாகும்? கலியாணமே ஆகாதவனுக்கு,— பிறக்கப் போகும் முதல் குழந்தை பிள்ளையாய்த்தானிருக்கும்; அந்தக் குழந்தைக்கு ராமன் என்று பெயர் வைக்க வேணும் என்றும், இல்லை கிருஷ்ணன் என்றுதான் பெயர் வைக்க வேணுமென்றும் விவாதித்துக் கடைசியில் ராமகிருஷ்ணன் என்று பெயர் வைத்து விடலாம் என்று சமரசமான முடிவைச் செய்வது போலிருக்கிறதே!

நோய்க்குக் காரணமான கிருமியும் ஒரு உயிர்ப் பொருள்தானே! எப்படியும் தான் உயிர் வாழ வேணும், புத்திர பௌத்ராதிகளுடன் பெரு வாழ்வு பெற வேணும் என்ற ஆசை அவ் வுயிர்ப் பிராணிகளுக்கு உடன் பிறந்த ஆற்றலாயிருக்குமல்லவா? இவ்வாற்றலினால் இக் கிருமி என்ன செய்யும்? அதைக் கொல்வதற்காகக் கொடுக்கும் மருந்துக்கும் 'பெப்பே' என்று சொல்ல வல்ல நிலையைப் பெற்றுவிட ஆனமட்டும் முயற்சிக்கத்தான் செய்யும். காலக்கிரமத்தில் இம் முயற்சியில் வெற்றியும் காணும். இதைப் போக்கவல்ல மருந்துகளைக் கொடுத்தாலும் சட்டை பண்ணுமல் பெருகிக் கொண்டே போகும். இதனால் தான் கொயினாவுக்கு மசியாத மலேரியா ஜுரம் போன்றவை ஏற்படுவது. ஆகவே இந்த முயற்சியில் முடிவான வெற்றி காண்பது சந்தேகந்தான்.

மனிதனும் ஒரு உயிர்ப் பொருள் தானே! நோய்வாய்ப்படாமல் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேணுமென்ற வகையில் ஆவன செய்யும் ஆற்றல் மனிதனின் சரீரத்திலும் இருந்தாக வேணுமல்லவா? ஆம். தன்னால் ஆன மட்டும் போராடி வியாதியைத் தடை செய்து உதவத் திடமாகமுயற்சிக்கும் இயல்பு இச்சரீரத்துக்கு இயற்கை அருளியுள்ளதோர் பேறு. அவ்வாறு வியாதியைத் தடுக்கும் சக்தியை 'ரெஸிஸ்டென்ஸ் பவர்' என்பர் மேல்நாட்டு வைத்தியம் பயின்றவர். இதை ஸஹன சக்தி அல்லது சகிப்புத்தன்மை என்று நாம் சொல்லலாம்.

அன்னை இயற்கையருளியுள்ள இச் சக்தியைப் பெருக்குவதிலும், இச் சக்தி குறையாமலிருக்க முயல்வதிலும் கவனஞ் செலுத்துவது அவசியம். நோயின் காரணமான கிருமியைக் கொல்லும் வகையைத் தெளிவதில் மட்டும் ஆராய்ச்சியாளர் தமது முழு கவனத்தையும் செலுத்தினால் போதுமா? அதை விட முக்கியமானது, ஆகவே அதிக கவனத்துக்குரியது, நமது தேகத்தின் சகிப்புத் தத்துவம். இதைக் காப்பாற்றவும், விருத்தி செய்யவும் முனைவது மிகவும் அவசியமென்பது எவ்வளவு வலியுறுத்தினாலும் மிகையாகாது. இந்தச் சகிப்புச் சக்தியைத் தக்க நிலையில் வைத்திருப்போமானால் இந்த ப்ளு

மட்டுமல்ல, இன்னும் க்ரீன், எல்லோ, வைலெட் என்று எதுவந்தாலும் தடுத்து விடலாம். அல்லது அதமபக்ஷம் சகித்துக் கொள்ளலாம்.

ஆமாம்! இந்தச் சகிப்புத்தன்மையைப் பரிபாலித்துக்கொள்வது எப்படி? முதலாவதாக அவனவனுக்கும் சாப்பிட்டுப் பழக்கப்பட்ட ஆகாரம் போதிய அளவில் கிடைக்க வேண்டும். அந்த ஆகாரம் சுத்தமானதாக இருக்க வேண்டும். 'கழுதைச் சாணமானாலும் கைநிறையக் கிடைக்கிறதே!' என்ற வகையில் உணவுப் பொருள்களை ஏற்கலாகாது. மேலும் ஆகாரத்தில் நியமமும் வேண்டும். காரியாலயத்திலிருந்து வீட்டுக்கு வரும் வழியில் காப்பி ஹோட்டலில் சென்று கண்டதையும் கேட்டதையும் தின்பது; மலிவான விலையில் கிடைக்கிறதென்று மக்கிப் போன பண்டங்களை உணவுப் பொருளாக ஏற்பது ஏன்? நாங்கள் ஏழைகள் என்பீர்கள். ஏழையாய்ப் பிறந்தது உங்கள் குற்றமல்ல உண்மை. சினிமாவுக்கு — அதிலும் குறைந்த கட்டணத்தில் சீட்டு வாங்கிச் சென்று கண்ணையும் கெடுத்துக் கொண்டு இரவு கண் விழித்துச் சகிப்புத் தன்மையைப் போக்கிக் கொள்வதுஏதனால்? 'இரவு போகவில்லை. பகல் ஆட்டத்துக்கு' என்கிறீர்களா? அது இன்னும் மோசம். இரண்டரை மணி ஆட்டத்துக்குப் பன்னிரண்டு மணிக்கே 'க்யூ'வில் நின்று தவம் புரிவது. இடுப்பில் குழந்தையையும் வைத்துக் கொண்டு தவம் புரிவது ஏன்? ஏழைமை இங்கு என்னவாயிற்று? ஹோட்டல்களும் அவசியந்தான். சினிமாக்களும் அவசியந்தான். ஆனால் அவற்றின் மூலமாக நன்மையைப் பெறுவதற்குப் பதில் தீமையைப் பெறுவோரின் போக்கையும்—அதனால் சரீரத்தின் சகிப்புத் தன்மை குறைந்து விடுவதையும் தான் சுட்டிக்காட்ட விருப்பம். இந்த அவல புத்தியையும், போக்கையும் என்னென்பது? குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வது ஏன்?

இப்படியாகப் பலவிதத்தில் நமது சகிப்புத் தன்மையை நாமே குறைத்துக் கொள்கிறோம். ஆகாரம், பானம், தினசரி அலுவல்களைக் கவனித்தல் ஆகியவற்றில் கட்டு திட்டம், ஒழுக்கம், சீலம் ஆகியவற்றை வழுவாது கடைப்பிடித்து வருவோமானால் சகிப்புத் தன்மை ரக்ஷிக்கப்படும். ப்ளு மட்டுமல்ல, கார்காலத்தின் விபவத்தால் உண்டாகும் ஏனைய வியாதிகளையும், நம்மை அண்டவொட்டாது தடுக்கலாம்.

அதெல்லாம் சரிதான். அப்படியும் மீறி வந்து விட்டாலோ என்கிறீர்களா? சொல்லி விடுகிறேன். (தொடரும்)



வீரபாண்டிய கட்டபொம்மன்

சீக்கிரமே 'சிவாஜி கணேசன்' என்ற பெயர் மாறிக் 'கட்டபொம்மு கணேசன்' என அவரை மக்கள் அழைக்கும் காலம் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. சிவாஜி நாடக மன்றத்தாரின் வீரபாண்டிய கட்டபொம்மன் நாடகத்தைப் பார்க்கும் அனைவரும் நிச்சயம் ஒப்புக் கொள்ளக்கூடிய அபிப்பிராய பேதமில்லாத அபிப்பிராயம் இது.

கணேசன் கட்டபொம்மனாக நடிக்கிறார் என்று கூறுவதைவிட, அந்தக் கதாபாத்திரமாகவே மாறி விடுகிறார் என்று சொல்லிவிடலாம். அந்த வீரக் கதாபாத்திரத்துக்கு ஏற்ற தோற்றம், தத்ரூபமான நடிப்பு, வீராவேசமாகப் பேசும் திறன் அனைத்தும் அவரிடம் ஒருங்கே அமைந்துள்ளன. இந்த நாடகத்தில் அவருடைய பேச்சுத் திறன் அத்தனையும் நன்கு வெளிப்படும் முறையில் வசனங்கள் அமைந்திருக்கின்றன. கடல் மடை திறந்தாற் போல் வசனங்களை அள்ளி வீசி ஆவேசமாக நடித்து 'அப்ளாஸ்' பெற்று விடுகிறார். நாடகத்தில் எந்த இடத்தில் அவர் நடிப்பு பிரமாதமாக இருந்தது என்று சொல்லுவது கடினம்; காரணம், எல்லாக் காட்சிகளிலும் கட்டங்களிலும் அவர் திறமை சிறந்து காணப்படுவதே.

சுதந்திரத்தைப் பற்றி மக்கள் ஏதும் அறியாமல் இருந்த காலத்தில், வீரபாண்டியக் கட்டபொம்மன் மக்களை யெல்லாம் சுதந்திர வீறு கொண்டு எழச் செய்து நாடு முழுவதும் விடுதலை உணர்ச்சிக்கு வித்தூன்றிய மாபெரும் வீரன். அவன் சரித்திரத்தை அறியாதவர்கள் நம்முடைய நாட்டில் யாரும் இல்லை. அவனுடைய வீர வரலாறு தமிழகத்தின் சரித்திர ஏட்டில் பொன்னெழுத்தில் பொறித்து வைக்கத் தகுந்ததாகும்.

நம் நாட்டிலிருந்து அன்னியரை வெளியேற்ற 'முதல் முழக்கம்' செய்த மாபெரும் வீரனை பாஞ்சாலங்குறிச்சி மன்னனின் வரலாற்றைச் சக்தி கிருஷ்ணசாமி நாடகமாக்கி வசனங்களை எழுதியிருக்கிறார். பாராட்ட வேண்டிய நல்ல முயற்சிதான்.

வீரத்துக்கே அதிகப்பிராதான்யம் கொடுக்கப்பட வேண்டிய இந்த நாடகத்தில் அதற்குச் சமமாக ஹாஸ்யம், காதல் கட்டங்களுக்கும் இடம் அளித்திருப்பதைப் பார்க்கும் போது, ''கட்டபொம்மன் வாழ்க்கை வரலாற்றில் அதிக சம்பவங்கள் இல்லை; அது தான் இப்படி வளர்த்துகிறார்கள் போலும்'' என்ற காரணமற்ற ஐயமே ஏற்படுகிறது.

ஒரே பெண்ணை இரண்டு வீரர்கள் காதலிப்பது, அவர்கள் இருவருக்குமிடையே அப்பெண் சண்டை மூட்டி விடுவது—இப்படியான காட்சிகளைப் பார்த்து மக்கள் அலுத்துச் சலித்து வெறுத்து விட்டார்கள் என்பதை நாடக ஆசிரியர் மறந்திருக்கக் கூடாது. முதல் முழக்கம் செய்த ஒரு வீரத் தமிழனின் கதையிலே இப்படிப்பட்ட காட்சிகளைப் பார்க்கும் போது அருவருப்பே ஏற்படுகிறது.

விறுவிறுப்பாகப் போய்க் கொண்டிருக்கும் நாடகம், இம்மாதிரி காட்சிகளினால், வேகமாக வந்துகொண்டிருக்கும் மெயில் வண்டி, கைகாட்டி இறங்காததால் தடைபட்டு நிற்கும் நிலையை அடைந்து விடுகிறது. காதல் பிரச்னை — ஹாஸ்ய கட்டத்தில் வரும் சம்பாஷணைகளை அவ்வளவாக ரசிக்க முடியவில்லை. ''முழுகாமல் இருக்கிறேன்'' என்று கூறும் வசனங்களையும் அந்தக் காட்சிகளையும் தவிர்த்தால், நல்ல நாடகத்தில் வரும் இம்மாதிரி இரண்டொரு விரசமான

சம்பவங்கள் அடிபட்டுப் போகும். அத்துடன் நாடக நேரமும் கணிசமாகக் குறைந்து விடும்.

மற்றொரு குறை! பிரித்தாளும் கொள்கையை வெற்றிகரமாகச் செய்து முடித்த பிரபல ராஜதந்திரிகளான ஆலன், ஜாக்ஸன், பானர்மன் ஆகிய கதாபாத்திரங்களை வெறும் பொழுது போக்கும் கோமாளிகளாகச் சித்திரித்திருப்பதாகும். இந்த ஆங்கிலக் கதா பாத்திரங்கள் பேசும் தமிழிலும் சற்று அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த இடங்கள் வரும்பொழுது நாடகத்தின் நல்ல வேகம் வெகுவாகத் தடைபட்டுப் போகிறது. கட்டபொம்மன் வீரத்தையும் உணர்ந்து பாராட்ட முடியாமல் செய்து விடுகிறது. ஜாக்ஸன், பானர்மென் போன்றவர்களை இரக்கமில்லாத அரக்க குணம் படைத்த முரடர்களாகவும் அதே சமயத்தில் அவர்கள் தமிழ்நாட்டைத் தங்கள் கைக்குள் கொண்டு வர முயற்சிக்கும் சிறந்த ராஜதந்திரிகளாகவும் செய்திருக்க வேண்டும். இது தான் சரித்திரமும் கூட. இப்படிச் செய்தால் தான் கட்டபொம்மனின் உண்மை வீரத்தை உணர்ந்து நாடகமாக்கியதாகும்.

நாடகத்தின் தன்மைக்கு ஏற்றபடி வசனங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. வசனங்கள் சிறப்பாக இருக்கின்றன. என்றாலும் சில கட்டங்களில், சில கதா பாத்திரங்களுக்கு அளவற்று அவசியமில்லாமல் இருப்பதால் வீண் வார்த்தைப் பந்தலாகவே படுகிறது. சில கதா பாத்திரங்கள் பேசுவதைப் பார்க்கும்போது நம்முடைய வாயே வலிப்பது போன்று உணர்ச்சி ஏற்படுகிறது. பால் கோவாவைச் சுவைக்கும் போது பொடிக்கல் ஒன்று தட்டுப்பட்டது போல, தூய தமிழ் வசனத்தின் இடையே வேறு மொழிச் சொற்கள் சில புகுந்து மிகவும் சிரமப் படுத்திக் கொண்டிருக்கின்றன.

இவை போன்ற பல குறைபாடுகள் இருந்தாலும் நாடகம் மிக நன்றாக அமைந்திருக்கிறது என்பதுதான் நாடக ரஸிகர்கள் எல்லாரும் சொல்லும் ஏகோபித்த அபிப்பிராயம்.

இந்த நாடகத்தின் வெற்றிக்கு ஜீவநாடியாக இருக்கிறது நடிப்பு என்ற அம்சம்தான். தானாபதிப் பிள்ளையாக நடித்த எம். ஆர் சந்தானமும், ஊமைத்துரையாக வந்த முத்து கிருஷ்ணனும் உணர்ச்சியுடனும் வீராவேசத்துடனும் நடித்துள்ளனர். சக்கம்மாளாக நடிக்கும் ரத்னமாலா, மிகவும் உணர்ச்சியுடன் நடிக்கிறார். ஊமைத்துரையின் மனைவியாகவரும் தாம்பரம் லலிதா வீராவேசமுள்ள தமிழச்சியாக உணர்ச்சியுடன் பேசுகிறார்; பிரமாதமாக நடிக்கிறார்; அருமையாக வாள் போர் புரிகிறார்; கவர்ச்சியாக ஆடுகிறார்.

சுருங்கச் சொல்ல வேண்டுமானால், இந்த நாடகத்தில் குறும்பன் முதல் கட்டபொம்மன் உள்பட அனைவருமே தம் தம் பாத்திரத்தை உணர்ந்து சிறப்புடன் நடிக்கின்றனர்.

நடிப்புக்கு அடுத்தபடி குறிப்பிடத் தக்க சிறந்த அம்சம் காட்சி ஜோடனைகளாகும். கோட்டை கொத்தளங்களையும், தர்பார்களையும் மேடைமீது தத்ரூபமாகக் காட்டியிருக்கிறார்கள். மேகங்களிடையே தவழும் முழுமதியுடன் கூடிய ஒரு காட்சி ரொம்பப் பிரமாதம். நாடக ஆரம்பத்தில் அதைப் பற்றிய அறிவிப்புகள் தெரிவிக்கக் கையாளப் படும் முறை நூதனமாக இருக்கிறது.

நாடக பாத்திரங்களின் உடைகள் விஷயத்தில் நல்ல கவனம் செலுத்தி ஏராளமான உடைகளைத் தயாரித்திருக்கிறார்கள். அந்த உடை அமைப்பு நம்மைக் கட்டபொம்மன் காலத்துக்கு அழைத்துச் சென்று விடுகிறது.

காட்சி மாற்றத்துக்கு இடையே அதிகமாகத் தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும். பல சம்பவங்களை மேடைமீது காட்சிகளாக அமைத்துக் காட்டாமல் திரையை விட்டு விட்டுச் சொல்லி முடிப்பதை முடிந்த வரையில் குறைக்க வேண்டும்.


ஏராளமான பொருட்செலவிலே இந்த நாடகத்தை உருவாக்கியிருக்கும் சிவாஜி நாடக மன்றத்தினருக்கு இது ஒரு மகத்தான வெற்றியே. இந்த நாடகத்தில் ஆங்காங்கு இருக்கும் தவிர்க்கக் கூடிய சில குறைகளை நிவர்த்தி செய்து விட்டால் இந்த நாடகத்தின் மூலம் நாட்டுக்கு நல்ல தொண்டு ஒன்று செய்ததாக அவர்கள் பெருமைப் பட்டுக் கொள்ளலாம். —ஜாம்பவான்




கோடக் பிலிம்கள் உபயோகித்தால்
வர்ணப் படங்கள் எடுப்பது

எந்தக் காமிராவானாலும் சரி, கோடக் வர்ண பிலிம் கொண்டு, சாதாரண படங்கள் எடுப்பதுபோல், கவர்ச்சிகரமான வர்ணப் படங்களை சுலபமாக எடுக்கலாம். பல வருஷ அனுபவத்தின் பலனாகத் தயாரான 'கோடக்ரோம்' பிலிம் மினியேச்சர் காமிராக்கள் மற்றும் ஹோம் மூவிகளுக்கும், புதிய, அற்புதமான வேகமுள்ள 'எக்டாக்ரோம்' பிலிம் ஸ்டாண்டார்ட் ஸைஸ் காமிராக்களுக்கும் ஏற்றது.

அடுத்த தடவை கோடக் வர்ண பிலிம்களை உபயோகித்து, அற்புதமான படங்கள் எடுத்து மகிழுங்கள்!



'எக்டாக்ரோம்' பிலிம்
சாதாரண பிலிம் ஸைஸ்களான, 135, 120 மற்றும் 620 ஸைஸ் சுருள்களாகக் கிடைக்கும். மற்றும் கட் பிலிம் ஸைஸ்களிலும் கூட கிடைக்கும்



'கோடக்ரோம்' பிலிம்
மினியேச்சர் காமிராக்களுக்கு ஏற்ற 135 ஸைஸிலும், ஹோம் மூவிகளுக்கு 8 மில்லி மீட்டர் மற்றும் 16 மில்லி மீட்டர் ஸைஸ்களிலும் கிடைக்கும்

கோடக் லிமிடெட்

(இங்கிலாந்தில் இணைக்கப் பெற்றது. கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

பம்பாய் - கல்கத்தா - டில்லி - மதராஸ்

நம்பகமான 'கோடக்' காமிரா மூலம் நீங்கள் எப்



புகழ்பெற்ற தொழில் சிற்பி

"நீலன்"

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் அதிசயமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. 1908-ம் வருஷம் பிப்ரவரி மாதம் இந்தியர்களும் ஐரோப்பியர்களும் அடங்கிய ஒரு சிறு கோஷ்டியினர் சாக்சி என்ற சிறிய கிராமத்துக்குத் திடீரென்று போய்ச் சேர்ந்தார்கள்.

அந்தக் கிராமம் கல்கத்தாவுக்கு மேற்கே நூற்றைம்பது மைல் தூரத்தில் இருக்கிறது. அக்காலத்தில் போதிய போக்குவரத்து சாதனங்கள் இல்லாததால், அந்த அதிசய மனிதர்கள் கிடைத்த சாதனங்களில் ஏறிக்கொண்டு அங்கு சென்றார்கள். சிலர் யானை மீது ஏறிச் சென்றார்கள். சிலர் மாட்டு வண்டிகளிலும், டோங்கா வண்டிகளிலும் போய்ச் சேர்ந்தார்கள். மற்றவர்கள் குதிரைகள் மீதும் காளை மாடுகள் மீதும் சவாரி செய்து கொண்டு சென்றார்கள்.

அவர்கள் ஏன் அந்தக் கிராமத்துக்குச் சென்றார்கள்? அவர்களுடைய லட்சியம் என்ன? இவையெல்லாம் நம்ப முடியாத, விசித்திரமான ஒரு கதையாகும்.

இந்தியாவிலேயே முதன் முதலாக இரும்பு, எஃகுத் தொழிற்சாலை ஒன்றை அக் கிராமத்தில் அமைக்கும் நோக்கத்துடனேயே அவர்கள் அங்கு சென்றார்கள். இந்தியாவில் நவீன முறையில் இரும்பு உற்பத்தி செய்ய அதற்கு முன்பும் பல தடவை முயற்சிகள் நடந்தன. அவற்றில் சில விற்பனை செய்வதற்கு உகந்த உருக்கு இரும்பு உற்பத்தி செய்வதில் ஓரளவும் வெற்றியும் பெற்றன. எனினும் வங்காள இரும்புத் தொழிற்சாலையைத் தவிர வேறு எதுவும் அதிக காலம் நீடிக்க முடியவில்லை.

கடைசியில் ஒரு மனிதரின் துணிச்சலும் தீர்க்க தரிசனமும் இந்தியாவிலே மிகச் சிறந்த இரும்பு எஃகுத் தொழிற்சாலை ஒன்றை உருவாக்குவதற்கு உதவியாக இருந்தன. அவர் தான் பாரதநாட்டு மக்கள் யாவரும் போற்றிப் பாராட்டும் தொழில் சிற்பியான ஜேம்செத்ஜி நஸ்ஸர்வான்ஜி டாடா.

* * *

ஒரு ஜெர்மன் பூதத்துவநிபுணர் கூறியதை ஆதாரமாகக் கொண்டு டாடா, மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த சண்டா ஜில்லாவில் இரும்புக் கனி கண்டுபிடிக்கும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டார். அவ்விஷயமாகப் பிரபல அமெரிக்க இன்ஜினீரான சார்லஸ் பெரின் என்ற நிபுணரின் உதவியை ஜேம்செத்ஜி நாடினார். பெரினின் உதவியாளரான சி. எம். வெல்ட் இந்தியாவுக்கு வந்து இரும்புச் சுரங்க ஆராய்ச்சியைத் தொடங்கினார்.

ஆனால், அவரது முயற்சி பலனைக் கொடுக்கவில்லை. எனவே, ஜேம்செத்ஜி டாடாவின் புதல்வரான தோராப்ஜி டாடா, இரும்புச் சுரங்கம் வெட்டுவதற்காகத் தாம் பெற்றிருந்த லைசன்ஸைத் திருப்பிச் சர்க்காரிடம் கொடுத்து விடத் தீர்மானித்தார்.

இந்தியாவின் கைத்தொழில் சரித்திரத்தையே மாற்றி அமைக்கக் கூடிய தமது முயற்சி வெற்றி பெறாததைக் கண்டு தோராப்ஜி டாடா சோகத்துடன் உட்கார்ந்து கொண்டிருக்கையில், திடீரென்று அவரது கவனம் தமது காரியாலயத்தின் சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு படத்தை நோக்கிச் சென்றது. குறிப்பாக, அந்தப் படத்தில் இருந்த ஒரு சிவப்புப் புள்ளி அவரது கவனத்தை இழுத்தது. இந்திய பூதத்துவ ஆராய்ச்சி இலாகாவைச் சேர்ந்த ஸ்ரீ பி. என். போஸ் என்ற நிபுணர், பூமிக்குள் இரும்பு ஏராளமாகக் கிடைக்கும் இடத்தை அவ்விதம் சிவப்புப் புள்ளியால் அடையாளமிட்டிருந்தார்.

அதைப் பார்த்ததும் சோர்ந்திருந்த தோராப்ஜி டாடாவின் கண்களில் ஒளி வீசத் தொடங்கியது. உடனே அவர் லைசன்ஸைத் திருப்பி அனுப்பாமல் பத்திரமாக மடித்துச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டார். வெல்ட் என்ற அமெரிக்க நிபுணருடன் இரும்பு இருக்குமிடத்தைத் தேட முற்பட்டார். கடைசியில் அம் முயற்சியில் அமோகமான வெற்றியும் பெற்றார்.

படத்தில் சிவப்புப் புள்ளி அடையாளமிடப்பட்டிருந்த பிரதேசத்தைத் தோண்டி ஆராய்ச்சி செய்தபோது, பூமிக்குள் மலை மலையாக இரும்பு உலோகம் இருப்பதைக்

கண்டு பிடித்தனர். அவை உலகத்திலே கிடைப்பதற்கரிய சிறந்த ரக இரும்பாக இருப்பதைக் கண்ட அவர்கள் பிரமித்து விட்டார்கள். அங்குள்ள பாறைகளில் எழுபது சத விகிதம் இரும்பு இருந்தது அவர்களுடைய வியப்பை மேலும் அதிகப்படுத்தியது. அந்தச் சுரங்கத்துக்கு அமெரிக்க நிபுணர் ஸ்ரீ பெரின் விஜயம் செய்தபோது, அது உலகிப்ல உள்ள சுரங்க அதிசயங்களில் ஒன்று என்று கூறி ஆச்சரியத்தில் ஆழ்ந்தார். இவ்விதமாக இந்தியா எஃகு உற்பத்தியில் சிறந்து விளங்க முடியும் என்பது ருஜுவாகியது.

இன்று பிலே என்னுமிடத்தில் உள்ள சர்க்கார் எஃகுத் தொழிற்சாலைக்குத்தேவையான இரும்புக் கனியை, முன்னர் டாடா நிபுணர்கள் கண்டு பிடித்த மேற்படி சுரங்கங்களில் இருந்தே எடுக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்.


எஃகு உற்பத்திக்கு இரும்புக் கனி மாத்திரம் இருந்தால் போதாது; சிறந்த ரகமுள்ள கட்ட நிலக்கரியும் சுக்கான் கல்லும் அத்தியாவசிய மானவை. அதே பிரதேசத்தில் அந்த இரண்டு சாதனங்களும் ஏராளமாக இருப்பதைப் பூதத்துவ நிபுணர்களான ஸ்ரீனிவாசராவ், வியாசராவ் இருவரும் கண்டு பிடித்தார்கள்.

எஃகுத் தொழிற்சாலையை அமைக்க மேற்படி சாதனங்கள் மாத்திரம் போதுமா? தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்கான வசதிகள் வாய்ந்த பிரதேசமும் அவசியம் அல்லவா? அடுத்தபடியாக நிபுணர்கள் அந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டார்கள்.

கல்கத்தாவிலிருந்து பம்பாய் செல்லும் ரயில் பாதையில் ஸினி என்று ஒரு ஜங்ஷன் இருக்கிறது. இரும்புக் கனி, கட்ட நிலக்கரி,



பழுக்கக் காய்ந்த இரும்பிலிருந்து கண்ணைப் பறிக்கும் துகள்கள் பறக்கின்றன.



தொழிற்சாலையின் புகைமயமான ஒரு தோற்றம்

சுக்காங்கல் இந்த மூன்று சாதனங்களும் உற்பத்தியாகும் பிரதேசத்துக்கு வெகு சமீபத்தில் அது இருப்பதால், அந்த ஊரே இரும்புத் தொழிற்சாலையை அமைப்பதற்குச் சரியான இடம் என்று கருதினர்.

ஆனால், அங்கு மேற்படி தொழிற்சாலையை அமைக்க ஒரு பெரும் தடை இருந்தது. அத்தொழிற்சாலை அமைப்பதற்கு அதிகத் தண்ணீர் வசதி வேண்டும். ஸினியில் தண்ணீர் வசதி இல்லை. ஸினிக்கு வெகு சமீபத்தில் ஸாக்சி என்ற கிராமம் இருப்பதையும், அந்தக் கிராமத்தில் கார்க்காய், சுவர்ணரேகா என்ற இரு நதிகளும் சந்திப்பதையும் நிபுணர் வெல்ட் அறிந்து கொண்டார்.

அதன் பலனாக ஸாக்சி கிராமத்துக்கு அதிர்ஷ்டம் அடித்தது. அங்கு முதன் முதலாக இரண்டு கோடி ரூபாய் மூலதனத்தில் ஆரம்பிக்கப்பட்ட டாடா இரும்பு, எஃகுத் தொழிற்சாலைதான் இன்று உலகப் பிரசித்தி பெற்று விளங்குகிறது.

அது ஆரம்பிக்கப்பட்டபோது அத்திட்டத்துக்குப் பிரிட்டிஷ் முதலாளிகள் பணம் போட மறுத்து விட்டதால், சுதேசி உணர்ச்சியுள்ள சுமார் எண்ணாயிரம் இந்தியர்கள் பங்குதாரர்களாகச் சேர்ந்து தேவையான மூலதனம் முழுவதும் வழங்கி விட்டார்கள்.

இந்தியர்களின் முயற்சியினாலும் மூலதனத்தினாலும் ஆரம்பிக்கப்பட்ட டாடா தொழிற்சாலை பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் அதிக அநுதாபத்தையோ ஆதரவையோ பெறமுடியவில்லை. இந்தியாவில் எஃகு உற்பத்தி செய்ய முடியுமா என்று கூறி அவர்கள் ஏளனம் செய்தனர். எஃகு உற்பத்தி செய்வதற்கான சாதனங்களோ, தொழில் நுணுக்கம் தெரிந்த நிபுணர்

நீரிழிவு

குணமாகும்

சிறு நீரில் சர்க்கரை காண்பது நீரிழிவு (DIABETES) நோயின் முக்கிய அறிகுறி. உங்களுக்குப் பசியும் தாகமும் அதிகமாயிருந்தாலும், உடல் உருகிக் கொண்டு வந்தாலும் அடிக்கடி நீர் இறங்கினாலும் உங்களுக்கு நீரிழிவு நோய் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இக் கொடிய உடல் உருக்கி நோய், தான் பற்றினவர்களைக் கடைசி மூச்சு உள்ள வரையில் விடுவதில்லை; கொஞ்சம் கொஞ்சமாக அவர்களை மரண வாயிலுக்கு இழுத்துச் செல்லும். நீரிழிவு வியாதியைக் குணப்படுத்த இஞ்செக்ஷன்கள் போடப்படுகின்றன; ஆனால் அவற்றினால் வியாதி கொஞ்சமும் குணமாவதில்லை. இஞ்செக்ஷன்கள் நீரில் சர்க்கரையைக் குறைக்கின்றன — அதுவும் மருந்துச் சக்தி உள்ள வரையில்தான். ஆகவே, உபாதைகளைத் தடுக்க வாழ்நாள் முழுவதும் ஊசிகள் போட வேண்டியதுதான். இதனால் அதிகச் செலவு ஏற்படுவதோடு கஷ்டமும் உண்டாகிறது. நோய் குணப்படுத்தாது போனால் நீங்கள் புண்களினாலும், கண் நோய், பல் நோய், வயிற்றுக் கோளாறு முதலிய பலவித வேதனைகளால் சிரமப்பட நேருகிறது.

நீரிழிவு வியாதியை, வீனஸ் சார்ம் மாத்திரைகளை உபயோகித்து, சிக்கனமாகவும், சுலபமாகவும் நிச்சயமாகவும், பத்திரமாகவும் சிகிச்சை பெறுங்கள்.

பண்டைக்கால புனுனி வைத்திய முறைகளைக் கொண்டு, அரிய மூலிகைகளின் சேர்க்கையுடன் தயார் செய்யப்படும் வீனஸ் சார்ம் மாத்திரைகள், நோயை அடியோடு அகற்றுவதுடன், எத்தனையோ பேர்களை இஞ்செக்ஷன் அல்லது ஒருவிதமான பட்டினி இல்லாமல் குணமாக்கியிருக்கிறது. இதை உபயோகித்துப் பல ஆயிரக் கணக்கானவர்கள், இந்நோயின் மரணப் பிடியிலிருந்து தப்பியிருக்கிறார்கள். இம் மருந்தை உபயோகிக்கத் தொடங்கிய இரண்டு மூன்று நாட்களுக்கெல்லாம், நீரில் சர்க்கரை குறைகிறது; அத்துடன் அதிக நீர் இறங்குவதும் நிற்கிறது. சில நாட்கள் உபயோகித்தாலே நோய் தணிந்து திருப்தி ஏற்படுகிறது. வீட்டிலிருந்தபடி வீனஸ் சார்ம் சிகிச்சையைத் துவங்குங்கள். விசேஷ பத்தியம் எதுவும் இல்லை. நீங்களே அதன் குணத்தை அறிவீர்கள். இதுபற்றிய விரிவான இலவச ஆங்கிலப் பிரசுரத்தை வரவழைத்துப் பாருங்கள்.

50 மாத்திரைகள் கொண்ட புட்டி ஒன்றின் விலை 6-12-0

(பாக்கிங் தபால் செலவு இனாம்)

வீனஸ் ரிஸர்ச் லாபரேட்டரி (K. M.)

தபால் பெட்டி நெ. 687 கல்கத்தா



நரஸூ

காபி

அருந்தி அதன்

பிரத்யேகமான


ருசியை


அனுபவியுங்கள்

நரஸூஸ் மான்யுபாக்சரிங்

கோ. பிரைவேட் லிட்.,

சேலம் & சென்னை





அச்சு உருளைகள் வார்க்கப்படுகின்றன. எஃகு உற்பத்திக்கு இன்றியமையாத நிலக்கரி அடுப்புகள்.

களோ இந்தியாவில் இல்லை என்பது அவர்களுடைய அபிப்பிராயம்.

1912-ல் எஃகுத் தொழிற்சாலை இயங்கத் தொடங்கியது. 1916-ம் வருஷத்துக்குள் யுத்தகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கேற்றவாறு அது வளர்ச்சி அடைந்துவிட்டது. அதற்காக வெகு தூரத்துக்குக் காடுகளை வெட்டி, புதிதாக ரஸ்தாக்கள், வீடுகள், மார்க்கெட்டுகள், ஆஸ்பத்திரிகள், கல்விசாலைகள் முதலியன நிர்மாணித்தனர்.

மேற்படி தொழிற்சாலையை ஸ்தாபித்தவர்கள் அங்கு வேலைசெய்யும் தொழிலாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டார்கள். ஜாக்ஷி, சகல நவீன வசதிகளும், சிறப்பும் பொருந்திய முன்னுதாரணமான நகரமாகத் திகழ வேண்டும் என்பதில் அவர்கள் ஆரம்பம் முதற் கொண்டே மிகுந்த சிரத்தை கொண்டார்கள். அது டாடா கம்பெனியின் முக்கிய கொள்கையாயிற்று. ஜாக்ஷியைச் சிறந்த நகரமாக உருவாக்குவதற்காக வெளி நாடுகளிலிருந்து உலகப் புகழ் பெற்ற நிபுணர்கள் தருவிக்கப்பட்டார்கள். அங்கு சமுதாய நல அபிவிருத்தி வேலைகளில் தக்கர் பாபா போன்ற தலைவர்கள் பங்கு எடுத்துக் கொண்டார்கள். சிட்னி, பீட்ரிஸ் வெப், பேராசிரியர்கள் எல். டி. ஹாம் ஹவுஸ், அர்விக், டாக்டர் ஹெராால்டு மான் முதலிய வெளிநாட்டு நிபுணர்களும் உதவி புரிந்தனர். இவர்கள் எல்லாருடைய தொண்டும் சேர்ந்து சாக்ஷி கிராமத்தின் உருவத்தையே மாற்றி விட்டது. அதாவது அன்று பொட்டலாகவும் காடாகவும் கிடந்த சாக்ஷி இன்று அற்புதமான ஒரு நவீன நகரமாகக் காட்சியளிக்கிறது.

*　　*　　*

முதலாவது மகாயுத்தம் நடந்து கொண்டிருந்தபோதே விரிவான முறையில் ஜாக்ஷி நகர், தொழிற்சாலை அபிவிருத்தித் திட்டம் கைக் கொள்ளப்பட்டது. ஆனால் அத்திட்டம் பூர்த்தியாவதற்குமுன் பயங்கரமான பொருளாதார மந்தம் தலைதூக்கத் தொடங்கியது. எஃகுக்குக் கிராக்கியே இராமற் போயிற்று. டிவிடண்ட் தொகை வருஷத்துக்கு வருஷம் குறைந்து, 1922—23-ல் டிவிடண்ட் தொகை கொடுக்க முடியாமலே போய் விட்டது.

1929-ம் வருஷம் பொருளாதார நெருக்கடி முற்றியதன் விளைவாக, பாரத நாட்டில் பல பிரும்மாண்டமான தொழில் துறைகள் அடியோடு நசித்துப் போய் விட்டன.

ஆனால் டாடா தொழிற்சாலை ஸ்தாபகர்களின் தைரியத்தினாலும் தீர்க்கதரிசனத்தினாலும் அந்தப் பெரும் நெருக்கடியை டாடா தொழிற்சாலை வெற்றிகரமாகச் சமாளிப்பது சாத்தியமாயிற்று. அது மாத்திரமல்ல, அவர்கள் தங்கள் அபிவிருத்தித் திட்டத்தை மீண்டும் மேற்கொண்டு, அதை நிறைவேற்றுவதிலும் வெற்றி பெற்றனர். உலக சரித்திரத்திலேயே கண்டிராத பொருளாதார நெருக்கடியைச் சமாளித்து அவர்கள் முன்னேறியது அதிசயிக்கத் தக்க ஒரு சாதனை என்பதில் சந்தேகமில்லை.

அதன் பிறகுதான், டாடா தொழிற்சாலைக்கு அழியாப் புகழைத் தேடிக் கொடுத்த சம்பவம் நிகழ்ந்தது. அதாவது ஹூக்ளி நதியில் பிரும்மாண்டமான ஹௌரா பாலத்தை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தம் செய்துகொள்ளப் பிரிட்டனும் அமெரிக்காவும் போட்டியிட்டன. ஆனால், அந்தப் போட்டியில் டாடா தொழிற்சாலையும் போட்டியிட்டதால் அதன் சம்பந்தமான 'கண்டிராக்ட்' மேற்படி தொழிற்சாலைக்கே கிடைத்தது. மற்றும் பர்மாவில் உள்ள ஐராவதி நதியில் பாலம் கட்டும் பணியையும், ரங்கூனுக்கு அருகில் குழாய்கள் அமைக்கும் பொறுப்பையும் டாடா தொழிற்சாலை ஏற்றுக் கொண்டது.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது டாடா தொழிற்சாலையில் 110 தினுசான விசேஷ எஃகுத் தகடுகள் உற்பத்தியாயின எனில், அத் தொழிற்சாலையின் சிறப்பையும் முன்னேற்றத்தையும் அறிந்து கொள்ளலாம். அப்போது அங்கு ரயில்வே இஞ்ஜின்களுக்குத் தேவையான சக்கரங்கள், டயர்கள், அச்சு உருளைகள், மின்சார எஃகுத் தகடுகள் உற்பத்தியாகத் தொடங்கின.

1953ல் டாடா தொழிற்சாலையில் இருபத்தைந்து கோடி ரூபாய் செலவில் சுமார் பத்து லட்சம் டன் எஃகுப் பாளங்கள் உற்பத்தி செய்வதற்கான திட்டம் வகுக்கப்பட்டது. அதற்காக இந்திய சர்க்கார் வட்டியின்றிப் பத்து கோடி ரூபாய் கடன் கொடுத்து உதவ முன் வந்தனர்.

பிறகு 1956ல் மேற்படி தொழிற்சாலை எழுபத்தைந்து கோடி ரூபாய் செலவில் இருபது லட்சம் எஃகுப் பாளங்கள் உற்பத்தி செய்யத் திட்டம் வகுத்தது. இத்திட்டம் 1958 மே மாதம் பூர்த்தியாகும்.

இவ்விதமாக, காமன்வெல்த் நாடுகளுக்குள் ளேயே டாடா தொழிற்சாலைதான் மிகப் பெரிய தொழிற்சாலையாக விளங்குகிறது.

காடுகளை அழித்து நிர்மாணிக்கப்பட்ட ஸாக்சி என்ற சிறிய கிராமம் இன்று சுமார் மூன்று லட்சம் மக்கள் வாழும் உலகப் புகழ்பெற்ற அதிசயத் தொழில் நகரமாக விளங்குகிறது.

டாடா தொழிற்சாலைக்குச் சொந்தமாக ஏராளமான இரும்புக் கனிச் சுரங்கங்கள், நிலக்கரிச் சுரங்கங்கள், மாங்கனீஸ் சுரங்கங்கள், சுக்காங்கல் பிரதேசங்கள் முதலியவையும் இருக்கின்றன. எனவே, மேற்படி தொழிற்சாலைக்குத் தேவையான மூலப் பொருள்களுக்கு வெளி இடங்களின் தயவை நாடவேண்டிய அவசியமே இல்லை. இது தான், டாடா தொழிற்சாலையின் முன்னேற்றத்துக்கும் செல்வாக்குக்கும் முக்கிய காரணமாகும். எவ்வளவு சிறந்த தொழிற்சாலையாக இருப்பினும், மூலப் பொருள்கள் போதிய அளவு கிடைக்காவிடில், என்ன செய்ய முடியும்? மூலப் பொருள்கள் இராமல் யந்திரங்கள் துருப் பிடிக்கும்படி தேர்ந்து விடலாம் அல்லவா?

ஐம்பது ஆண்டுகளுக்குமுன் ஜெம்ஷெத்ஜி டாடா விதைத்த விதை இன்று இரும்பு, எஃகுச் சாதனங்கள் சம்பந்தப்பட்ட வரையில் இந்தியாவின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு அபிவிருத்தி யடைந்திருக்கிறது. இது, சுதந்திர இந்தியா பெருமிதம் கொள்ளவேண்டிய விஷயம் அல்லவா?

தீரர் சத்தியமூர்த்தியின் நினைவு மலர்கள்

சரித்திரத்திலே "அசோக சக்கரவர்த்தி ஆண்ட காலம்" என்றும் "அக்பர் சக்கரவர்த்தி ஆண்ட காலம்" என்றும் பெருமையாகச் சொல்லப் படுவதுண்டு. அவர்கள் காலத்தில் நாட்டில் சுபிட்சமும் சந்தோஷமும் அவ்வளவு நிலவியது! அதேபோல் சென்னை நகர மன்றத்தின் சரித்திரத்திலே, அப்படிப் பட்ட பெருமையும் புகழும் பெற்று விளங்கிய காலம் ஒன்று உண்டு என்றால், தீரர் சத்திய மூர்த்தி, மேயர் பதவி வகித்த காலந்தான்!

மேயர் பதவி காலம் முடிவுற்றபோது ஸ்ரீ சத்தியமூர்த்தி நிகழ்த்திய அரும் பிரசங்கத்தைப் படிப்போர் அவரது உழைப்பையும் உற்சாகத்தையும் ஜனநாயகப் பண்பையும் நன்கு உணரலாம்.

"மக்களுக்குப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள், தாங்கள் செய்து வரும் வேலைகளைப் பற்றி அடிக்கடி அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியம். நான் மேயராக வந்து ஆறு மாதத்துக்குள்ளாகவே புதிய மேயர் விஷயமாகப் போட்டிகள் ஆரம்பித்துவிட்டன. அதனால்தான் நான் போட்டி போடாமல் விலகிக் கொள்கிறேன். சென்ற 365 நாட்களில் ஒவ்வொரு தினமும் 8-மணி முதல் 10-மணி நேரம் வரையில் வேலை செய்து வந்திருக்கிறேன். என் வயதுக்கு அது எளிதல்ல. "நகரின் முதல் பிரஜை" என்பதை "நகரின் முதல் தொண்டர்" என்று மாற்றிவிட்டேன். நகரசபை அங்கத்தினர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து நடக்க வேண்டும். நகரின் முக்கிய தேவைகளான தண்ணீர் விநியோகம், ரஸ்தா வசதிகள், சேரிகள் ஒழிப்பு இவைகளில் கவனம் செலுத்தவேண்டும்."



திரு சத்தியமூர்த்தி

தீரர் சத்திய மூர்த்தி மேயராகப் பதவி வகித்தபோதுதான், சென்னை நகர மக்களின் நீண்ட நாள் தண்ணீர் கஷ்டத்தைப் போக்கப் பூண்டி நீர்தேக்கத்துக்கு அஸ்திவாரமிட்டார். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குள் சத்தியமூர்த்தி பல இடையூறுகளைக் கடக்க வேண்டியிருந்தது. சத்தியமூர்த்தியின் தீரம் அந்த இடையூறுகளுக்கு நல்லபடியாக ஈடு கொடுத்து வெற்றி கொண்டது. அதன் பயனாக இன்று சென்னை மக்கள் கோடை காலத்தில் தண்ணீர் அருந்தும் போதெல்லாம் அந்த உத்தமரை நினைக்காமல் இருப்பதில்லை.

சென்னை நகரத் தெருக்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ள மக்களிடையே ஒரு புது உணர்ச்சியை உண்டாக்கியவர் சத்தியமூர்த்திதான். அதற்காக அவர் ஒரு இயக்கமே நடத்தினார்.

இப்படி சத்தியமூர்த்தி ஓராண்டு காலத்தில் சாதித்த சாதனைகளையெல்லாம் நினைத்துப் பார்த்தால் பிரமிப்பூட்டும். தீரர் சத்திய மூர்த்தி மேயர் பதவி வகித்த காலத்தில் நடத்திய நகரசபைக் கூட்டங்கள், நிகழ்த்திய பிரசங்கங்கள், எழுதிய கட்டுரைகள் அனுப்பிய அருமையான வாழ்த்துச் செய்திகள் எல்லாம் இரட்டி அழகான மலர்களாகச் சென்னை நகரசபையார் வெளியிட்டிருக்கிறார்கள். இம்மலர்களில் ஏராளமான புகைப்படங்களும், கார்ட்டூன் படங்களும் இடம் பெற்றுள்ளன. முதல் தொகுதியின் அட்டைப்படமாகச் சத்தியமூர்த்தி தம்பதிகள் விளங்குகிறார்கள்.

சென்னை நகரசபையின் சரித்திரத்தில் புகழுடன் விளங்கிய சத்தியமூர்த்திக்குச் சென்னை நகர சபை நல்ல காணிக்கை செலுத்தி யிருக்கிறது. இது வருங்கால மேயர்களுக்கு மிகவும் உற்சாகமளிக்கும்.

மாதர்குல திலகங்கள்



ராணி இந்துமதிதேவி

குளிர்ச்சி மிகுந்த கோலாப்பூர் அரண்மனை வாசத்தைப் புறக்கணித்து விட்டுச் சமீபத்தில் ராணி இந்துமதி தேவி சென்னைக்கு விஜயம் செய்திருந்தார். சென்னையில் சமூக சேவையாளர்கள் எண்ணற்றவர்கள் உண்டு. அவர்களில் முக்கியமானவர்களைச் சந்தித்துப் பேசவே வந்திருந்தார். "எல்லாம் சரிதான்! இவர்களைப் பற்றி நாம் ஏன் சிரத்தை கொள்ள வேண்டும்? தமிழ் நாட்டுக்கும் இவருக்கும் என்ன சம்பந்தம்?" என்று இங்குள்ள சிலர் நினைக்கலாம். ஆனால் கோலாப்பூர் ராணிக்கும், தமிழ் நாட்டுக்கும் உள்ள உறவுகளை அறிந்தவர்கள் அவ்வாறு நினைக்க மாட்டார்கள். தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கும் தஞ்சையில் கலைக் களஞ்சியம் அமைத்த மகாராஷ்டிர மன்னர்களின் சேவையை நாம் இன்றும் காணலாம். தஞ்சாவூரிலுள்ள சரஸ்வதி மகாலில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் கலைச் செல்வங்களே அந்த ராஜ வம்சத்தினரின் தமிழ் பக்திக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். தஞ்சை ராஜ வம்சத்துக்கு உறவினர்தான் படத்தில் காணும் ஸ்ரீமந்த் சத்ரபதி இந்துமதிதேவி ராணி சாஹேப் அவர்கள். பாரதம் சுதந்திரம் பெற்றதும் சுதேச சமஸ்தானங்கள் எல்லாம் தேசப்படத்தில் ஒன்றாக இணைக்கப் பட்டுவிட்டன. இணைப்புக்குப் பின்னரும் சுதேச சமஸ்தானாதிபதிகளுக்கு விசேஷச் சலுகைகள் அநேகம் வழங்கப்பட்டு வருகின்றன. இம்மாதிரிச் சலுகைகள் கோலாப்பூர் ராஜ வம்சத்துக்கு வழங்கப்பட்டபோதிலும் ராணி இந்துமதிதேவி அவர்கள், தமது அரண்மனையையும், ஏராளமான திரவியங்களையும் மாதர் கல்விக்கு விட்டுக் கொடுத்திருக்கும் உதார குணத்தைப் போற்ற வேண்டும். நாட்டில் பெண் மக்கள் கல்விக்காக ஆயிரக்கணக்கான பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. எனினும், இன்று வரையில் இந்தியப் பெண்களுக்கு எம்மாதிரியான கல்வித் திட்டம் வேண்டும் என்பதில் அபிப்பிராய பேதம் தீரவில்லை. "இந்த அபிப்பிராய பேதம் தீரும் வரையில் நாம் காத்திருக்க வேண்டாம். இதோ நமது இந்தியப் பண்பாட்டுக்கு ஏற்ற கல்வித் திட்டம்! காந்தி மகான் வழி காட்டிய திட்டம்! அதன்படி கல்விச் சாலைகள் அமைக்கலாம் வாரீர்!" என்று அறைகூவி, கோலாப்பூர் ராணி அவர்கள் தமது அரண்மனையிலேயே பெண்களுக்கு ஏற்ற கல்விச்சாலை ஒன்றை அமைத்திருக்கிறார்கள்.

அதன் பெயர், "மகாராணி விஜயமாலா சத்ரபதி ருக்மிணி மகாவித்யாலயம்" என்பதாகும். பெயரிலிருந்தே வித்தியாலயத்தில் இந்தியப் பண்பாட்டுக்கு ஏற்ற இல்லற தர்மத்தினை வளர்க்கும் உயர்ந்த கல்வி முறை போதிக்கப்படுவது நன்கு விளங்கும்.

"இல்லறப் படிப்பு என்றதும், சமையல் செய்வது, சங்கீதம் கற்பதுதான் என்று நினைக்க வேண்டாம். இல்லறக் கல்வி என்பது முற்றிலும் வேறானது. ஆபத்துக் காலத்தில் வீட்டைப் பாதுகாத்தல், தற்காப்புக்கான பயிற்சி பெறுதல், வீட்டில் வைத்தியக் காரியங்களைக் கவனித்தல், இல்லறப் பொருளாதார முறைகளைக் கற்றல், வீட்டிலேயே தொழிற்பட்டறைகளை இயக்குதல் ஆகிய நூற்றுக்கணக்கான பாடத் திட்டங்களோடு அமைந்ததுதான் எங்கள் வித்தியாசாலை!" என்று கோலாப்பூர் ராணி அவர்கள் விளக்கும்போது அத்தகைய வித்தியாசாலைகள் நாடெங்கும் பரவுதல் வேண்டும் என்று நம்மை அறியாமலே நாம் கூறத் தொடங்கி விடுகிறோம். கோலாப்பூர் ராணி அவர்கள் சிறந்த கல்வியாளர். அரண்மனையிலிருந்தே பட்டப் படிப்புகளில் தேர்வு பெற்றவர்; உலக விவகாரம் முதல் உள்நாட்டு விவகாரம் வரையில் நன்கு அறிந்தவர். தேச பக்தியும், கடவுள் பக்தியும் மிகுந்தவர். கோலாப்பூர் ராஜவம்சத்தினரின் குல தெய்வமாகிய "அம்பா பாய் தேவி"யிடம் ஈடுபாடு மிக்கவர். சங்கீதத்தில், முக்கியமாக, கர்நாடக சங்கீதத்திலும் தமிழ் இலக்கியங்களிலும் பற்று மிக்கவர். ஓர் உயர்ந்த ராஜவம்சத்து 'மாதா' என்ற முறையில் ஆற்றிவரும் தொண்டு இந்திய மாதர்குலத்துக்கே பெருமைதருவதாகும்.



முருகன் சந்நிதிக்குப் பௌத்தர்களும் சென்று வழிபடும் சிறப்பு கொண்டது கதிர்காமம். இங்கு நடைபெறும் வேல் திருவிழாவுக்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் சென்று சுவாமி தரிசனம் செய்வர். இது போலவே உடப்பு கதிர்காமம் என்னும் கொழும்பிலும் நடைபெற்று வருகிறது. இந்தக் கதிரேசன் கோயில் திருவிழாவுக்கு இலங்கை கவர்னர் ஜெனரல் ஆலிவர் குணதிலகா



தருமபுரம் ஆதீனத் தலைவர் திருப்பெருந் திரு சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் செப்டம்பர் மாதம் மூன்றாந்தேதி சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்களுக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் லெ. ப. கரு. ராமநாதன் செட்டியார் அவர்களுக்கும் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். திரு செட்டியார் அவர்களுக்கு 'முத்தமிழ் வித்தகர்' என்ற பட்டமும் வழங்கினார்.




1



2

வும், இலங்கைப் பிரதமர் பண்டார நாயகாவும் விஜயம் செய் திருந்தனர். அவர்களை நாட்டுக் கோட்டை நகரத் தார் சங்கத் தலைவர் திருவள். ஆர். எம். வள்ளியப்பசெட்டி யார் அவர்கள் மாலைகள் சூட்டித் திலகம் இட்டு, விபூதிப் பிர சாதம் வழங்கிக் கௌரவித்த காட்சி களைப் படங்களில் காணலாம்.



வழக்கம் போல இவ்வாண்டும் தமிழ்கூறும் நல்லுலகம் எங்கணும் பாரதி விழா கொண்டாடப்பட்டது. இவை எல்லாவற்றிலும் சிறப்பாக மகாகவி பாரதியார் பிறந்த எட்டயபுரத்திலும் இரண்டு நாட்கள் பாரதி விழா கோலாகலமாகக் கொண்டாடப் பட்டது. விழாவில் இசை நிகழ்ச்சிகள், இலக்கிய அரங்குகள் எல்லாம் இருந்தன. இந்த நிகழ்ச்சிகளில் பதினாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். பாரதி ஞாபகார்த்த மணிமண்டபத்தில் நடைபெற்ற விழாக் காட்சிகள் சிலவற்றை இப்பக்கங்களில் உள்ள படங்களில் காணலாம்.

1. காருகுறிச்சி அருணாசலம் அவர்கள் நாதஸ்வரம் வாசிக்கிறார்.
2. இரண்டாம் நாள் விழா இலக்கிய அரங்கு பேராசிரியர் அ. சீநிவாசராகவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
3. விழாத் தலைவர் திரு கருமுத்து தியாகராச செட்டியாரின் தலைமை உரை.
4. கோவை திரு சி. பி. வேதவியாசராவ் குழுவினரின் இசை நிகழ்ச்சி.



3




4


வாழ்க மணமக்கள்



எழுத்தாளர் திரு டி. எஸ். கோதண்டராமனுக்கும் திருமதி ஜயலக்ஷ்மிக்கும் கும்பகோணத்தில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.



சக்தி விலாஸ் பஸ் உரிமையாளர் திரு வீ. வீரப்ப பிள்ளையின் குமாரர் திரு பார்த்தசாரதிக்கும் திருமதி கனகவல்லிக்கும் பொறையாரில் விவாகம் கோலாகலமாக நடந்தேறியது.



திரு வி. எம். சுப்பிரமணியம் அவர்கள் புதல்வி சௌபாக்கியவதி பாலாம்பாளுக்கும், திரு சுப்பிரமணியன் அவர்களுக்கும் சிறப்பாகத் திருமணம்நடந்தேறியது.



ஏலங்குடி பிரசாகநாதர் திரு வீ. கோவிந்தசாமி நாயுடு அவர்கள் குமாரி திருமதி இந்திராவுக்கும் திரு ரங்கராஜுலுவுக்கும் செப்டம்பர் 12-ந்தேதி திருமணம் வெகு விமரிசையாக நடந்தேறியது.



மத்திய சர்க்கார் செய்தி இலாகா உதவிக் காரியதரிசி திரு எஸ். பரமேஸ்வரனின் புதல்வி புஷ்பவல்லிக்கும், திரு வி. கணேசனின் புதல்வர் சம்பத்துக்கும் சென்னையில் திருமணம் நடந்தது.

ஔவை கேட்டால்...

★


அம்மா அம்மா வந்திடு
ஆப்பம் எனக்குச் சுட்டிடு
இலையில் அதை வைத்திடு
ஈ மொய்க்காமல் பார்த்திடு
உன்னை எனக்குக் கொடுத்திடு
ஊறுகாயதில் வைத்திடு
எண்ணெய் கொஞ்சம் ஊற்றிடு
ஏப்பம் வரும்வரை போட்டிடு
ஐயாவுக்கும் சுட்டிடு
ஒன்று ஒன்றுப் அடுக்கிடு
ஓலைப்பெட்டியில் மூடிடு
ஔவை வந்து கேட்டாலே
ஆப்பம் ஐந்து கொடுத்திடு.

★



கமலம்





புதிய சித்திரத் தொடர்கதை
சோதிடப் புலி
அவன் பெயர் செல்வம். அவள் பெயர் தனம்மா. அவர்களுக்குப் பிறந்த குழந்தையின் பெயரோ பாக்கியம். பெயர்தான் பெருமைப் படக்கூடியது; ஆனால் வீட்டிலோ வறுமையின் ஆட்சி. எனவே பிழைப்பைத்தேடி, சொந்த ஊரை விட்டுப் புறப்படுகின்றனர்.
1
நம் வீட்டுக்கும் ஒரு ஆள் வேண்டித்தான் இருக்கிறது. கூப்பிட்ட குரலுக்கு எப்பொழுதுமே இங்கே இருக்கணும் சம்மதமா, சொல்லு!
சம்மதம்தானுங்க!
2
தனம்! நமக்கு நல்ல காலம் பிறந்து விட்டது. எனக்கு வேலை கிடைத்து விட்டது.
உங்களுக்கு மட்டுமா, எனக்குந் தான் வேலை கிடைத்து விட்டது!
3


இந்த உலகநாதன் செட்டியார் அதிர்ஷ்டத்தைப் பார்த்தாயா? வேலைக்கு ஆளும், மகளுக்கு மாப்பிள்ளையும் கிடைத்து விட்டார்கள்.
எனக்கு மட்டும் என்ன? தனம்மா கிடைத்து விட்டாள்!
கறிகாய் வாங்கி வந்த செல்வம், தண்ணீர் குடத்துடன் வரும் தனம்மாவைப் பார்க்கிறான்.
அட, உங்களுக்கு இந்த வீட்டிலேதான் வேலையா!
ஆமாம்!
அம்மா, நான் வேலைக்கு வந்த வேலையைப் பார்த்தீங்களா! உங்கள் வீட்டிலே கல்யாணம் வந்து விட்டதே!
உங்கள் வீட்டுக்குப் புது ஆள் வந்திருக்கிறானே, அவன் எங்கே?
என்ன! அவன் திருட்டுப்பயலோ?
தொடரும்



26. கரடி பாய்ந்தது !


மால்கோஷுக்குக் கார்குர் தன்னை முட்டாள் என்று சொன்னதும் கோபம் வந்து விட்டது. "இந்தக் கழுதையின் நிழலைக் கொண்டு வா !" என்றான். ஒரு கழுதையின் நிழல் தென்பட்டது.

அதை அவமானமாக எண்ணிய கார்குர் தன் கையை அவன் முகத்துக்கு எதிரே நீட்டி ஏதோ முணுமுணுத்தான். மறுகணம் மால்கோஷ் மூர்ச்சையானான். உடனே கார்குர் மால்கோஷைத் தூக்கிக் கொண்டு பல மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு நதிக்கரையில் கொண்டு போய் விட்டான். அப்பொழுது அந்த நதி தண்ணீர் இல்லாமல் வறண்டு போயிருந்தது. "மால்கோஷ்! என்னை ஏமாற்றிய உனக்கு நன்றாக வேண்டும். இனிமேல் நீயும் கலாவைப் பார்க்க முடியாது. அவளும் உன்னைப் பார்க்க முடியாது. அப்படி அவள் உன்னைப் பார்த்து அழைத்தாலும் நீ அவளை அறிந்து கொள்ள மாட்டாய். நீ மயக்கம் தெளிந்து எழுந்தவுடன் உலகத்தில் புதியதாகத் தோன்றிய மனிதனைப் போலத்தான் நடந்து கொள்வாய். இதோ இப்பொழுதே உன்னிடம் இருக்கும் மாயப்பந்தையும் எடுத்துக் கொண்டு விடுகிறேன். இனிமேல் அதன் உதவியும் உனக்கு இருக்காது" என்று மால்கோஷின் பையிலிருந்து மாயப்பந்தை எடுக்கப் போனான்.

ஆனால் பந்தை எடுக்கிற சமயத்தில், "சீ! வேண்டாம்! ஒருவன் ஏமாந்து தனது சுய அறிவும் இல்லாமல் இருக்கும்பொழுது, அவனிடமிருந்து ஒரு பொருளை அபகரிப்பது இந்தக் கார்குருவின் குணத்துக்கே விரோதம் அல்லவா? என்னை இவனும் இவனது தங்கை கலாவும் ஏமாற்றி அவமானப்படுத்தினார்களே, அதனால் இவனுக்குத் தண்டனை கொடுத்தேன். கலா மால்கோஷை விட்டுப் பிரிந்து அலைவதே அவளுக்குக் கிடைத்த தண்டனை. இந்தப் பந்து இவனிடமே இருக்கட்டும். என்னைப் பற்றிய ஞாபகம் வந்தாலல்லவா, இந்தப் பந்தினால் எனக்கு ஏதாவது தீங்கிழைக்க யோசனை செய்வான்? அவன்தான் இனிமேல் உலகத்துக்கே ஒரு புதிய மனிதனாக ஆகிவிடப் போகிறானே! இந்தப் பந்தாவது அவனுக்கு உதவியாக இருக்கட்டும்" என்று சொல்லி விட்டு ஒரு முறை மால்கோஷை உற்றுப் பார்த்தான். பிறகு கார்குர் அவ்விடத்தை விட்டு அகன்றான்.

ஒரு நாள் முழுவதும் அதிக நடமாட்டமே இல்லாமலிருந்த நதிக் கரையில் மயக்கத்துடன் படுத்துக் கொண்டிருந்தான் மால்கோஷ். அவன் மயக்கத்துடன் படுத்துக் கிடப்பதை யாராவது பார்க்க நேரிட்டாலும், "பாவம்! யாரோ வழிப்போக்கன். அயர்ந்து தூங்குகிறான்" என்று கூறிப் போய் விட்டனர். மறு நாள் காலையில்தான் மால்கோஷ் இப்படியும் அப்படியும் புரண்டான்; பிறகு எழுந்து உட்கார்ந்தான். நான்கு திசைகளையும் மாறிமாறிப் பார்த்தான். பிறகு எழுந்து நின்றான். நதிக்கரை ஓரமாக நடந்தான்.

நடந்து கொண்டே போனான். சரியாக ஆகாரம் அருந்தி இரண்டு நாட்கள் ஆகிவிட்டன அல்லவா?



அதனால் அவனுக்குப் பசி அதிகரித்தது. 'பசி! பசி!' என்று கத்திக் கொண்டே போனான். தனது இரண்டு கைகளையும் தனது இரண்டு சட்டைப் பைகளிலும் விட்டான். ஒரு பையிலிருந்த மாயப்பந்தை எடுத்தான். ''ஹி! ஹி! ஹி! என் பையிலே பந்தா? நான் என்ன குழந்தையா பந்தை வைத்துக் கொண்டு விளையாடுவதற்கு? பார் இந்தப் பந்தை என் பையில் கொண்டு போட்டது?'' என்று பந்தைக் கையில் வைத்துப் பார்த்துக் கொண்டே இருந்தான். பிறகு பந்தைக் கீழே போட்டுப் பிடித்தான். ''பந்து ரொம்ப நன்றாகத்தான் இருக்கிறது. இதை வைத்துக் கொண்டு விளையாடிப் பொழுதைப் போக்கிக் கொள்ளலாம். ஆனால் எனக்கு இப்பொழுது வேண்டியது என் பசியைத் தணிப்பதற்கு நல்ல உணவு அல்லவா?'' என்று சொல்லிக் கொண்டே பந்தைக் கீழே போட்டுப் பிடித்தான். என்ன ஆச்சரியம்! அடுத்த நிமிஷம் ஆகாயத்திலிருந்து குதிப்பது போல் தட்டுத் தட்டாகச் சூடான ஆகார வகைகள் மால்கோஷின் முன்பு வந்து விட்டன. அவற்றைப் பார்த்த மால்கோஷ் ஆச்சரியத்தினால் குதித்தான். ''ஆகா! என்ன அருமையான ஆகாரம். அதன் மணமே என்னை உடனே சாப்பிடச் சொல்லுகிறது. ஆனால் இந்த ஆகாரம் திடீரென்று என் முன் வருவதற்குக் காரணம் என்ன? இது ஏதோ ஒரு மந்திர சக்தியின் விளைவாகத்தான் இருக்க வேண்டும். நமக்கு யார் மந்திரசக்தியினால் உணவு அளிக்கப் போகிறார்கள்? ஒருவரும் இல்லை. என்னிடத்தில்தான் என்னை அறியாமல் ஒரு மந்திர சக்தி இருக்கிறதோ? எனக்குத் தெரியாமல் எப்படி இருக்கும்? இருக்கவே இருக்காது. யாரோ ஒருவர் என் பையில் ஒரு பந்தைப் போட்டிருக்கிறார்களே! அந்தப் பந்து ஒருவேளை மந்திரப் பந்தாக இருந்து, எதை விரும்புகிறேனோ அதைக் கொடுக்குமோ?'' என்று எண்ணிப் பந்தைக் கையில் பிடித்துக் கொண்டான்.

''ஏ, பந்தே! எனக்கு ஆகாரம் கொண்டு வந்தாய். ஆனால் தாகத்துக்குத் தண்ணீர்கொண்டு வரவில்லையே! கொண்டு வா, பார்க்கலாம்'' என்று சொன்னான் மால்கோஷ், பந்தைப் பார்த்து. சற்று நேரம் பொறுத்துப் பார்த்தும் ஒன்றும் வரவில்லை. ''இல்லை இல்லை. இப்பொழுதுதான் எனக்கு ஞாபகம் வருகிறது. 'எனக்கு இப்பொழுது வேண்டியது என் பசியைத் தணிக்க நல்ல உணவு' என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதுதான் இந்தப் பந்தைக் கீழே போட்டுப் பிடித்தேன். வேறு ஏதாவது என் விருப்பத்தைச் சொல்லி, இந்தப் பந்தை முன்பு உபயோகித்தபடியே உபயோகித்துப் பார்க்கிறேன்'' என்று பந்தை எடுத்து, ''எனக்கு ஆகாரம் சாப்பிட்டவுடன் குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டே பந்தைக் கீழே போட்டுப் பிடித்தான். அடுத்த நிமிஷம் அவன் எதிரில்குடம்நிரம்ப 'ஜில்' என்ற தண்ணீர் ஆகாயத்திலிருந்து குதிப்பது போல வந்தது. அதைப் பார்த்த மால்கோஷ் சந்தோஷத்தினால் கூத்தாடினான். ''ஆகா! எனக்கு யாரோ ஒரு



மாயப் பந்தைக் கொடுத்து உதவியிருக்கிறார்கள். இனிமேல் என் சாப்பாட்டுக்கு ஒரு கவலையும் இல்லை.

"அவசியமான பொழுதுதான் நான் இந்தப் பந்தை உபயோகப்படுத்தப் போகிறேன். அடிக்கடி உபயோகப்படுத்தினால் இதன் மந்திர சக்தி குறைந்து விடும்" என்று மால்கோஷ் சொல்லிக் கொண்டே பந்தை மிகவும் ஜாக்கிரதையாகப் பையில் போட்டுக் கொண்டான். பிறகு அவன் எதிரில் இருந்த ருசியான உணவை நிறையச் சாப்பிட்டான். பிறகு 'ஜில்' என்று இருந்த தண்ணீரைக் குடித்தான். சற்று நேரம் ஒரு மரத்து நிழலில் படுத்துத் தூங்கினான்.

மந்திர ஜமக்காளத்துடன் கீழே விழுந்த அதிர்ச்சியினால் மயக்கம் அடைந்திருந்த கலா மயக்கம் தெளிந்து மெதுவாகத் தன் கண்களைத் திறந்தாள். கொடிய மிருகங்கள் நிறைந்திருக்கும் ஒரு அடர்ந்த காட்டில், தான் அப்பொழுது இருப்பதைத் தெரிந்து கொண்டாள். பயங்கர மிருகங்கள் போடும் சத்தத்தைக் கேட்டுப் பயந்து ஜமக்காளத்திலிருந்து எழுந்திருக்கத் தைரியமில்லாமல் மறுபடியும் படுத்துக் கொண்டாள். பிறகு சற்றுத் தைரியம் அடைந்து மெதுவாக ஜமக்காளத்தில் எழுந்து உட்கார்ந்தாள். அவ்விடத்தை விட்டு உடனே புறப்பட வேண்டும் என்று தீர்மானித்து ஜமக்காளத்தைப் பறக்க விட எத்தனித்தாள். அப்பொழுது ஒரு பெரிய கரடி தன்னை நோக்கி நாலு கால் பாய்ச்சலில் வருவதைப் பார்த்தாள் கலா. கரடி சமீபத்தில் வந்தவுடன் கலா காடே அதிரும்படி ஒரு பயங்கரக் கூச்சலிட்டு மறுபடியும் படுத்துக் கொண்டாள். உண்மையில் அந்தக் கரடி கலாவை நோக்கி ஓடி வரவில்லை. யாரோ இரண்டு மூன்று வேடர்கள் கரடியைப் பிடிப்பதற்காக ஓடி வந்தனர். அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ளவே அந்தக் கரடி அப்படி வேகமாக ஓடி வந்தது. ஓடி வந்த கரடி படுத்துக் கொண்டிருந்த கலாவைக் கவனிக்காமல் அதைத் துரத்திய வேடர்களிடமிருந்து தப்பி ஓடிப் புதருக்குள் சென்று மறைந்து விட்டது. ஆனால் கலா பயத்தினால் கண்களைத் திறக்காமல் ஜமக்காளத்திலேயே படுத்துக் கொண்டிருந்தாள்.

கரடி தப்பி ஓடியதைப் பார்த்து ஏமாந்து நின்றார்கள், அந்த வேடர்கள். ஆனால் சமீபத்தில் ஒரு அழகான பெண் படுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தவுடன் அவர்கள் மிகுந்த ஆச்சரியம் அடைந்தார்கள். ஏன் என்றால் அந்தக் காட்டைப் பற்றி நன்றாகத் தெரிந்தவர்கள் அங்கு ஒரு நாளும் வர மாட்டார்கள் என்பது நிச்சயம்.

"அண்ணே! அதோ பார்த்தாயா, அந்தப் பெண்ணை. அந்தப் பெண்ணுக்கு என்ன தைரியம்? இந்த அடர்ந்த பயங்கரமான காட்டிலே தனியாக ஒரு ஜமக்காளத்தை விரித்துக் கொண்டு படுத்திருக்கிறாளே. நாம் கூடத் தனியாக இங்கு வரமாட்டோமே?" என்றான் ஒரு வேடன்.

உடனே மற்றொரு வேடன் "அண்ணே! உங்களுக்கு ஞாபகம் இல்லை. சற்று நேரத்துக்கு முன்பு இந்தக் காட்டுக்கு மேலே ஒரு ஜமக்காளம் பறந்து கொண்டிருந்தது. அதில் அவள் உட்கார்ந்திருந்தாள். 'இந்த ஜமக்காளம் மாத்திரம் நம்மிடம் இருந்தால் திடீர் திடீர் என்று ஒவ்வொரு காட்டுக்கும் போய் மிருக வேட்டை ஆடலாம்' என்று சொன்னேனே?" என்றான்.

மூன்றாவது வேடன், "அண்ணே! நீங்கள் சொல்லுவது எல்லாம் ரொம்ப சரி. பறக்கும் ஜமக்காளத்தில் இந்தப் பெண் மாத்திரம்தான் நம் காட்டுக்கு மேலே பறந்து சென்றாள். நமக்கு அருகிலேயே பறந்து சென்றதினாலே இந்தப் பெண்ணை நாம் நன்றாக அடையாளம் கண்டுபிடிக்க முடிகிறது" என்றான்.

உடனே நான்காவது வேடன், "எதற்கு நாம் இப்படிச் சந்தேகப்பட வேண்டும்? அந்தப் பெண்ணையே கேட்டுப் பார்த்தால் எல்லாம் தெரிந்து விடுகிறது" என்றான்.

அந்த நான்கு வேடர்களும் ஜமக்காளத்தில் படுத்துக் கொண்டிருந்த கலாவை நெருங்கினார்கள். (தொடரும்)

தூய உடைகளும்

உள்ளத்தின் நிறைவும்!

சிறுவரின் மனதில் தன்னம்பிக்கை யூட்ட தூய உடைகளைவிட சிறந்தது எதுவுமில்லை! வெள்ளை ஆடைகளை மேலும் வெண்மையாகவும், வர்ண ஆடைகளை மேலும் பிரகாச முடையதாகவும் செய்வது **காவேரி பார்** சோப். அவற்றின் உழைப்பையும் நீடிக்கச் செய்கின்றது.



காவேரி பார்
எனக் குறிப்பிட்டுக் கேளுங்கள்.

தயாரிப்பவர் :

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்


மேட்டூர் அணை :: சேலம் ஜில்லா

மானேஜிங் ஏஜெண்ட்ஸ் :


சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

MC 394 Ta

மலர்களை நாடும்
தேனீக்கள் போல்



குழந்தைகள் வண்ண மலர்களை விரும்புகிறார்கள். ஆனால் அவர்களுடைய ஆதல் ஆசை பார்லேயின் தின்பண்டங்கள் மற்றும் மிட்டாய்களின் மீது தான். அவைகளை நாடி எவ்வளவு ஆத்திரத்துடன் அவர்கள் போகிறார்கள் என்பதை நீங்கள் பார்க்கவேண்டுமே! ருசி வாய்ந்ததும், ஆரோக்ய களிப்பதுமான இவைகள், புதுமை கெடாதபடி சுகாதார முறையில் தனித்தனியாகச் சுற்றப்பட்டுள்ளன.



பார்லேயின்

மிட்டாய்கள் மற்றும் டாபிகள்

இனிய கனிசுவை வாய்ந்தவை



வைரம்

டி. எஸ். கோதண்டராமன்

ஆகஸ்ட் மாதப் போட்டியில் நூறு ரூபாய் பரிசு பெற்ற க

வீட்டுக்குள் நுழைந்த சதாசிவம், மேல்துண்டை உரிய இடத்தில் மாட்டி விட்டுக் களைப்புடன் சாய்வு நாற்காலியில் சாய்ந்தார். வயோதிகத்தால் மூப்படைந்திருந்த அவர் முகத்தில் திடீரென்று சுருக்கங்கள் அதிகமாகத் தென்பட்டன.

''வண்டி போய் விட்டதா ?''

குரல் வந்த திசையை நோக்கித் தலையைத் திருப்பினார் சதாசிவம். அவருடைய மனைவி பார்வதி அவலுடன் நின்றுகொண்டிருந்தாள்.

''உம்!''

இரண்டு நிமிஷம் காத்திருந்த பார்வதி, அவரிடமிருந்து மேலே பேச்சு ஏதும் வராமல் போகவே, தானே தூண்டிவிட முயன்றாள்.

''வண்டி சரியான நேரத்துக்கு வந்ததா?''

''உம்.''

மீண்டும் அவளுக்குத் தோல்வி. 'உம்'மைத் தவிர வேறு ஒலி அவர் உதட்டிலிருந்து வெளிவரவேயில்லை.

'' ஜாக்கிரதையாகப் போகச் சொன்னீர்களா?'' என்று கேட்டாள்.

''ஊம்.''

''போய்ச் சேர்ந்தவுடன் மறக்காமல் கடிதம் எழுதச் சொன்னீர்களா ?''


''சொன்னேன், சொன்னேன், சொன்னேன். போதுமா, பார்வதி? ஏன் என்னைத் தொந்தரவு செய்கிறாய்? அவள் ஜம்மென்று இரண்டாம் வகுப்பில் போகிறாள். என்ன கவலை, உனக்கு? பத்து மாதம் சுமந்து பெற்றவள் மாதிரி பேசுகிறாயே ?''

சீதாவை அவள் பத்து மாதம் சுமந்து பெறவில்லை தான். ஆனால், அதைவிட மேலாகச் சீராட்டி வளர்க்கவில்லையா? பதினேழு, பதினெட்டு ஆண்டுகளாக அணு அணுவாகப் பெருகிய பாசமாயிற்றே!

சதாசிவத்தின் ஒன்றுவிட்ட தமக்கையின் பெண்தான் சீதா. பிறந்தவுடனேயே தகப்பனை விழுங்கிவிட்டாள். அவள் 'ஞவா, ஞவா' என்று காலை உதைத்துக்கொண்டு அழுத போதெல்லாம் யாரும் கொஞ்சி முத்தமிட்டு, 'அழாதேடி, கண்ணே!' என்று பரிவோடு கூறியதில்லை. 'துக்கிரிச் சனியனுக்கு அழுகை வேறேயா? பிறந்தவுடனேயே அப்பனை விழுங்கியாச்சு. இன்னும் என்னென்ன பண்ணப் போகிறாளோ?' என்ற ஏச்சுத்தான் அவள் செவிகளை நிறைத்தன.

நான்காவது ஆண்டு நடந்து கொண்டிருந்த போது அவள் அநாதையாகி விட்டாள், உழைத்து உழைத்து ஓடாகப் போய்விட்டிருந்த அவள் தாயின் உடல், நான்கு நாளைய நோயில் பொக்கென்று போய் விட்டது. சீதாவுக்கு அப்போது அழக்கூடத் தெரியவில்லை; அருகில் இருந்த சிலர் கலங்குவதைப் பார்த்து அவளுக்கும் இரண்டு சொட்டுக் கண்ணீர் வந்தது. யாரோ ஒரு பாட்டி, 'உன் அம்மா செத்துப் போய் விட்டாள்' என்றாள்; புரிந்து கொள்கிற பருவமா, அவளுக்கு?

ஒரு வாரத்துக்கு அம்மாவைக் காணாமல் மிகவும் கஷ்டமாயிருந்தது. 'அம்மா, அம்மா' என்று ஓயாமல் தொணதொணத்தாள். அதற்குப் பின் அம்மா இல்லாமலே இருப்பது பழக்கமாகி விட்டது.



நெருங்கிய உற்றார், உறவினர் யாரும் இல்லை, அவளுக்கு. செல்வம் ஏதேனும் இருந்தாலாவது தூரத்து உறவினர்கள் கூடச் சொந்தம் கொண்டாடி அவளை வளர்க்க முன் வருவார்கள். ஏழையான அநாதைப் பெண் குழந்தையை வளர்க்க யார்தான் ஆர்வத்தோடு இசைவார்கள்?

பந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளக் கூடியவர்கள் எல்லாம் அவளைப் பந்தாடினார்கள். இங்கே நான்கு நாட்கள், அங்கே ஒரு வாரம் என்று கண்ட கண்ட வீடுகளில் சீதா உழன்றாள். எங்கே சென்றாலும் ஏச்சும் பேச்சும் நிறையக் கிடைத்தன.

சதாசிவம் அவளை முதன் முதலாகப் பார்த்த கோலமே விசித்திரந்தான். பரட்டைத் தலையோடு கிழிந்த ஜம்பரும் பாவாடையும் அணிந்து கொண்டு, கிணற்றடியில் காப்பிப் பாத்திரங்களைத் துலக்கிக் கொண்டிருந்தாள் சீதா. அந்த உறவினர் வீட்டுக்குச் சற்று முன்புதான் வந்திருந்த சதாசிவம், கைகால் கழுவிக் கொள்வதற்காகக் கொல்லைப்புறம் சென்றார். அப்போதுதான் சீதாவைக் கண்டார். அந்தக் காட்சியிலே ஏதோ ஒரு மாயம் இருந்தது.

அவர் குழந்தை குட்டி இல்லாதவர். சீதாவின் பால் வடியும் இளம் வதனத்தைக் கண்டு அவர் உடல் முழுதும் அன்பு சுரந்தது.

"யாரு குழந்தை, நீ?"

"...ஊம்?...நான்..நான்..சீதா !.."

புது மனிதரைக் கண்டு பயந்துபோயிருந்த சீதா மருட்சியில் உளறினாள். பரிவான பேச்சையே கேட்டறியாத அவளுக்கு, சதாசிவத்தின் பேச்சிலிருந்த கனிவு சிறிது அச்சத்தையே கொடுத்தது. 'சீதா, சீதா!' என்று இரண்டு முறை தமக்குள்ளேயே கூறிக் கொண்டார் சதாசிவம்.

அவளைப் பற்றிய விவரங்களை அவர் விசாரித்தபோது, தம்முடைய ஒன்றுவிட்ட தங்கையின் பெண் அவள் என்பதைத் தெரிந்து கொண்டார். சோகமயமான அவள் கதை அவர் மனத்தை உருக்கியது. ஏதோ ஒரு பாசம் அவருள் எழுந்து கிளுகிளுத்தது. நீண்ட சிந்தனைக்குப் பின் ஒரு முடிவுக்கு வந்தார்

* * *

"பார்வதி!"

குரல் கேட்டுக் கூடத்துக்கு வந்த அவள், கணவர் அருகே ஒரு சிறு பெண்ணும் நிற்பதைக் கண்டாள்.

"யாரது.இந்தப்பெண்?... மிகவும் அழகாயிருக்கிறாளே!"

சதாசிவத்தின் நெஞ்சில் ஒரு துள்ளல். சீதாவை அவர் அழைத்து வந்தது, பார்வதிக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். ஆனால் பார்வதி வந்து நின்று, ஒரு கணம் அந்தப் பெண்ணை உற்றுப் பார்த்து விட்டுக் கண்களை மலர்த்தியபடி, 'அழகாயிருக்கிறாளே!' என்று பேசிய பேச்சிலேயே அவருக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது.

"நம்ப பொண்ணு !"

அவள் விழித்தாள். அந்த விழிப்பில் துயரம், ஆதங்கம், பச்சாத்தாபம், பரிவு, மகிழ்ச்சி எல்லாமே பிரதிபலித்தன. கல்யாணமாகிப் பத்து ஆண்டுகள் ஆகியும் குழந்தை பிறக்கவில்லையே என்ற குறை அவளை விட அவருக்குத் தான் அதிக வருத்தத்தைத் தந்து கொண்டிருந்தது என்பது அவளுக்குத் தெரியாதா?

"நம்ப பொண்ணுதானடி! விவரமா அப்புறம் சொல்லுகிறேன். முதல்லே, அவளைக் குளிப்பாட்டி வயிறு நிறையச் சாதம்போடு."

அருகே வந்து சீதாவின் கையைப் பற்றிக் கொண்டாள் பார்வதி.

"உன் பேரு என்ன?"

"சீதா !"

பார்வதி கலகலவென்று சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"



"இல்லை. நீங்கள் ஜனகர் ஆகிவிட்டீர்கள்! அவருக்கும் சீதா சொந்தப் பெண் இல்லை; எங்கிருந்தோ கிடைத்தவள்தான். உங்களுக்கும் அப்படித்தான கிடைத்திருக்கிறாள்!"

அவர் வெறுமனே முறுவலித்தார்.

*   *   *

சீதா கணக்கு போட்டுக் கொண்டிருந்தாள். நான்கு அடிகள் தள்ளித் தூணில் சாய்ந்து கொண்டு சீதாவையே பார்த்துக் கொண்டிருந்தார் சதாசிவம். அவள் அலட்சியமாக உட்கார்ந்து, தலையைக் குனிந்த படியே சிலேட்டில் கணக்குகளைப் போட்டுக் கொண்டிருந்த காட்சியே அவர் உள்ளத்துக்கு உவகையூட்டியது.

அவரிடம் அவள் வந்து இன்னும் இரண்டு வருஷங்கள் முடியவில்லை. ஆனால் அவளுடைய வாழ்விலும், அவர்களுடைய வாழ்விலும் தான் எத்தகைய புத்தொளியை வீசச்செய்து விட்டாள்! அவரை, 'அப்பா' என்றும், பார்வதியை, 'அம்மா' என்றும் அழைக்கும் குரலிலேதான் என்ன இனிமை? யாழைக் காட்டிலும், குழலைக் காட்டிலும் அமுதக் கலை வரும் குரலல்லவா!

ஆனால் என்ன இருந்தாலும், சீதா அவருடைய பெண் அல்லவே!

அவள் 'அப்பா' என்று உள்ளன்போடு அவரை அழைக்கலாம். 'என் கண்ணே!' என்று கொஞ்சி அவர் இறும்பூதெய்தலாம்; ஆனால், அந்தப் பாசம் நிலைத்து நிற்கக் கூடியது என்று எப்படிக் கூற முடியும்?

அநாதையாக விடப்பட்ட அவளுக்கு வாழ்வளித்த அவரிடம், தெரிந்தோ தெரியாமலோ அவள் அன்பு செலுத்தலாம். ஆனால், சிறகு முளைத்து வெளியில் பறக்கும் காலம் வரும் போதும் அவள் இப்போது இருப்பதைப் போலவே இருப்பாள் என்பது என்ன நிச்சயம்?



"குழந்தை எங்கே!"

"கடைக்குப் போயிருக்கிறான்."

"தனியாகவா போயிருக்கிறான்?"

"பின்னே?...அவனோடு கூட ஒரு படையே போகணுமா, காவலுக்கு?...வயசு எட்டாக வில்லை? பக்கத்துத் தெருவுக்குப் போய் வரக் கூடத் தெரிய வேண்டாமா?"

"காரும் லாரியும் ராட்சஸன்கள் மாதிரி அலறிக்கொண்டு போகின்றன. அதற்காகச் சொன்னேன்."

"இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்தக் கரிசனம்?"

சதாசிவம் திகைத்தார்.

"என்ன இருந்தாலும், அவள் வளர்ப்புப் பெண் தானே?"

"நீ என்ன சொல்கிறாய்?"

பார்வதி அவருக்கு நேர் எதிர்ப்புறமாகத் திரும்பிக் கொண்டாள்.

"நீங்கள் நிஜமாகவே அப்பாவாகப் போகிறீர்கள், தெரியுமா!"

அவர் ஆனந்தத்தில் மலைத்துப் போய் உட்கார்ந்து விட்டார். மகிழ்ச்சியில் அவருக்குப் பேச்சு எழவேயில்லை.

ஆனால், சில மாதங்களுக்குப் பின் தங்களுக் கென்று ஒரு குழந்தை பிறந்த பின்பும் சீதா வின் மேலிருந்த பாசம் குறையவில்லை, அவர் களுக்கு. பிறந்த குழந்தையும் ஆண் குழந்தை யாக இல்லை. பெண்தான். செல்வமாகச் 'செல்வம்' என்று பெயரிட்டார்கள். சீதா வின் தங்கையாகவே அவளைப் பாவித்தார்கள்.

"எல்லாம் சீதாவின் அதிர்ஷ்டம்! அவள் வீட்டுக்கு வந்தபின் நன்மையெல்லாம் ஏற் படுகிறது. இப்போ, தனக்கு ஒரு தங்கையும் கொண்டு வந்துவிட்டாள்" என்று சந்தோ ஷப்பெருக்கில் கூறினார் சதாசிவம்.

* * *

ஆண்டுகள் உருண்டன. பண்ணையில் விழுந்த வெங்காயம் போல் சீதா வளர்ந்து கொண்டே வந்தாள்.

பதினெட்டு வயதுப் பாவையாக மாறிவிட் டிருக்கும் அவளைக் காணும்தோறும் சதாசிவத் துக்குப் பெருமூச்சு தான் எழும். இத்தனை வருஷங்களாகத் தோன்றாத பாரம், இல்லாத கவலை இப்போது அவருக்கு 'உண்டாகி விட்டது. அவளை ஒரு ஆடவன் கையில் ஒப்படைக்க வேண்டுமே?

அவர் குடும்பம் பிச்சுப் பிடுங்கல் இல்லாத தாக இருந்தாலும், அவரால் அதிகமாகப் பணம் சேர்த்து வைக்க முடியவில்லை.

இரு பெண்களுக்கும் அவ்வப்போது சிறு சிறு நகைகள் செய்து போட்டிருக்கிறார். கண்ணைப் பறிக்கும் பட்டாடைகளாக வாங் கிக் குவிக்காவிட்டாலும் தம் ஆசை மிகுதி யால் நவீன ரகத் துணிகள் வாங்கித் தந்து அவர்களை அழகுபடுத்திப் பார்த்து உள்ளம் மகிழ்ந்திருக்கிறார்.

பெண்களுக்குள்தான் என்ன ஒற்றுமை! சீதாவை விட்டு ஒரு கணம் செல்வம் அப்பால் சென்றதில்லை. 'அக்கா, அக்கா' என்று அவளிடம் உயிராக இருந்தாள்.

முன்பின் அறியாதவர்கள், அவர்கள் இரு வரும் ஒரே தாயின் வயிற்றில் பிறந்தவர்கள் என்றே எண்ணுவார்கள்.

சதாசிவம் கையில் ஏதோ சிறிது பணம் சேர்த்து வைத்திருந்தார். அந்தப் பணத்தைத் தம் சொந்தப் பெண்ணின் கல்யாணத்துக்குப் பாதுகாத்துவைக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கோ அல்லது பார்வதிக்கோ என்றும் தோன்றியதில்லை.

மாப்பிள்ளைக்காக எங்கெங்கோ அலைந்தார் சதாசிவம். ஆரம்பத்தில் அவருக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது. சீதாவின் அழகுக்கும் அறிவுக்கும் அவளை எவரேனும் கொத்திக் கொண்டு போய்விட மாட்டார்களா என்றே எண்ணியிருந்தார். ஆனால், கையில் ஜாத கத்தைச் சுமந்துகொண்டு அலையத் தொடங் கியபோதுதான், உலகம் வெளிப்பார்வைக்கு எவ்வளவுதான் அழகையும் அறிவையும் போற்றுவதாகத் தோன்றினாலும், உண்மை யில் அதன் குறிக்கோள் பணம்தான் என்பது நன்கு புரிந்தது.

சதாசிவமும் பார்வதியும் இடிந்து போய் விட்டார்கள். பொற்கொடியாக வீட்டில் உலவி வரும் சீதாவைக் காணும்போது, இனம் புரியாத உணர்ச்சி அவர்கள் உடலில் பாய்ந்து, உள்ளத்தில் திகிலை எழுப்பும். சீதாப் பிராட்டியாரே தம் வீட்டுக்கு வந்துவிட்ட தாக எண்ணிப் பெருமை கொண்டிருந்த சதாசிவம், தாம் இப்போது ஜனகனைவிட இக்கட்டான நிலையில் இருப்பதை உணர்ந் தார். 'சீதாவின் மணாளன் எங்கிருந்தாவது திடீரென்று வரமாட்டானா?' என்று அவர் உள்ளம் ஏங்கியது.

சீதாவும் ஏங்கினாள். தனக்குக் கல்யாண மாகவில்லையே என்ற குறையைவிடத் தன்னால் தன்னை வளர்த்தவர்களுக்கு எவ்வளவு துன்பம் என்ற நினைவே அவள் மனத்தை உறுத்தியது

* * *

தோட்டத்துப் புறத்துக் கொடியில் மலர்ந்த மல்லிகைப் பூக்களைப் பறித்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள் சீதா. சமையற்கட்டில் உட்கார்ந்து கொண்டு பூக்களைத் தொடுக்க ஆரம்பித்தபோது கூடத்திலிருந்து பேச்சுக் குரல் இலேசாகக் கேட்டது. தன் பெயர் அடிபடுவதைக் கேட்டதும் சற்று உன்னிப் பாகவே கவனித்தாள். சதாசிவமும் பார்வதி யும்தான் பேசிக் கொண்டிருந்தார்கள். நிமி ஷங்கள் செல்லச் செல்ல அவளுக்கு விஷயம் நன்கு புரிந்து விட்டது.

இரண்டாம் தாரம் மணம் செய்து கொள் ளப் பம்பாயிலிருந்து ஒருவர் வந்திருக்கிறா ராம். வயது, நாற்பதைத் நெருங்கிக் கொண்டி ருக்கிறது. பம்பாயில் வியாபாரத்தில் ஈடு பட்டிருக்கும் அவர் வீட்டில் பெண்பிள்ளைகளே இல்லாததால்தான் மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எழுந்த தாம். மூத்தவளுக்கு இரண்டு குழந்தைகள் இருக்கிறார்களாம்.

சீதாவை அவருக்குக் கொடுத்து விட்டால் என்ன என்ற எண்ணம் சதாசிவத்துக்குத் தோன்றியது. பணம், காசை எதிர்பாராமல் குணத்தையே நாடும் இடம். சீதா மட்டும் இசைந்தால் இந்தச் சம்பந்தத்தை நிச்சயம் ஏற்படுத்திக் கொண்டு விடலாம் என்று அவர் நம்பினார்.

ஆனால், அவனிடம் எப்படிச் சொல்வது? மனமொப்பி, 'இரண்டாந்தாரமாக இருப்பதற்குச் சம்மதமா?'' என்று அவளை எப்படிக் கேட்பது? அவள் இசைந்தாலும், கல்யாணத்துக்குப் பின் அவள் பம்பாய்க்கல்லவா போய் விடுவாள்? அவளைப் பிரிந்திருப்பது அவர்களுக்குச் சாத்தியமா? செல்லம் ஏங்கிப் போய்விட மாட்டாளா?....

இவைகளுக்கெல்லாம் சீதா விடையளித்து விட்டாள். சமையற்கட்டிலிருந்து சரேலென்று ஓடோடி வந்தாள். ''அப்பா, அந்தப் பம்பாய் வரனையே முடித்து விடுங்கள். எனக்குப் பூரண சம்மதம். எனக்கு இப்போது ஏற்பட்டுள்ள கவலையெல்லாம் அவர் என்னை ஏற்றுக் கொள்ள வேண்டுமே என்பதுதான்!''

உணர்ச்சி வசப்பட்டு அவள் கூறி நிறுத்தியவுடன் சதாசிவத்தின் நெஞ்சு தழுதழுத்தது: பார்வதியின் கண்களில் நீர் துளித்து நின்றது.

* *
*

புகுந்த வீட்டில், பம்பாய் நகரத்துப் பங்களாவில், தன் வாழ்வின் புதிய அத்தியாயத்தைத் துவக்கினாள் சீதா. அவள்தான் அந்தக் குடும்பத்தின் அரசி. பெண்களே யில்லாமல் தவித்துக் கொண்டிருந்தது அந்தக் குடும்பம். அவளுடைய கணவன் ரகுநாதன், அவருடைய இரு இளைய சகோதரர்கள், மூத்த மனைவியின் இரண்டு குழந்தைகள் ஒரு சமையற்காரன் — இவர்கள்தான் இருந்தார்கள். குழந்தைகள், பெரியவர்கள் எல்லோருமே 'தம் நன்மையைக் கோருபவள்' என்ற நம்பிக்கையுடன் சொந்தம் பாராட்ட ஒரு பெண்ணின் அன்பு இதயத்துக்காகத் தவித்துக் கொண்டிருந்தார்கள். சீதா அவர்கள் லட்சியத்துக்கேற்ப அமைந்திருந்தாள்.



குழந்தைகளிடம் அன்போடு பழகினாள். மைத்துனர்களிடம் மரியாதையும் சகோதர பாசமும் கொண்டிருந்தாள். கணவனுக்குத் தான் மனைவி என்பதையும் மறக்கவில்லை!

எத்தனையோ மின் விளக்குகள் இருந்தாலும் ஜீவ ஒளியற்றுப் பாழடைந்திருந்த அந்தப் பங்களாவில், சீதா புகுந்ததுமே ஒளி பரவியது. குத்து விளக்குச் சுடரின் தன்மை போன்ற அவளுடைய பார்வையிலே ரகுநாதனிலிருந்து கடைசிக் குழந்தைவரை அனைவருடைய இதய தாபங்களும் தணிந்தன.

சீதாவை அவர்கள் போற்றக்கேட்பானேன்?

சீதா தன் நிலையை நன்றாக உணர்ந்திருந்தாள். பழைய சரித்திரத்தை மறந்துவிடவில்லை. புது அனுபவங்களின் மோகத்தில் தலைகிறங்கி அடைந்து விடவுமில்லை. அநாதையாகக் கிடந்த தன்னை எடுத்து வளர்த்துப் பண்பும் அறிவும் உடைய பாவையாக மாற்றிய சதாசிவம் தம்பதிகளை அவள் கனவிலும் மறக்கவில்லை.

அவர்கள் அன்பை அவள் போற்றிப் பூஜித்தாள். அவர்களைப் பற்றிய நினைவுகளைப் பவித்ரமாகக் கருதினாள்.

மாதம் தவறாமல் அவர்களுக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள். ஊருக்குச் சென்று அவர்களைப் பார்த்துவிட்டு வர வேண்டும் என்ற எண்ணமும் அவளுக்கு அடிக்கடி தோன்றும். ஆனால், வீட்டில் வருவோர் போவோர் அதிகமாயிருந்ததால் பம்பாயிலிருந்து நகருவது அவளுக்குச் சாத்தியமாக இல்லை.

*
* *

''பார்வதி.....பார்வதி....'' என்று இன்பம் பொங்கக் கூறியபடியே உள்ளே வந்தார் சதாசிவம்:

''என்ன அவசரம்? மூச்சு வாங்குகிறதே!''

''சீதா வருகிறாளாம்: கடிதாசு போட்டிருக்கிறாள். அடுத்த புதன்கிழமையன்று வந்து சேர்ந்து விடுவாள்.... அப்பா! அவளைப் பார்த்து எவ்வளவு நாளாச்சு!...''

வீட்டில், அடுத்த புதன்கிழமை வரை ஒருவருக்கும் ஓய்வில்லை. வீட்டைத் துப்புரவாக்கி ஒழுங்குபடுத்துவதும், கடைச் சாமான்கள் வாங்குவதும், சீதாவைப் பற்றிப் பேசுவதாகவுமே நாட்கள் பறந்தன.

பார்வதிக்கும் உள்ளூற ஒரு தப்பாசை. செல்லம் இப்போது வாலைக் குமரியாகி நிற்கிறாள். முன்பு சீதா இருந்தது போன்ற அதே நிலை!

செல்லத்துக்கு இப்போது கல்யாணம் நடைபெற்றாக வேண்டும். விரைவில் முடித்து விட்டால் மிகவும் நல்லது. வரன்களும் கிடைக்கும் போல் தான் இருந்தது. ஆனால், பணம்? சீதாவின் கல்யாணத்தின் போதாவது சதாசிவம் வேலையில் இருந்தார். கடன் வாங்கி நடத்தினாலும் நாளடைவில் அடைத்து விடலாம் என்ற நம்பிக்கை இருந்தது. இப்போது அதற்கு நேர்மாறுபட்ட நிலை அல்லவா? ஆகவே, சீதா ஒரு பெருந்தொகை கொடுத்து உதவ மாட்டாளா என்ற ஆசை: இந்த ஆசைதான் சீதாவை வெகு ஆவலோடு வரவேற்கத் தூண்டியது!

கடைசியில் சீதா வந்தாள், லட்சுமிதேவியைப் போல் வந்தாள். அன்பு குறையாமல் அப்பாவோடும் அம்மாவோடும் தங்கை



கௌரி கல்யாணம்

எவ்வளவு பெரிய சம்பளத் தொகையையும் எளிதில் வெளியேற்றி, இளைத்துப் போன பர்ஸின் மூலமாக மாதா மாதம் நெருக்கடி விளைவிக்கும் கடைசி வாரம்! குமாஸ்தா பஞ்சுவின் பர்ஸிலிருந்து சில்லறைகள் கூட விடை பெற்றுக்கொண்டு போய்விட்டன. போதாக் குறைக்கு, பெண் பார்ப்பதற்காக மருகன் பட்டணம் துரைசாமியவர்கள் தமது பிள்ளை சகிதம் செய்யப் போகும் திருவிஜயம் வேறு. பஞ்சுவின் மனைவி மங்களத்தின் வலதுகை விரலொன்று முறிந்துவிட்ட காரணத்தினால் சமையல் செய்வது நாளுக்கு நாள் சிரமமாகி வந்தது. பெண் கௌரியின் கைவிரல்களோ, அற்புதமாக வீணையை மீட்டப் பழகியவையேயொழிய, அடுப்பு மூட்டப் பழகியவை அல்ல. இவ்வளவுக்கும் மேலாக பாழும் பண நெருக்கடி!

அடுத்த வீட்டு டாக்டர் சுந்தரத்தின் சம்சாரத்தை அணுகி கைமாற்றாகப் பணம் கேட்டாள் மங்களம். அதற்கு டாக்டரின் மனைவி, "நீங்கள் எதற்காக உடம்பை அலட்டிக்கொள்ள வேண்டும். நாளைக்கு எங்கள் குழந்தைக்கு ஆண்டு நிறைவாச்சே. இங்கிருந்தே காப்பி, பலகாரம் எல்லாம் அனுப்பி வைக்கிறோம். இதுவிஷயம் காதும் காதும் வைத்தாற்போலிருக்கட்டும்!" என்று பாலை வார்த்தாள்.

இதையறியாத பஞ்சுவோ, கஷ்டப்பட்டுக் கடன் புரட்டிக்கொண்டு ரவை, சீனி, ஏலக்காய், முந்திரிப் பருப்பு, நெய் இத்யாதிகளுடன் வந்து சேர்ந்ததும் திகைத்துப்போன மங்களம் அடுத்த வீட்டு உதவியைப் பற்றிப் பேச்செடுக்க இயலாதவளானாள். வாங்கி வந்திருந்த செலவின் தரமும் திருப்திகரமாக இல்லாமற் போகவே, மங்களம் தனக்குள் ஒரு முடிவுக்கு வந்தாள்.

மறுநாள், தாம்பூலம், சந்தனம், கற்கண்டு, சர்க்கரை முதலிய அம்சங்கள் சூழ, பட்டணம் துரைசாமி கோஷ்டியினருக்கு சுமுகமான உபசரிப்பு ஜரூராக நடந்தது. பெண் கௌரியும் பதவிசாக வந்து பிள்ளையை நமஸ்கரித்துவிட்டு, ஸொஜ்ஜியும் காப்பியும் கொணர்ந்து வைத்தாள். ஸொஜ்ஜியை அருந்தியபடி துரைசாமி பேசினார்:

"இந்தக் காலத்துப் பெண்களிடம் தேக வளர்ச்சியைக் காண்பதே அபூர்வமாயிருக்கிறது. சமைக்கத் தெரியும் அளவுக்குக் கூட அவர்களுக்கு சாப்பிடத் தெரியவில்லை—அதுசரி, இந்த ஸொஜ்ஜி இருக்கிறதே, இது . . ."

பஞ்சுவுக்கு பகீரென்றது. ஸொஜ்ஜியில் ஏதோ குறை சொல்லப் போகிறார் என்று பயந்து பேச்சை மாற்ற முயன்றார். "நன்றாகப் பாடுவாள் கௌரி. எங்கே, கௌரி, ஒரு பாட்டுப் பாடு" என்றார் பஞ்சு.

துரைசாமியோ இடியென்று ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டார்:

"ஞாபகம் வருகிறதே. அடுத்த வீட்டில்தானே டாக்டர் சுந்தரம் குடியிருக்கிறார். அவரது குழந்தைக்கு ஆண்டு நிறைவு என்று அழைப்பு அனுப்பியிருக்கார். வந்த பிறகு சிற்றுண்டிக்குப் போகாமல்..."

டாக்டர் வீட்டு சிற்றுண்டிக்குப் போகும்பட்சத்தில் அதே ஸொஜ்ஜியை சாப்பிட நேரிட்டு, குட்டு வெளியாகி விட்டால்? மறுபடியும் பேச்சை மாற்றினார் பஞ்சு.

"உங்கள் தம்பி சௌக்கியமா? நாடகத்தில் நடித்து வந்ததாக ஞாபகம்" என்றார்.

"ஆமாம். சீக்காளியாக குசேலரைப் போல இருந்தவன் என் தம்பி. நாலே மாதங்களில் அவனை உடம்பு தேற வைத்தவர் டாக்டர் சுந்தரம். இத்தனைக்கும் ஒரு டானிக்கூட கொடுக்கவில்லை அவர். விதவிதமான ஆகாரங்களாக வேளா வேளைக்கு சுவையான

சாப்பாடும் அன்றாடம் பாலும் சாப்பிடும்படி திட்டம் போட்டுக் கொடுத்தார்..."

"ஒங்க தம்பி இப்போ என்ன பண்றான்?"

"இப்போ நாடகங்களிலே பீமசேன வேஷம் போடறது அவன்தான்! எல்லாம் நம்ப டாக்டர் சுந்தரத்தோட..."

"நீங்க..."

"இவ்வளவு நெருங்கி வந்தபிறகு நேரே விருந்துக்குப் போகாதபோனால் என்ன நினைப்பார் டாக்டர்?"

இக்கட்டான இந்த நிலையில் சமய சஞ்சீவியாக சகுனு ராகத்தில் வீணையின் வீணையொலி எழும்பியதால், பேச்சுக்கு ஒரு முற்றுப் புள்ளி விழுந்தது.

பாட்டு முடிந்தபின், "உங்கள் சம்சாரத்தின் கைவிரலில் என்ன?" என்று கேட்டார் துரைசாமி.

"விரல் முறிந்துவிட்டது"

"இந்த விரலோடேயா சமையல்...!" என்றார் விடாக்கண்டர்.

"ஆமாம். ஒரு நிஜசாக சமாளித்து..."

"நம்ப முடியவில்லையே."

"என்ன?"

"இந்த சொஜ்ஜியைப் பார்க்கும் போது..."

"சொஜ்ஜி" என்றதும் பதறியே போனார் பஞ்சு. நாணயமாகவே நடந்து பழக்கப்பட்ட அவர், இனியும் மூடி வைப்பது உபயோகப்படாது என்று கைவிட்டு, தன்னையும் அறியாமல் உண்மையை உடைத்துச் சொல்லத் தீர்மானித்துவிட்டார்.

"தெரியாத்தனம் செய்து விட்டேன், துரைசாமி, மன்னிக்க வேண்டும். டால்டாவில் செய்ததுதான் இது. ஆனாலும் பக்கத்து வீட்டில் தயாரானது, நாங்கள் செய்ததில்லை..."

"ஏன் பதறுகிறீர் பஞ்சு. டால்டாவில் செய்ததானால் என்ன தப்பிதம். நன்றாயிருக்கிறது சொஜ்ஜி என்றல்லவா சொல்ல இவ்வளவு நேரம் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். நீங்களாலும் இப்படி..."

"என்ன நினைப்பீர்களோ என்ற சங்கோஜம்"

"நினைப்பதற்கு என்ன இருக்கிறது. எங்கள் வீட்டிலும் டால்டாதான் உபயோகிக்கிறோம். என்னைப் பாருங்கள். சௌக்கியமாக இருக்கவில்லையா? சமையலுக்கு மிகவும் சிறந்தது டால்டா வனஸ்பதி; புத்தம்புதிய தாவர எண்ணெய்கள் சுகாதார முறையில் பரிசுத்தமாகி அடக்கமான டின்களில் கிடைப்பது டால்டா. வெண்ணெய்யிலுள்ள அதே அளவு வைட்டமின் 'ஏ' டால்டாவிலும் சேர்க்கப்பட்டுள்ளதால், நோய்நொடி வராமல் பாதுகாக்கக்கூடியது. பற்களையும் எலும்புகளையும் பலப்படுத்த உதவும் வைட்டமின் 'டி'யும் டால்டாவில் உள்ளது."

"அப்படியா, கேட்க சந்தோஷம்!"

"கடைகளில் விற்கும் எண்ணெய் நெய்களை நம்ப முடியுமா?"

"வாஸ்தவம், சுத்தமாகக் கிடைப்பதே அபூர்வம்தான்."

"ஆனால், நீங்கள் பார்த்திருப்பீர்கள், பச்சை மரம் படமும், டால்டா என்ற பெயரும் உடைய டின்களை. அடக்கமான டின்கள் ஆதலால், எப்பொழுதும் டால்டா சுத்தமாகவே இருக்கும்."

"வீணாக வனஸ்பதிமீது தப்பபிப்பிராயம் கொண்டிருந்தேன், துரைசாமி."

"எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லை, பஞ்சு. அரசாங்கமே மூன்று வருஷகாலம் வனஸ்பதியைப் பரிசோதனை செய்து விட்டு, ஆரோக்கியத்திற்கு உத்தமமான கொழுப்பு அதுவே என்று தீர்ப்பளித்து விட்டது. எவ்விதமான பண்டமும் டால்டாவில் தயாரிக்கலாம், ஒவ்வொன்றும் தனது இயல்பான ருசியோடு பரிமளிக்கும்!" என்று அழுத்தமாகக் கூறி முடித்தார் துரைசாமி.

"உங்கள் தம்பிக்கு மட்டுமல்ல, நம் எல்லோருக்குமே புதிய ஆரோக்கியத்துக்கு வழிகாட்டி விட்டார் டாக்டர் சுந்தரம்!" என்று பூரிப்படைந்தார் பஞ்சு.

அன்று மாலை, வரன் பார்க்க வந்த பட்டணம் துரைசாமி விடைபெற்றுக் கொண்டபோது எல்லோர் வதனமும் மலர்ந்திருந்தன. பர்ஸ் காலியாகும் மாதக் கடைசி என்றாலும், கல்யாண வரவைக் கட்டியம் கூறிய குதூகலத்தால் எல்லோர் உள்ளங்களும் நிரம்பியிருந்தன!

HVM. 312B-X29 TM

யோடும் அளவளாவினாள். செல்லத்தோடு புகைப்படம் எடுத்துக் கொண்டாள். ஊராரிடம் தன் அந்தஸ்தை நாலுக்காகப் பறை சாற்றிக் கொண்டாள். ஒரு வாரம் தங்கி விட்டுப் போயே போய் விட்டாள்!

தங்கியிருந்த நாட்களில் செல்லத்தோடு மிகவும் இழைந்து பேசினாள். ஆனால், அவள் திருமணத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. தான் உதவி செய்வதாகக் குறிப்பாகக் கூட உணர்த்தவில்லை.

சீதா புறப்பட்டுச் செல்லும் போதாவது ஏதாவது கூறுவாள் என்று எதிர்பார்த்தார்கள். அதிலும் ஏமாற்றம் ஏற்படவே, அவர்கள் உள்ளம் கசந்து போய் விட்டிருந்தது.

அரும்பாடுபட்டு வளர்த்து ஆளாக்கிக் கல்யாணம் செய்து வைத்து அவர்கள் செய்த உதவிக்கு அவள் செய்யக்கூடிய கைம்மாறு இது தானா?

ஆமாம், அதற்காகச் சதாசிவத்துக்குச் சீதா உதவி செய்ய வேண்டும் என்று எங்கே எழுதி வைத்திருக்கிறது! அவள் உதவியை எதிர்பார்த்தா அவர்கள் அவளை வளர்த்தார்கள்? அப்படி எதிர்பார்த்திருந்தால் அவர்கள் அன்பின் தூய்மைக்கு மாசு கற்பிப்பதாகாதா? அவள் அதிர்ஷ்டம், நல்ல கணவராக வாய்த்தார். அதற்கு, இவர்கள் முயற்சிதான் காரணம் என்று எப்படிச் சொல்ல முடியும்?...

வாசலில் கேட்ட காலடிச் சத்தம் அவர் சிந்தனையைக் கலைத்தது. 'யார் வருகிறது?' என்று சதாசிவம் நிமிர்ந்து பார்த்தார். செல்லம் கூடத்தைத் தாண்டிச் சமையற்கட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தாள்.

ஹூம்!

இந்த மலர் எங்கோ போய் வாடி மடியப் போகிறது! அர்ச்சனைக்குரிய மலர் மண் தரையில் கிடந்து புரளப் போகிறது.

"தெய்வமே! பத்து ஆண்டுகள் பிள்ளைப் பேறில்லாமல் என்னை வாட்டிய நீ, இப்படிச் சோதிப்பதை விட, வாழ்வு முழுவதுமே அந்த வேதனையை அளித்திருக்கலாமே?"

சதாசிவத்தின் கண் ஓரங்களில் கசிவு ஏற்பட்டது.

"ஸார், தபால்!..."

உறையைப் பார்த்ததுமே, அது சீதாவிடமிருந்து வந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டு விட்டார்.

"ஹூம்!...கடிதாசிக்கு மட்டும் குறைவில்லை! மாதம் தவறினாலும் தவறும், அவளிடமிருந்து இரண்டு கடிதங்கள் வருவது தவறுவதில்லை! அடாடா என்ன கரிசனம்! என்ன அன்பு! என்ன வேஷம்! என்ன நடிப்பு..."

அவர் நெஞ்சு குமுறிக் கொண்டிருக்கும் போதே செல்லம் அங்கே வந்தாள்.

"தபால்வந்தது போலிருக்கிறதே,அப்பா?"

அவர் மகளைத் திரும்பிப் பாராமலே, கடிதத்தை அவளிடம் நீட்டினார்.

"அடே, அக்கா எழுதியிருக்கா, அப்பா!... நீங்க படிச்சுப் பார்க்கவில்லையா?..."

"உன் அம்மாவுக்குப் படித்துக் காட்டு..."

கூடத்தில் நின்று கொண்டிருந்த தன் அம்மாவிடம் செல்லம் அந்தக் கடிதத்தைப் படித்துக் காட்டினாள்:

அன்புள்ள அப்பா அவர்களுக்கு,

அநேக நமஸ்காரங்கள்.

நீங்கள் என்னிடம் மிகவும் அன்புடையவர் என்னை மிகவும் நேசித்து, ஆதரித்து, வளர்த்து ஆளாக்கி யிருக்கிறீர்கள். ஆகவே, நான் இப்போது உங்களைக் கேட்டுக் கொள்ளப் போகும் வேண்டுகோளுக்கு இசைவீர்கள் என்று நம்புகிறேன்.

என்னுடைய மைத்துனர்களில் ஒருவர் காலேஜில் படித்துப் பட்டம் பெற்று விட்டு, சமீபத்தில் இங்கே ஒரு நல்ல வேலையில் அமர்ந்திருக்கிறார். அழகும், அறிவும், அடக்கமும் உடையவர். அவருக்குக் கல்யாணம் செய்து பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார், 'இவர்'. அவர் புகைப்படத்தை இத்துடன் அனுப்பி யிருக்கிறேன்.

ஆனால் இந்தப் பக்கத்தில் எங்கள் மனத்துக்குகந்த பெண்ணாகக் கிடைக்கவில்லை. நம் பக்கத்திலிருந்தே பெண் கொள்ள வேண்டுமென்று எண்ணுகிறார். நாமே பெண் தேடிச் செல்வது முறையல்ல என்றாலும் நமக்குச் சரியான இடம் நம்மை நாடி வராவிட்டால் நாம்தானே அவர்களை நாடிச் செல்ல வேண்டும்?..."

ரேழியில் நின்று கேட்டுக் கொண்டிருந்த சதாசிவம் எரிமலையாகிக் கொண்டிருந்தார். "இவள் என்ன, என்னைக் கல்யாணத் தரகன் என்று நினைத்து விட்டாளா!...சீதா, உன் மைத்துனனுக்குப் பெண் தேடி என்னை அலையச் சொல்கிறாயா? பேஷ், பேஷ்! இனி மேல் போகுமிடங்களுக்கெல்லாம் என் பெண் ஜாதகத்தோடு, உன் மைத்துனன் ஜாதகத்தையும் தூக்கிக் கொண்டு போக வேண்டியதுதான்!"

...அப்பா, இப்போது உங்களை நான் ஒன்று கேட்டுக் கொள்ளப் போகிறேன். தயவுசெய்து மறுக்க மாட்டீர்களே?

"நம் செல்லத்தை அவருக்குக் கொடுக்கலாம் என்று எனக்கு வெகு நாட்களாக-நான் இந்த வீட்டுக்குள் நுழைந்த நாளிலிருந்தே-ஆசை. அந்த ஆசையை என் மனத்திலேயே வைத்து வளர்த்து வந்தேன். பலன் பெறுவதற்குரிய காலம் இப்போது வந்திருக்கிறது.

"நான் சமீபத்தில் அங்கு வந்தது கூட, நான் எதிர்பார்த்தபடி செல்லம் வளர்ச்சி பெற்றிருக்கிறாளா என்று அறியத்தான்! அவளைப் பார்த்த பின் எனக்குப் பூரண திருப்தி ஏற்பட்டு விட்டது.

நானும் செல்லமும் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படத்தை இங்கு எல்லோரிடமும் காண்பித்தேன். செல்லத்தை என் மைத்துனருக்கும் பிடித்திருக்கிறது என்பதையும் தெரிந்து கொண்டேன்.

என் மைத்துனர் ஒரு மாத காலமாக ஊரில் இல்லை. இரண்டு தினங்கள் முன்பு தான் வந்தார். ஆகவேதான், நான் இங்கு வந்தவுடனேயே இந்தச் செய்தியை உங்களுக்கு எழுத முடியவில்லை.

இந்தச் சம்பந்தத்தில் நாங்கள் - பிள்ளை வீட்டுக்காரர்கள் - முழுச் சம்மதம் தெரிவிக்கிறோம். உங்கள் விருப்பத்தைத் தெரிவிக்கவும்.

நமஸ்காரம்

சீதா

கடிதத்தைப் படித்து முடித்த செல்லத்தின் கண்களில், வைர ஒளிச்சிதர் அழகை வாரி இறைத்தது.

ரேழியில் நின்று கொண்டிருந்த சதாசிவம், "சீதா, நீ வைரமடி, வைரம்!" என்று நெஞ்சு தழுதழுக்கத் தமக்குள் கூறிக் கொண்டார்.


Cow & Gate Milk-Food
எல்லாக் குழந்தைகளும்
விரும்புவது மிக எளிதில்
ஜீரணமாகும் கௌ & கேட்
டாக்டர்களும் தங்களது
சொந்தக் குழந்தைகளுக்கு
தேர்ந்தெடுக்கும் உணவும்
அதுவே இன்றைய உலகில்
கௌ & கேட்டே தலைசிறந்த
உணவாகத் திகழ்கிறது என்
பதற்கு இதுவே தக்க சான்
றாகும். உங்கள் குழந்தைக்கு
கௌ & கேட்டை வற்புறுத்
திக் கேளுங்கள்.
5465
COW & GATE MILK FOOD
The FOOD of ROYAL BABIES

"ஆமாம். திறந்தேன்."

"என்னடா நிமிராகப் பேசறே? வந்தவங்க என்ன நினைப்பாங்க?"

"என்ன நினைத்தால் எனக்கென்ன, நீங்கள் கடையைப் போய்ப் பார்த்துக் கொள்ளுங்கள்."

"துரைவாள் எங்கே போகிறார்?"

"நான் எங்கேயாவது போகிறேன்."

கந்தையாவின் குரலில் கோபத்தை விட விரக்திதான் அதிகமாக இருந்தது.

"என்னடா சொல்லறே? இன்னும் பத்து நிமிஷம் பார்த்துக்கோ."

"முடியாது. நான் விலகிக்கொள்ளறேன்"





உறவும் உள்ளமும்

பெண் பார்க்க வந்தவர்கள் திருப்தியுடன் வாசலுக்கு வந்து கொண்டிருந்தார்கள். மூக்க பிள்ளை சந்தன தாம்பூலம், புது சமுக்காளம், ஊதுபத்தி அத்தனையும் அனுபவித்தார். பையனும் படித்தவன்.

வண்டிச் சதங்கையின் ஒலி தொலைவில் போய்க் கொண்டிருந்தது.

இதுகாறும் டீ போட்டுப் புகையோடு வெந்து கொண்டிருந்த கந்தையா நாதாங்கியைத் திறந்தான். சுற்றிச் சுழன்ற புகைக் கூட்டம் குப்பென்று வீட்டுக்குள் அலைமோதிச் சென்றது. இன்ப நினைவுகளில் திளைத்தவர் புகை வரவே, "ஏண்டா கந்தையா! புகை மூட்ட விடறே? இடையிலே ஒரு தரம் கதவை ஏன் திறந்தாயாம். என்னப்பா...." என்று அதிகாரமாய்க் கேட்டார்.

மூக்க பிள்ளையின் நெஞ்சிலே வலி கண்டது. கந்தையா விலகிக் கொண்டால் கடை நடக்கும். ஆனால் பணம் குவியாது. அதுவும் அவன் போடுகிற பட்டணம் பக்கடாவுக்கு ஈடு இணை இனி ஏது?

"என்னடா மிரட்டறே. வேலையை விட்டு நிற்க இதுதான் நல்ல நாளா?"

"ஆமாம். இதுதான் நல்ல நாள்" என்றான் கந்தையா.

"எதிர்த்தில்லே பேசறான்?"

மீனாட்சி புத்தாடையில் பூவும் மஞ்சளுமாக நின்று கொண்டிருந்தாள். அவள் கண்கள்

குனிந்தபடியே இருந்தன. காதில் அத்தனை வார்த்தைகளும் தெளிவாக விழுந்தன.

''நானைக் காலையிலே விலகிக் கொள்ளுகிறேன். எனக்குச் சேரவேண்டிய பணம் ரூபாய் ஆயிரத்து முந்நூற்றையும் கீழே வைக்க வேண்டும்'' என்றான் கந்தையா.

கந்தையா கடுகடுப்பாகச் சொன்ன போது குரல் விக்கியது. கண்ணிலே நீர் துளித்தது. ஏமாற்றமும் துக்கமும் முகத்தில் பிரதிபலித்தன. இவ்வாறு கந்தையா உணர்ச்சி வசப்படுவான் என்று பலகாரக் கடை முதலாளி எதிர்பார்க்கவில்லை. ஆட்டுக்கல், தோசைக் கல், மெது பக்கோடா இவற்றைப் போன்று அவனையும் ஒரு உணர்ச்சியற்ற ஜடமாகவே அவர் எண்ணியிருந்தார்.

''தந்து விடுகிறேன். பணத்தைக் கொண்டு என்ன செய்யப் போகிறாய்?''

''சாக்கடையிலே போடுவேன்!''

பையன் மனத்திலே வருத்தம் கிளைவிட்டு மரமாக வருவதைக் கண்டதால் கடைக்குள் வந்தார் மூக்கபிள்ளை. கந்தையா சோப்பு டப்பியும் கையுமாகக் குழாயடியில் உட்கார்ந்தான். கொதிக்கும் உடம்புக்கும் உள்ளத்துக்கும் தண்ணீர் இதமாக இருந்தது.

படித்து உத்தியோகம் பார்க்கும் பிள்ளைக்குத் தம் பெண்ணைக் கொடுக்க மூக்க பிள்ளைக்கு ஆசை. கலியாணச் செலவையும் ஒப்புக் கொள்ளுகிறார். கந்தையாவின் மனம் படாதபாடு பட்டது. எத்தனையோ முறை அவரோடு வாதாடிப் பார்த்தான். இன்று அவனால் தாங்க முடியுமா? மாப்பிள்ளை வீட்டார் வந்து மீனாட்சியைப் பார்த்துத் திருப்தி தெரிவித்துப் போயிருக்கிறார்கள்.

கந்தையாவின் உடம்பு பள பள வென்று இருக்கும். சமையல் வேலை, ஆட்டுக் கல்லோடும் தண்ணீர் அண்டாக்களோடும் குஸ்திசெய்த கை, கரளைகரளையாகப் பார்க்க எடுப்பாக இருக்கும். தலை நிறைய அடர்த்தி மயிர். தைலம் தேய்த்து வாரிக் கொண்டிருந்தான். பளிச்சென்று குங்குமம் இட்ட கனை; நெற்றியில் வெண்மை பூத்தது போல விபூதி; பன்னீர் மணம் பரப்பும் பட்டு விபூதி. தூய்ய மல் சட்டை; அவன் உடம்பின் கட்டுமஸ்தான சதைப்பற்றைக் கடைசல் பிடித்தது போல அழகு படுத்தின ஆடையும் அலங்காரமும்.

மீனாட்சி உள்கட்டில் நின்று பார்த்தாள். அவளுக்கும் நெஞ்சு பகீர் என்றது.


''காப்பியாவது டீயாவது கொண்டு வரட்டுமா?'' என்று அவனைப் பார்த்துக்கேட்டாள்.

''புது மருமகன் வருவாரே, அவருக்குக் கொடு. எனக்கு எதற்குக் காப்பியும் டீயும்? நானை இந்நேரம் பம்பாய் போகிறேன் ஐயா!''

''பம்பாய்!''

மீனாட்சிக்குக் கண்ணீர் மல்கியது. மெதுவாக வெளியே வந்தாள்.

கந்தையா, பூட்டலைத் தேடிக் கொண்டிருந்தான். கையிலே சிக்கு கைக்குட்டையில் பூசியிருந்த செண்டு வட்டமிட்டது.



" அத்தான்! நீங்கள் கல்யாணத்துக்கு இருக்காமல் போகக் கூடாது."

" நல்லா இருப்பாங்க! இன்னைக்கு என் மனம் கொஞ்சம் கூடச் சரியில்லே. அந்தத் தடிப்பயலே ஓங்கி இருப்பகப்பையால் அடிக்க வேணுமென்று நினைத்தேன்."

" அதற்கு என்னப்பா செய்ய? உங்க மாமாதான் உனக்கு மீனாட்சியைக் கொடுக்க முடியாதுன்னு சொல்றாங்களே" என்றாள் மீனாட்சியைப் பெற்ற தாய்.

" நான் போய் வர்றேன். நாளைக் காலை யில் பத்து மணிக்கு என்னுடைய பணம் ரூபாய் ஆயிரத்து முந்நூறும் தந்திடவேணும். சாயங்காலம் ரயில் ஏறுகிறேன்."

" சரி. எதுக்கும் கல்யாணத்துக்கு இருந்து விட்டுப் பிறகு எங்கு வேணுமானாலும் போ."

" மூணு வருசமா உழைச்சேன், அத்தை! மாடா உழைச்சேன். என்ன சம்பளம் அளந்து போட்டீங்க? இல்லே, அந்த மாப் பிள்ளையாண்டான் என்னை விட எந்த வகை யிலே உசத்தி? அதைச் சொல்லு. பிச்சைக் காரப் பய—வந்த மாப்பிள்ளையைச் சொல்ல றேன் அத்தை. என்னமோ எண்பது ரூபாய் சம்பளமாம் ஆபிஸிலே. இந்த எண்பது ரூபாய் ஒரே வாரத்திலே போண்டா போட்டா வராதா? வெங்காய தோசை போட்டேன்னு விழாது கலகலன்னு கல்லாவிலே?"

அத்தை பெருமூச்சு விட்டாள்.

" அத்தை! நமக்கு ராசி பெயர்ந்தாச்சு. என் குணம் கெட்டது. இந்த ஊரிலே உங்கள் கடையிலே இருந்தால் ஒரு நாள் இல்லாது போனால் ஒரு நாள் விபரீதமாக என்னத்தை யாவது செய்து வைப்பேன். அதனால் மீனாட்சிக்குத்தான் கேடு. நான் கண் காணாத ஊருக்குப் போகிறேன்."

கந்தையாவின் முரட்டுத்தனம் மீனாட்சிக்கும் தெரியும்; அவள் தாயாருக்கும் தெரியும். தகப்பனிடம் சண்டை போட்டு ஆயிரம் ரூபாய் கொண்டு வந்து கடையில் அண்டி வருடம் மூன்றாகிறது. பணத்துக்கு வட்டி உண்டு; பாசத்துக்கும் அவன் வட்டி உண் டென்று எண்ணி விட்டான். கந்தையாவின் பணம், வட்டி, சம்பளம் என்று பாங்கியில் வைத்திருக்கிறார் மூக்கபிள்ளை. கந்தையா வின் மனம் கடுகடுத்தாலும் ஏதோ சில தினங்களில் மாறிப் போய் விடும் என்று எதிர் பார்த்து, படித்தவனை, உத்தியோகத்தில் இருப்பவனை முடிக்கத் திட்டம் போட்டார். வெற்றியும் நெருங்கி விட்டது.

கந்தையாவின் விரோதத்தை முதலாவி மூக்கபிள்ளை பெரிதாக எண்ணவில்லை. பணத் தைக் கொடுத்து ஆளைத் தள்ளி விடவும் திட்டமிட்டு விட்டார்.

கடைக்கு முன்னால் வெள்ளை மல்லும் 'கிரீச் கிரீச்' செருப்பும் போட்டுப் போகும் கந்தை யாவைப் பார்த்துச் சிரித்துக் கொண்டார்.

" என்னங்க, சரக்கு மாஸ்டர் ஜாலியாகப் புறப்பட்டுப் போகிறார்?"

" ஆமாம். சினிமாவுக்குப் போறான்" என்று வாடிக்கைக்காரர் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தார் மூக்கபிள்ளை. அன்று அவர் மனம் கந்தையாவை இழக்கச் சித்தம் செய்து விட்டது. பணத்தையும் கொடுக்க ஏற்பாடுகள் செய்து விட்டார். பாங்கி

விருந்த பணத்தைக் காலையில் வாங்கிவர எழுதியும் முடித்தார்.

அன்றிரவு கந்தையா வரவில்லை.

"என்னங்க! கந்தையா மனசு ரொம்பக் கஷ்டப்படுகிறான்" என்றாள் வீட்டு அம்மாள்.

"சீ, வாயை மூடு. கஷ்டப்பட்டால் என்ன? இவனுக்கு என்னுடைய பெண்ணைக் கொடுக்க முடியாது."

"நான் என்ன சொல்லவேறேன்? பணத்தைக் கொடுக்காமல் அவனை இங்கேயே இருக்க வழி சொல்லுங்க. இன்னும் இரண்டு மாசத்திலே ஒரு பெண்ணைப் பார்த்து..."

"அது அவனுடைய இஷ்டம். பணத்தைக் கொடுத்து விடுகிறேன். இருந்தால் இருக்கட்டும். போனால் போகட்டும்."

மீனாட்சிக்குத் தன் மனசைச் சொல்ல முடியவில்லை. அவள் கடமை, அப்பா மனம் நோகக் கூடாது. ஆனால் கல்யாணம் முடியும் வரையில் கந்தையா இருந்தால்?....

மறு நாள்.

நோட்டு நோட்டாகப் பணத்தை எண்ணி வைத்தார் மூக்கபிள்ளை. கந்தையா பணத்தைக் கண்டதும் ஊக்கம் இழந்தான். இனி அங்கே இருக்க முடியாது; கூடாது. உடனே கிளம்பியாக வேண்டும்.

"மாமா, யோசித்துப் பாருங்கள்."

"என்ன யோசிக்க? உனக்கு என்னுடைய பெண்ணைத் தர முடியாது."

"என்னைவிட என்ன உயர்வு அந்த எண்பது ரூபாய்க்காரன்?"

"அது எனக்குத் தெரியும்."

"நான் நினைத்தால் இந்த ஊரிலேயே சம்பாதிப்பேன். மாசம் எண்ணூறு ரூபாயும் சம்பாதிப்பேன்."

"மகராஜனாகச் சம்பாதித்துக்கொண்டிரு."

"முதலாளி இருக்கிறீங்களா?" என்று கேட்டுக் கொண்டே தரகன் தங்கசாமி உள்ளே நுழைந்தான்.

"அடேடே! வாங்க தரகு ஐயா."

"உங்களுக்குத்தான் யோகம் வந்திருக்குது. அரச மரத்தடி டீக்கடை இப்போ விலைக்கு வருகிறது. அதையும் வாங்கிப் போடுங்க" என்றார் தரகன் தங்கசாமி.

மூக்கபிள்ளை வானத்தைப் பார்த்தார். நெஞ்சு விம்மியது. நினைவு அலைபாய்ந்தது. அரசமரத்துக் கடை அவரது இலட்சிய எல்லை; அது விலைக்கு வருகின்ற சமயம் மகள் கல்யாணம் உறுதியாகும் வேளை; பணம் கைவசம் இல்லாத போது. கடன் பெறுவதற்கும் அவருக்கு மனம் இல்லை.

"நமக்குக் கொடுத்து வைக்க வில்லை. இப்பொழுது கையில் பணம் இல்லை."

தரகன் சும்மா விடுவாரா? "இன்னும் ஒரு வாரம் போகட்டும். புரட்டிக் கொடுங்கள்" என்றார்.

"நமக்கு இல்லை, ஐயா. வேறு யாருக்காவது கையடியுங்கள்" என்றார்.

"ஏன், தம்பி, பம்பாயை விலைக்கு வாங்கப் போகிறாயாமே? நீ சொல்லு. உங்க மாமாவுக்கு அரசமரத்துக் கடை போனால் யாருக்குக் கிடைக்கும்? சொல்லு என் சிங்கக் குட்டி" என்றான் தரகன், கந்தையாவிடம்.

"பம்பாய் போகிறதாக இருந்தேன்."

"இருந்தேன்னு?"

"இப்போ இல்லே."

தரகர் நிமிர்ந்து உட்கார்ந்தார். கந்தையா தொடர்ந்து கேட்டான்:

"அந்தக்கடை என்ன விலே சொல்லிறுன்?"

"இரண்டாயிரம்."

"இதோ இருக்குது மாமா; நீங்க ரொம்பக் காலமாக ஆசைப்பட்ட கடை விலைக்கு வருது. என் பணத்திலே நூறு போதும். பாக்கியை வைத்து வாங்குங்கள்."

"என்டா, இது நிஜமா?" என்றார் மூக்க பிள்ளை திடுக்கிட்டபடியே.

"ஆமாம். பணத்தைக் கொடுத்து விட்டுப் பதிலுக்கு மீனாட்சியைக் கேட்பேன் என்ற பயமும் வேண்டாம். நான் எப்படியும் வாழலாம். எங்கேயும் வேலே செய்வேன். நீங்களே பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். என்னால் உங்களுக்கு இந்தச் சிறு உபகாரமாவது இருக்கட்டும், மாமா!"

கந்தையா சிறிதும் கபடமின்றி மனம் விட்டுத்தான் பேசினன்.

"அப்படித்தான் செய்யுங்களேன்!" என்ருள் மீனாட்சியின் தாய். தரகனும் மூக்க பிள்ளையைக்கைபிடித்து அழைத்துப்போனான். தமது லட்சிய எல்லையாக இருந்த அரசமரத்தடிக் கடையை வாங்கிவிடக் கிளம்பிவிட்டார். கைமேல் பணம் இருக்கிறபோது அவருக்கு என்ன பயம்?

வழியிலே தரகன் "என்னங்க, கந்தையா மனசைப் பார்த்தீங்களா? இப்படி யார் இருப்பா? உறவு உறவுதான். வேலேயாள் வேலேயாள்தான்!"

"அவனுக்கு உலகம் வெறுத்துப் போச்சு."

"ஏன்?"

ஆதியும் அந்தமாக எல்லாவற்றையும் சொல்லி முடித்தார் மூக்க பிள்ளை.

"நீங்க பெண்ணைக் கொடுக்க மறுத்தும் உங்களுக்குப் பணம் கொடுத்த மனுஷ்யன் தெய்வம் மாதிரி அல்லவா?"

மூன்ரும் மனுஷன் பார்த்த பார்வைக்குள் அவர் மனம் தடம் பிடித்தது.

கடையை விலேபேசி அட்வான்ஸ் கொடுத்து விட்டுக்குள் வருவதற்குள் மணி இரவு இரண்டாகி விட்டது. அவர் மனசுக்குள்ளே வேதனை குமைந்தது. மகள் மீனாட்சியை அவனுக்கே கொடுத்து விடலாம் என்ற நப்பாசை மனத்துக்குள் வளையமிட்டபடியே வந்து கொண்டிருந்தார்.

கதவைத் தட்டினர். வெளித் திண்ணையில் வழக்கமாகப் படுத்திருக்கும் கந்தையாவைக் காணும். படுக்கை மட்டும் கிடந்தது.

"ஏன், கந்தையா எங்கே?"

பரபரப்பாகத் தேடினர்கள். மீனாட்சி தன் அறைக்குள் அழுது கொண்டிருந்தாள்.

"ஏனம்மா அழறே?"

"அவர் ஓடிவிட்டார்..."

"ஓடி விட்டானு?"

"இதோ கடுதாசி பாருங்க!"

மூக்கபிள்ளை வருத்தத்துடன் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தார்.

"அன்புள்ள மாமா,

நான் ஓடிப்போகாவிட்டால் உங்கள் குடும்பம் கெடும். நான் முரடன். நான் உலகத்தில் எங்கே இருந்தாலும் பிழைப்புக்கு நல்ல வழியைச் சொல்லிக் கொடுத்தீர்கள். அதற்குச் சன்மானமாகத்தான் என் பணம் ஆயிரத்து இருநூறும் கொடுத்தேன். மீனாட்சியை அன்போடு பார்த்துக் கொள்ளுங்கள். அவள் திருமணம் சிறப்பாக நடக்கட்டும். என் ஆசியும் அன்பும். போய் வருகிறேன்.

தங்கள் அன்புள்ள,

தொழிலாளி கந்தையா."

"நான் நினைத்ததை யெல்லாம் மண்ணுக்கிவிட்டான்" மூக்கபிள்ளைக்கு அழுகை உடம்பை உலுக்கிற்று. குழந்தை போல விக்கினர்.

"இப்போது அழுது என்ன பயன்?" என்ருள் அவர் மனைவி.

"அவனுக்கே அரச மரக் கடையை வாங்கி, மீனாட்சியைக் கொடுக்க வேண்டும் என்ற முடிவில் வந்தேன். ஆனால்..."

"உங்கள் முடிவை உடைப்பில் போடுங்கள். செத்த பின்பு இது என்ன சிங்காரப் பேச்சு?"

ஒரு நாளும் எதிரே நின்று பேசாத மகள் கந்துவனைக் கேட்டார். மீனாட்சி ஆத்திரம் தீரப் பேசி விட்டாள்.


"அம்மா மீனாட்சி, நான் செய்தது தவறு."

"எதற்கும் ரயிலடியைப் போய்ப் பாருங்கள்" என்ருள் தாய்.

"பார்க்கிறேன்." தலைதெறிக்க ஓடினர்.

மீனாட்சியின் அதிர்ஷ்டம், அன்றைக்கு 225 நிமிஷம் மெயில் வண்டி தாமதம். மன்னிப்பு கேட்க அவ்வளவு நேரம் போதாதா?

யார் வெளிச்சத்தைக் கொடுக்கிறார்கள் ?



படிக்க வெளிச்சம், அறிவு வளர வெளிச்சம், சுகத்திற்கும் ஓய்வு நேரத்தை அனுபவிப்பதற்கும் வெளிச்சம். எல்லோருக்கும் சிறந்த வெளிச்சம் அவசியம் மண்ணெண்ணெயின் மூலம் கிடைக்கும் இந்த வெளிச்சம் எளிய வீடுகளையும் சோபிக்கச்செய்கிறது.

சிலசமயம் மண்ணெண்ணெய் மட்டுமே சக்தி அளிக்கும் சாதனமாகவிருக்கலாம். சிற்சில சமயங்களில், இதர எரிகரிகள் இருக்கும்பொழுதும்கூட மண்ணெண்ணெயே தேர்ந்தெடுக்கப்படுகிறது. ஏனெனில் அது மலிவானது. சௌகரியமானது, மற்றும் எளிதில் கிடைக்கக் கூடியது.

பெட்ரோலியத்திலிருந்து தயாரிக்கப்படும் மண்ணெண்ணெயின் உபயோகங்கள் எண்ணற்றவை. ஆனால் ஜனப் பெருக்கத்தினாலும் வாழ்க்கைத்தரம் உயர்ந்து விட்டதினாலும், மண்ணெண்ணெய் புதிய துறைகளில் உபயோகிக்கப்படுகின்றன. சிறிய அளவுகளிலும் ஒதுப்புற பிரதேசங்களிலும் நாடெங்கும் மண்ணெண்ணெய் விநியோகிப்பது மிகவும் கஷ்டமானதும் சிக்கலானதுமான காரியமாகும். ஆனால் நாடெங்கும் இரவும் பகலும் இடைவிடாமல், மண்ணெண்ணெயை வழங்கச் செய்ய பர்மா – ஷெல்லிலுள்ள நாங்கள் ப்ரம்மாண்டமான விநியோக ஏற்பாடுகள் செய்துள்ளோம்.

பர்மா-ஷெல் ஸ்தாபனத்தின் விசால நோக்கமும், வளர்ந்து வரும் தன்மையுமே, இந்தியாவின் மூலைமுடுக்கிலுள்ள கிராமத்திற்கும், தற்காலத்திய வாழ்க்கையின் சுகத்தைக் கிடைக்கச்செய்துள்ளது.

பர்மா-ஷெல்... பாரதநாட்டின் வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறது


பூவைப் போல ...
உங்கள் மேனியை மலரச்
செய்வது ரெக்ஸோனா
ரெக்ஸோனா சோப்பில் இருப்பது கேடில் — சருமத்திற்கு ஊட்டமளித்து உங்கள் இயற்கையழகை வெளிக்கொணரத் துணை புரியும் எண்ணெய்கள் கலந்த விசேஷத் தைலமே கேடில்!
Rexona
BLENDED WITH CADYL
கேடில் கலந்த டாய்லெட் சோப்
இது ஒன்றே
ரெக்ஸோனா ப்ரொப்ரைடரி லிமிடெட்டுக்காக இந்தியாவில் தயாரித்தது
RP. 150-50 TM



அத்தியாயம் 13

யார் அந்தப் பெண்?

புலிப்பள்ளியாரைத் திருபுவனி தனியே சந்தித்துப் பேசியது தவறு என்று அருந்திகை இடங்காக்கப்பிறந்தாரிடம் எடுத்துரைத்தாள் அல்லவா? மேலும் அருந்திகை தொடர்ந்து கூறினான்: ''திருபுவனியிடம் எதையேனும் சொல்லி மிரட்டி இருக்கலாம் அல்லவா? பாவம். பெண்தானே? பயந்து ஏதேனும் தவறான யோசனைகள் செய்திருப்பாள். இந்த விபரீதம் நேர்ந்ததற்குக் காரணம் அதுவாகத்தான் இருக்குமென்று நான் நினைக்கிறேன். நான் புலிப்பள்ளியாரைப் பற்றி இப்படிச் சொல்கிறேனே என்று கோபப்படாதீர்கள். என் மனத்தில் பட்டதைச் சொல்கிறேன்'' என்றார்.

பெருந்தக்க இடங்காக்கப் பிறந்தார் மனம் குழம்பியபடியே, ''உங்கள் மீது எனக்கென்ன கோபம்? உங்கள் மனத்தில் தோன்றியதை நீங்கள் சொல்லுகிறீர்கள். அப்படி இருந்தாலும் இருக்கலாம்'' என்று கூறினார்.

''அப்படித்தானிருக்க வேண்டுமென்று நானும் ஆரம்பத்திலேயே நினைத்தது உண்டு'' என்றார், அங்கு நின்று கொண்டிருந்த இடங்காக்கப் பிறந்தாரின் ஆலோசனையாளர்களில் ஒருவர்.

இதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த பொற்கோமன் மிகவும் ஆத்திரமும் கோபமும் கொண்டவனாக, ''இளவரசி! நீங்கள் சொல்வது பிசகு. நீங்களும் கொடும்பாளூர் இருக்குவேளிர்களும் சேர்ந்து செய்யும் சூழ்ச்சியின் விபரீதம்தான் இது. பரம்பரையாக இடங்காக்கப் பிறந்தாரின் வம்சத்தினர் சோழ வம்சத்தினரிடம் மிக்க மரியாதையும் பக்தியும் வைத்திருக்கின்றனர். இன்றும் அந்த மரியாதையும் பக்தியும் குறைந்து விடவில்லை. ஆனால் நீங்கள் தான் எங்களுக்குத் துரோகம் செய்ய விரும்புகிறீர்கள். எங்களை விரோதம் செய்து கொள்வதற்குப் பார்க்கிறீர்கள்'' என்று கூறினான்.

இதைக் கேட்டதும் அருந்திகையும் சிறிது ஆத்திரம் கொண்டவளாக, ''இல்லை. நீங்கள் நினைப்பது தவறு. பழையாறையிலிருந்து அநுதாபத்தோடு இங்கு வந்த என்னிடம் நீங்கள் இப்படிப் பேசக் கூடாது'' என்றாள்.

இடங்காக்கப்பிறந்தார் தம் மகனைச் சமாதானம் செய்து கண்டிப்பவர்போல, ''பொற்கோமா! இளவரசியாரிடம் இப்படியெல்லாம் பேசுவது தவறுதான். அவர்களுக்குப் பரம்பரையாக நம்முடைய குடும்பத்தாரிடமுள்ள விசுவாசம் போய் விடுமா...?'' என்றார்.

பொற்கோமனின் கோபம் அடங்குவதாயில்லை. ''நான் பேசுவதில் எவ்விதத் தவறுமில்லை. உண்மையை அறிந்துதான் பேசுகிறேன். இந்நாட்டில் பல்லவ சக்கரவர்த்தியின் ஆதிக்கத்தை ஒழித்து மறுபடியும் சோழ சாம்ராஜ்யத்தை நிறுவுவதில் நமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. ஆனால் நம்மிடம் தங்கள் சூழ்ச்சிகளைக் காட்டுவதில் அவர்களுக்கு எவ்வித லாபமுமில்லை. நாம் புலிப்பள்ளியாரோடு சம்பந்தம் வைத்துக் கொள்வதைப் பழையாறையைச் சேர்ந்தவர்களும், கொடும்பாளூரார்களும் விரும்பவில்லை. இதை எப்படியேனும் தடுக்க அவர்கள் முயற்சி செய்கிறார்கள் என்பதை நான் அறிந்து கொண்டிருக்



கிறேன். புலிப்பள்ளியார் நேற்று என்னோடு தனிமையில் பேசிக் கொண்டிருக்கும் போது இந்த உண்மையைச் சொன்னார். இந்த விவாக சம்பந்தத்தைத் தடுத்து விடுவதனால் மறுபடியும் இந்நாட்டில் சோழர் தனியரசு ஏற்பட்டு விடப் போகிறதா? இதெல்லாம் பைத்தியக்காரச் சூழ்ச்சி. எனக்கு நன்றாகத் தெரியும். இவர்களின் சூழ்ச்சியினால்தான் திருபுவனி இந்தமாளிகையிலிருந்து கடத்திக் கொண்டு போகப் பட்டிருக்கிறாள். நந்திபுர நகரத்து இடங்காக்கப் பிறந்தார்க்குப் பெரிய படை பலம் இல்லாவிட்டாலும் வீரமும், நெஞ்சில் உரமும் நிறைய உண்டு என்பதை மற்றவர்கள் மறந்து போனதுதான் மிகவும் ஆச்சர்யம்...'' என்றான்.

தம்முடைய மகனின் ஆவேசம் நிறைந்த பேச்சு இடங்காக்கப்பிறந்தாரின் மனத்தைக் கலங்க வைத்தது. அவனுடைய வார்த்தைகளில் ஏதேனும் சிறிது உண்மையிருப்பினும் அவன் அப்பொழுது அப்படிப் பேசியது தவறு என்றுதான் அவருக்குப் பட்டது. இருப்பினும் மகளை இழந்த துயரத்தில் மனம் குழம்பியிருக்கும் அவர் அப்பொழுது அவனைச் சமாதானம் செய்யக் கூடாத நிலையில்தான் இருந்து வந்தார். ''இளவரசியாரிடம் இப்படி எல்லாம் பேசாதே. தவறு'' என்று சொல்வதோடு நிறுத்திக் கொண்டார்.

அருந்திகைப் பிராட்டி பொற்கோமவின் துடிதுடிப்பும் ஆவேசமும் நிறைந்த பேச்சைக் கேட்டு மனங் கலங்கிவிடவில்லை. அவள் அலட்சியமான சிரிப்போடு அமைதியான குரலில், ''நீங்கள் நினைப்பது தவறு. தவறான அபிப்பிராயங்கள் மனத்தில் ஆழப்பதிந்துவிட்டபடியால் தவறாகப் பேசவும், தவறான காரியங்களைச் செய்யவும் துணிந்திருக்கிறீர்கள் என்று சொல்ல வேண்டும். மற்றவர்கள் உங்களோடு சம்பந்தம் வைத்துக் கொள்ளும் முறையில் சோழ வம்சத்துக்குள்ள கொஞ்சம் பெருமையையும், ஆதிக்கத்தையும் எப்படிக் குலைக்கலாம் என்று திட்டமிட்டிருக்கலாமே தவிர, நாங்கள் உங்கள் வாழ்க்கையைக் குலைக்க முயற்சி செய்யவில்லை என்பதை மாத்திரம் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு விரோதியல்ல. உங்கள் நன்மையைக் கோருகிறவர்கள். பெரிய இடத்துச் சம்பந்தம் செய்து கொள்ளப் போகிறோம் என்ற மோகத்தில் உங்களுக்கு எதுவும் தெளிவாகாமல் போனதில் ஆச்சரியமில்லை. எல்லாம் பின்னால்தான் உங்களுக்குத் தெரியும். பழையாறை நகருக்குச் சமீபமாக இருக்கும் நீங்கள், பரம்பரையாகச் சோழ மன்னர்களின் அன்பிலும் ஆதரவிலும் வாழ்ந்த நீங்கள், அவர்களுக்கு விரோதியாவது உங்களுக்கு மிகுந்த கெடுதலைத்தான் உண்டாக்கும் என்பதை மாத்திரம் நினைவில்



பதிய வைத்துக் கொண்டால் போதும். நான் போய் வருகிறேன்'' என்று சொல்லி விட்டுச் சட்டென்று போய்ப் பல்லக்கில் அமர்ந்து பல்லக்குத் தூக்கிகளுக்குச் சைகை காட்டினுள். இளவரசியாரின் பல்லக்கும் பரிவாரங்களும் பழையாறையை நோக்கிச் சென்றன.

அருந்திகைப் பிராட்டிக்கு உண்மை விளங்கி விட்டது. திருபுவனியாகத் திகழ்ந்த மாலவல்லி கோளாந்தகனை மணம் செய்துகொள்ள வேண்டுமே என்ற பயத்தினுல் எங்கோ மறைந்து விடவில்லை என்கிற ரகசியம் அவளுக்குத் தெளிவாகப் புலனுகியது. முதல் நாள் வந்த புலிப்பள்ளியார் அவளிடம் பல விஷயங்களைப் பற்றிப் பேசியிருக்க வேண்டும். அவள் உண்மையாக இடங்காக்கப் பிறந்தாரின் மகள் திருபுவனி அல்ல என்று தெரிந்து கொண்டிருக்கும் அவர் அவளுடைய உண்மை நிலை பற்றிக் கேட்டிருக்க வேண்டும். அதோடு மட்டுமல்ல; பூதுகன் இறந்தது பற்றியும் சந்தகர் சிறை பிடிக்கப்பட்டதைப் பற்றியும் அவளிடம் சொல்லி இருக்க வேண்டும். இவற்றையெல்லாம் கேட்டதும் அவள் மனம் நிலைகுலைந்து அந்த இடத்தை விட்டுச் சமயம் பார்த்து ஒருவர் கண்ணிலும் படாமல் இரவோடு இரவாக வெளியேறியிருக்க வேண்டும் என்று தீர்மானித்தாள்.

நந்திபுர நகரத்திலிருந்து திரும்பியதும் அருந்திகை விஜயனிடம் எல்லா விவரங்களையும் சொன்னுள். விஜயனும் அவளுடைய அபிப்பிராயங்களை ஒப்புக்கொண்டான். மாலவல்லி அப்பொழுது காஞ்சியை நோக்கித்தான் போயிருக்க வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தனர். விஜயனின் மனம் துடித்தது. எப்படியாவது அவளை இடங்காக்கப் பிறந்தாரின் ஏவலாளர்கள் கையில் சிக்காத வண்ணம் தடுத்துக் காப்பாற்றி விட வேண்டும் என்று தீர்மானித்தான். அவனே மாலவல்லியைத் தேடிப் புறப்படலாமா என்ற துடிப்பில் இருந்தான். அப்பொழுது அருந்திகைப் பிராட்டி அவனைத் தடுத்து வேறு யாரேனும் குதிரை வீரர்களை அனுப்புவதுதான் உசிதம் என்று சொன்னுள். விஜயனும் அவள் வார்த்தையை ஏற்றுக் கொண்டு நல்ல குதிரை வீரர்கள் இருவரை அழைத்து, எப்படியேனும் இடங்காக்கப் பிறந்தாரின் மகள் திருபுவனியைத் தேடிக் கண்டு பிடித்து அழைத்து வரும் படி கட்டளையிட்டான்.

விஜயனுல் அனுப்பப்பட்ட பெருஞ்சிங்கன், வில்வலன் என்ற குதிரை வீரர்கள் இருவரும் குடந்தை நகர் வந்து மிகச் சாமர்த்தியமாக இடங்காக்கப் பிறந்தாரின் மகள் திருபுவனியைப் பற்றி அங்கு உலாவி வந்த வதந்தியை விசாரித்து விட்டு, அங்கு அவளைத் தேடுவதற்குச் சிலரை உளவாளிகளாக வைத்து விட்டுக் காஞ்சியை நோக்கிப் புறப்பட்டனர். அவர்கள் பல ஊர்களைக் கடந்து வேலூர்சாலைக்கு வந்த பொழுது இரவு நெருங்கி விட்டது. பல ஊர்களிலும் அவர்கள் திருபுவனியைத் தேடி அலைந்ததனுல் மிகவும் களைப்படைந்திருந்தனர். அந்த இரவு வேளையில் அவளைத் தேடுவது கடினம் என்று பட்டது. நெடுந்தூரம் சுற்றியதனுல் அவர்களும் அவர்கள் ஏறி வந்த குதிரைகளும் களைப்படைந்திருந்தாலும் ஓய்வு எடுத்துக் கொள்ளும் நிலையில் இல்லை. மறுநாள் காலைக்குள் காஞ்சிமா நகரை அடைந்து விட வேண்டும் என்ற தீர்மானத்தில் அவர்கள் இருந்தனர். தங்கள் பிரயாணத்தைத் தொடர்ந்து நடத்த அவர்கள்



முடிவு செய்ததனால் குதிரைகளை விரட்டாமல் மெதுவாகவே நடத்திக்கொண்டு வந்தனர்.

முன் நிலவுக் காலம். இரு புறமும் மரங்கள் அடர்ந்த அந்தச் சாலை மிகவும் ரமணீயமாக விளங்கியது. சிலு சிலு வென்று அவர்களை வந்து தழுவிய குளுமையான காற்று பிரயாணத்தினால் ஏற்பட்ட அவர்கள் உடல் சிரமத்தைப் போக்குவதாயிருந்தது. அந்தச் சாலையும் எவ்வித மேடு பள்ளங்களும் வளைவுகளும் இல்லாமல் நேராக இருந்ததால் குதிரைகளும் தங்கள் ஆயாசம் தீரத் தூங்கிக் கொண்டே நடப்பது போல நடந்தன.

பெருஞ்சிங்கன் கதை சொல்வதில் நிபுணன். அவன் தோழன் வில்லவன் கதை கேட்பதில் மிகவும் ஆர்வம் உள்ளவன். பெருஞ்சிங்கன் தன் பாட்டனுக்குப் பாட்டன் பூர்வீகச் சோழ மன்னர்களிடம் சேனாவீரனாய் இருந்து விளைவித்த வீரப் பிரதாபங்களையெல்லாம் மிகுந்த வர்ணனையோடு சொல்லிக் கொண்டு வந்தான். வில்லவனும் தான் பாட்டனைப் பற்றியோ அல்லது பாட்டனுக்குப் பாட்டனைப் பற்றியோ இவ்வளவு அழகாகக் கதை சொல்ல முடியவில்லையே என்ற மன ஆதங்கத்தோடு கேட்டுக் கொண்டு வந்தான்.

கதைப் போக்கில் மெய்மறந்திருந்த அவர்கள் கவனத்தை வேறு ஏதோ சத்தம் கிளர்ச்சி கொள்ளச் செய்தது. ''கொஞ்சம் பேசாமலிரு. ஏதோ சத்தம் கேட்கிறது'' என்றான் வில்லவன். பெருஞ்சிங்கன் கதை சொல்வதை நிறுத்திக் கொண்டு சத்தத்தைக் கவனமாக ஊன்றிக் கேட்டான். தடதட வென்று குதிரைகள் ஓடும் சத்தம் கேட்டது. அந்தச் சாலையிலேயே தங்களுக்கு முன்னால் வேறு யாரோ குதிரைகளில் செல்கிறார்கள் என்று அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். அவர்கள் யாராயிருக்கும் என்பதைப் பற்றி அப்பொழுது சிந்திக்க அவர்களுக்கு இஷ்டமில்லை. அவர்கள் யாராயிருந்தாலும் தங்கள் குதிரைகளைத் துரிதப் படுத்தி அவர்களைப் பிடித்துவிட வேண்டுமென்றுதான் அவர்களுக்கு ஆர்வம் ஏற்பட்டது. முன்னால் செல்கிறவர்கள் அவர்கள் கண்களுக்குப் படாவிட்டாலும் அந்த இரவு வேளையில் குதிரைகளின் குளம்படிச் சத்தம் அவர்கள் அதிக தூரத்தில் போகவில்லை என்பதை அவர்களுக்கு உணர்த்தியது. ''குதிரையைக்கொஞ்சம் துரிதப்படுத்து. அவர்கள் யாரென்று பார்த்து விடலாம்'' என்று சொல்லி விட்டுப் பெருஞ்சிங்கன் தன் குதிரையை உசுப்பி விட்டான். இவ்வளவு நேரமும் எவ்விதக் கவலையுமின்றித் தூக்கத்திலே நடந்து வந்த குதிரைகளுக்குத் திடீரென்று தங்களை உசுப்பி விரட்டுவது பிடிக்காவிட்டாலும் வேறு வழியின்றிக் கண்விழித்துக் கொண்டு கொஞ்சம் துரிதமாகவே ஓடத் தொடங்கின.

சிறிது நேரத்தில் முன்னால் செல்லும் இரு குதிரை வீரர்கள் அவர்கள் கண்களில் பட்டார்கள். முன்னால் போகிறவர்களின் குதிரைகள் முன்னிலும் துரிதமாக ஓடத் தொடங்கின. அவர்கள் பின்னால் வரும் தங்களுக்குப் பயந்து இன்னும் துரிதமாகச் செல்வதை அறிந்த பழையாறை வீரர்கள், ஒருவேளை அவர்கள் கள்வர்களாக இருக்க வேண்டும், அல்லது தங்களைக் கள்வர் என்று தவறாகக் கருதிப் பயந்து ஓட நினைக்கும் வியாபாரிகளாக இருக்க வேண்டும் என்று நினைத்தார்கள். எப்படியும் அவர்களைப் பிடித்து விட வேண்டும் என்ற நோக்கத்தில் தங்கள் குதிரைகளை அதிவேகமாக விரட்டினர். முன்னால் இரு குதிரைகள் ஓடுவதைக் கண்ட பழையாறை வீரர்கள் ஏறியிருந்த குதிரைகளும் அவைகளைப் பிடிக்க ஆவல் கொண்டு அதி வேகமாகப் பறந்தன. சில விநாடி நேரத்தில் பழையாறை வீரர்கள் அவர்களுக்கு முன்னால் சென்று அவர்களைச் சுற்றி வளைத்துப் பிடித்துக் கொண்டனர்.

அந்த மனிதர்கள் பெருஞ்சிங்கனும் அவன் தோழனும் நினைத்தபடி கள்வர்களோ வியாபாரிகளோ அல்லவென்று சட்டென்று தெரிந்து கொண்டார்கள். அந்த மங்கிய நிலவொளியில் அவர்களுடைய முகம் தெளிவாகத் தெரிந்தது. அவர்கள் வேறு யாருமில்லை. நந்திபுர நகரத்து ஏவலாளர்கள் தான். இதற்கு மேல் அவர்களும் திருபுவனியைத் தேடிக் கொண்டுதான் செல்கிறார்கள் என்பதைச் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டுமா? ''ஓ! நீங்களா . . . . நாங்கள் வேறு யாரோ திருடர்களாக இருக்க வேண்டும் என்று எண்ணித் துரத்தினோம். அதனால் பாதகமில்லை. தெரிந்தவர்கள் தானே . . ? வழித்துணையாச்சு-சரி! எங்கே இப்படி பயணம் புறப்பட்டீர்கள்?'' என்று கேட்டான் பெருஞ்சிங்கன்.

நந்திபுர நகர ஏவலாளர்களில் ஒருவன், ''இது உங்களுக்குத் தெரியாதா? எங்கள் காவலரின் மகள் மறுபடியும் எங்கோ ஓடிப் போய் விட்டாள். அவளைத் தேடி அழைத்துக் கொண்டு வரும் பணி எங்களுக்கு இடப் பட்டுள்ளது'' என்றான்.

''சரிதான்-நல்லது-அப்படித்தான் உங்களைக் கண்டதுமே எங்களுக்குத் தோன்றியது. எங்கள் மன்னரும் எங்களை அந்தக் காரியத்துக்காகவேதான் அனுப்பினார். பல இடங்களில் தேடி உளவு விசாரித்து விட்டோம். எதுவுமே புலனாக

வில்லை. உங்களுக்கு ஏதேனும் தெரிந்ததோ?'' என்றான் பெருஞ்சிங்கன்.

''நாங்களும் பல இடங்களில் தேடி அலைந்து விட்டோம். எங்களுக்கும் புலனாகவில்லை......''

''சரிதான் — இப்பொழுது நீங்கள் எங்கே போகிறீர்கள்......?'' என்று கேட்டான் வில்லவன்.

''அந்தப் பெண் காஞ்சியில் இருப்பாளோ என்ற சந்தேகம்....''

''அப்படி யென்றால் காஞ்சிக்குப் போகிறீர்கள்....? நாங்களும் அங்குதான் செல்கிறோம். எங்களுக்கும் நல்ல துணை'' என்றான் பெருஞ்சிங்கன்.

''இது ஏதோ கதையாகத் தானிருக்கிறது—ராமாயணம் போல-எங்கள் காவலர் இன்னும் பல திசைக்குப் பலரை அனுப்பி இருக்கிறார். சீதையை ராவணன் தூக்கிக்கொண்டு போனதும், ராமன் பல திசைகளுக்கும் சீதையைத் தேட வானர சேனைகளை அனுப்பியது போல்'' என்றான் நந்திபுரநகர வீரன்.

பெருஞ்சிங்கன் கலகலவென்று சிரித்தான். அந்த இரவு கூடச் சிரிப்பது போல எதிரொலி செய்தது. ''வானர சேனையா....பொருத்தம் தான். எங்கள் அரசர் அந்தப் பெண்ணைத் தேட வானர சேனையை அனுப்பவில்லை. எங்களைத் தான் அனுப்பி இருக்கிறார்'' என்றான்.

''போகட்டும். அந்தப் பெண்ணை ராவணனைப் போல் யாரோ தூக்கிக் கொண்டு தான் போயிருப்பார்கள் என்று உங்கள் காவலர் நினைக்கிறாரோ?'' என்றான் வில்லவன்.

''ஆமாம்! எங்கள் காவலரின் குமாரர் அப்படித்தான் அபிப்பிராயப்படுகிறார். நாங்களும் அப்படி நினைத்துத்தான் புறப்பட்டிருக்கிறோம்.''

''அப்படியா ...அது பைத்தியக்கார எண்ணம் என்றுதான் நாங்கள் நினைக்கிறோம். துவராடை அணிந்து புத்த பிக்ஷுணிக் கோலத்திலிருக்கும் அந்தப் பெண்ணை யாரும் வந்து கடத்திக் கொண்டு போக நினைக்க மாட்டார்கள். அவளாகத்தான் போயிருக்கவேண்டும்'' என்றான் பெருஞ்சிங்கன்.

''அதுவும் தவிர உங்கள் காவலருக்கு இந்த உலகத்தில் யாரும் பகைவர்கள் இருப்பதாகக்கூடத் தெரியவில்லையே. ?'' என்றான் வில்லவன்.

''எங்கள் காவலருக்குப் பகைவர்கள் இல்லை. ஆனால் எங்கள் காவலரின் மகளைத் தன் மகனுக்கு மணம் முடித்துக் கொள்ள வேண்டுமென்று நினைத்த தஞ்சை அமைச்சர் புலிப்பள்ளியாருக்குப் பகைவர்கள் பலர் உண்டல்லவா? அவர்கள் செய்திருக்கலாமல்லவா ?'' என்றான் நந்திபுர நகர வீரர்களில் ஒருவன்.



''பார்த்தால் இப்படி இருக்கிறாரே என்று நினைக்காதீர்கள். இவர் பெரிய ஆளுங்க!''

''இருக்கலாம்-புலிப்பள்ளியார் தமக்கு வைரியாக யார் யாரைக் கருதுகிறாரோ, அவர்களை யெல்லாம் தமக்கும் வைரிகளாக உங்கள் காவலர் நினைக்கிறார் என்று தெரிகிறது — இல்லையா....?'' என்றான் பெருஞ்சிங்கன்.

''புலிப்பள்ளியாரோடு பெண் கொடுத்துச் சம்பந்தம் வைத்துக் கொள்ள நினைத்தால் அப்படித்தானே நேரிடும்?'' என்றான் நந்திபுர நகர ஏவலாளர்களில் ஒருவன்.

''அப்படித்தான் நேரவேண்டுமென்று என்ன விதியோ.. ? போகட்டும். தஞ்சை அமைச்சர் எங்கள் மன்னரைத் தங்களுக்கு விரோதியாகக் கருதுகிறார். அப்படியென்றால் உங்கள் காவலரும் எங்கள் மன்னரைத் தங்கள் எதிரியாகக் கருதுகிறாரா ?'' என்றான் வில்லவன்.

நந்திபுர நகரத்து ஏவலாளர் இருவரும் எவ்வித பதிலும் சொல்லாமல் மௌனமாக இருந்தனர்.

''என்ன ஒன்றும் பதில் இல்லையே?'' என்றான் வில்லவன்.

அந்த வீரர்களில் ஒருவன் தயங்கிய படியே, ''அப்படி இல்லை, உங்கள் மன்னருக்கும் எங்கள் காவலருக்கும் உள்ள உறவும் தொடர்பும் வேறு. அது ஒரு நாளும் அழியாது. சோழ வம்சத்தினர் மீது எங்கள் காவலருக்குப் பரம்பரையாகப் பக்தியும் விசுவாசமும் உண்டு. சோழ வம்சத்தினருக்கும் எங்கள் காவலரிடம் எல்லையற்ற அன்பும் மதிப்பும் உண்டு'' என்றான்.

''அன்பும் மதிப்பும் இல்லா விட்டால் எங்கள் மன்னர் உங்கள் காவலரின் மகள் காணமல் போனதற்கு மிகவும் கவலை கொண்டு எங்களை ஊர் ஊராகத் தேடுவதற்கு அனுப்பி வைப்பாரா?'' என்றான் பெருஞ்சிங்கன்.

''ஆமாம்! அதில் என்ன சந்தேகம்?''

''ஒரு சந்தேகமும் இல்லை. எங்கள் மன்னர் எத்தகைய விசுவாசத்தோடு இருந்தாலும், தஞ்சை மன்னருக்கும் பல்லவச் சக்கரவர்த்திக்கும் பயந்து உங்கள் காவலர் துரோகம் செய்தாலும் செய்து விடுவார் போலிருக்கிறது'' என்றான் வில்வலன்.

''பயப்பட்டால் என்ன? அவர்களோடு நட்புப் பாராட்டினால் என்ன? ஒரு நாளும் எங்கள் காவலர் சோழ வம்சத்தினருக்குத் துரோகம் இழைக்க மாட்டார்'' என்றான் நந்திபுர நகர வீரன். அவர்களுக்கு வில்வலனின் வார்த்தைகள் மனத்தைக் குத்திக் காட்டி ஏளனம் செய்வது போலிருந்தன. அவர்களுக்குச் சிறிது ஆத்திரமும் கோபமும் ஏற்பட்டன. இருப்பினும் அந்தச் சமயத்தில் பழையாறை வீரர்களை எதிர்த்துச் சண்டை போடுவது நல்லதல்லவென்று எண்ணி மௌனமாகவே சென்றனர்.

அந்தச் சிறிய சாலையில் முன்னால் நந்திபுர நகர வீரர்களின் இரு குதிரைகளும் அவர்களுக்குப் பின் பழையாறை வீரர்களின் இரு குதிரைகளும் சென்றன. அவர்கள் இருபுறமும் மரங்கள் அடர்ந்த சாலையைக் கடந்து சிறு குன்றுகள் அடர்ந்த இடத்தை அடைந்தபொழுது, பொழுது புலர்வதற்கு அடையாளமாக வெள்ளி முளைத்தது. நிலவும் மறைந்து ஒளி மங்கிக் காட்சியளித்தது. கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் இருபுறமும் சிறிதும் பெரிதுமாக விளங்கிய மலைக் குன்றுகளிடையே வளைந்து வளைந்து சென்ற அப் பாதை கரடு முரடானதாகவே விளங்கியது. மனித சஞ்சார மற்ற அந்த மலைக் கூட்டங்கள் துஷ்ட மிருகங்களும் கள்வர்களும் வசிப்பதற்கே தகுதியான இடம் போல் தோன்றியது.

சூரியனின் எழுச்சிக்கு அறிகுறியாகக் கீழ்வானில் ஒளி பரவியது. இருள் பிரிந்து கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் பார்த்துத் தெரிந்து கொள்ள அனுகூலமாக எங்கும் பிரகாசம் பரவியது. முன்னால் சென்ற நந்திபுர நகர வீரர்களில் ஒருவன் திடீரென்று தன் குதிரையை நிறுத்தி, ''அதோ பாருங்கள். யாரோ ஒரு பெண்'' என்று சுட்டிக் காட்டினான். எல்லோருடைய பார்வையும் அவன் சுட்டிக்காட்டிய திசையில் சென்றது. ஒரு மண் குடத்தைச் சுமந்த வண்ணம் ஒரு பெண் அங்கிருந்த மலைக்குகை ஒன்றில் நுழைவதைக் கண்டனர். இருள் பிரியும் அந்த நேரத்தில் அந்தப் பெண்ணைக் கண்டவர்கள் ஏதோ மோகினிப் பிசாசு என்றுதான் கிலி அடைந்திருப்பார்கள். கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் வரிசையாக மலைக்குன்றுகள் அமைந்திருக்கும் அவ்விடத்தில் அப் பெண் சென்ற இடத்தை நோக்கி யாவரும் தங்கள் குதிரையைச் செலுத்தினர்.


தொடர்ச்சியான அம் மலைக் குன்றுகளிடையே வரிசையாகக் குடையப்பட்ட சில குகைகள் இருந்தன. அவைகள் சிறு கோயில்கள் போலவும், மண்டபங்கள் போலவும் காட்சி அளித்தன. அந்தச் சிறு குகைக் கோயில்கள் பார்வையிலிருந்தே ஜைனக் கோயில்கள் என்று எளிதாக விளங்கின. அவர்கள் அந்தப் பெண் எந்தக் குகைக்குள் நுழைந்தாளோ அந்தக் குகை வாசலில் வந்து தங்கள் குதிரையை நிறுத்தினர். குதிரைகள் வரும் குளம்படிச் சத்தம் கேட்டு அந்தக் குகைக்குள் சென்ற பெண் வெளியே வந்து பார்த்தாள். அழகான பெண், குதிரைமீது அமர்ந்த வண்ணமிருக்கும் அந்த நான்கு வீரர்களையும் கண்டதும் மனத்தில் ஏதோ பீதி கொண்டவளாக மிரள மிரள விழித்தாள். அவள் கண் பார்வையில் ஏதோ சந்தேகமும் பயமும் சூழ்ந்திருந்தன. அவளுடைய நீண்ட கூந்தல் அவளுடைய தோள்களில் சரிந்து விழுந்து புரண்டு கொண்டிருந்தது. அவள் உடுத்தியிருந்த துல்லியமான வெண்ணிற ஆடை அவளுடைய களங்கமற்ற மனத்தை எடுத்துக் காட்டியது.

அந்தப் பெண் மிகுந்த பயத்தோடும் நடுக்கத்தோடும், ''தாங்கள் யார்?'' என்று கேட்டாள்.

அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர். பெருஞ்சிங்கன், ''நாங்கள் சோழ நாட்டைச் சேர்ந்தவர்கள். காஞ்சிமா நகருக்குச் செல்லுகிறோம். இடையே இந்தக் குகைக் கோயில்களைக் கண்டு பார்த்து விட்டுப் போகலாமென்று நினைத்தோம்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது நந்திபுரத்து வீரர்களில் ஒருவன் தன் சகாவிடம் கண் ஜாடை காட்டி ஏதோ சமிக்ஞை செய்தான். மற்றவனும் அவனுடைய சமிக்ஞையைப் புரிந்து கொண்டவன் போல் இலேசாகத் தலையை அசைத்தான். பெருஞ்சிங்கன் அந்தப் பெண்ணோடு பேசிக்கொண்டிருந்தாலும் அவர்களுடைய சமிக்ஞையைத் தெரிந்துகொண்டு கேலியாகச் சிரித்தான். (தொடரும்)


உங்கள் வீட்டில் அவசியம்
இடம்பெற
வேண்டியது
'டெட்டால்'
நீங்கள் தொடும் அல்லது கையாளும் ஒவ்வொரு பொருளின் மீதும், தண்ணீரிலும், உங்களைச் சுற்றிலும், மேலும் உங்கள் சருமத்தின் மீதுங்கூட வியாதியையும், சில சந்தர்ப்பங்களில் மரணத்தையுங்கூட விளைவிக்கக்கூடிய விஷக்கிருமிகள் கோடிக்கணக்கில் நிரம்பியுள்ளன. சிறிய வெட்டுக்காயத்தாலோ, அல்லது சிராய்த்துக் கொள்வதாலோ, உங்கள் சருமத்தில் ஏற்படும் சிறிய துவாரம், கோடிக்கணக்கான கிருமிகள் உள்ளே புகுந்து, வியாதியைப் பரப்புவதற்கு திறந்த கதவாக அமைகிறது. உடனே "டெட்டால்" உபயோகித்தால், அது விஷக்கிருமிகளை அழித்தும், வியாதிகளை பரப்பவொட்டாமல் தடுத்தும் அபாயத்தை நீக்குகிறது. வெட்டுக்காயங்கள், புண்கள், தவிர "டெட்டால்" உங்கள் வீட்டில் பல சந்தர்ப்பங்களில் வியாதிகள் அண்டாமல் பாதுகாக்கிறது. 'டெட்டாலை' எப்பொழுதும் உபயோகியுங்கள். அது வியாதிகள் பரவுதலைத் தடுத்துப் பாதுகாக்கிறது.
ANTISEPTIC
DETTOL
GERMICIDAL
குழந்தையைக் குளிப்பாட்டுவதற்கும் குழந்தைகளின் சிறிய துணிகளைச் சுத்தம் செய்யவும்
முகக்ஷவரத்திற்கும், குளிப்பதற்கும் 'டெட்டால்' மிகவும் தேவை
வெட்டுக்காயங்கள், சிராய்ப்புக்கள், தோல் உரிந்த புண்கள் இவைகளுக்கு
வாய் கொப்பளிக்கவும், தொண்டை இரணத்திற்கும்
சரும சுகாதாரத்திற்கும்
இலவசம்
'சிகிச்சையை விட நோயைத் தடுப்பதே சிறந்தது' என்ற புத்தகத்தை இலவசமாகப் பெற ஆட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட் (இங்கிலாந்தில் கூட்டிணைக்கப்பட்டது) இலாகா F. B. 3. தபால் பெட்டி நெ. 9009 கல்கத்தா-16 என்ற விலாசத்திற்கு எழுதவும்.
DI-3
AEL 1300
உங்கள் வீட்டில் 'டெட்டால்' ஒரு பாட்டில் எப்பொழுதும் வைத்திருங்கள்.

நான்கு நாள் பொழுது



காலை மணி ஆறு இருக்கும். பொல்வெளி கிராமத்துக்கும் இலேசாக உறக்கம் கலைய ஆரம்பித்தது.

கடைத்தெருவையும் சேர்த்து ஐந்தாறு தெருக்களை கொண்ட அந்தக் கிராமத்தைச் சுற்றி வளைத்து ஓடிக் கொண்டிருந்த ஆற்றை நோக்கிச் சிலர் சென்று கொண்டிருந்தனர். சிலர் ஆற்றினின்றும் திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

'டிராயிங்' வாத்தியார் பொன்னுசாமியும் வீட்டை விட்டுப் புறப்பட்டார். இடுப்பிலே நான்கு முழ வேட்டி, மேலே 'பனியன்', தோளிலே துண்டு. இவற்றோடு பாதரட்சைகள் 'லொடக், லொடக்' என்று ஒலிக்க அவர் காலை வேளைகளில் ஆற்றை நோக்கி மிடுக்குடன் செல்வதே ஒரு தனியழகு.

ஆனால் வழக்கத்துக்கு மாறாக அவர் நடையின் மிடுக்கு இன்று மறைந்து விட்டிருந்தது. பல் துலக்கிக் காலைப் பசியை வரவழைத்துக் கொள்ளும் துணிவு உண்டாகாததாலேயோ என்னவோ, அவர் ஆற்றை நோக்கிச் செல்லாது கடைத் தெருவை நோக்கி நடை போடலானார்.

''பசியைக் கொடுத்த இறைவன் காலைப் பசிக்கென்று தனி வேகத்தையும் ஏன் கொடுத்தான்?'' என்று அவர் வாய் முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

கடைத் தெருவின் திருப்பத்திலிருந்து சிறிது தூரமே நடந்திருப்பார். அதற்குள் அவருடைய மெல்லிய உடல் தள்ளாட ஆரம்பித்தது. கைகளும் கால்களும் அவருடைய நடையை மீறின வேகத்தில் அசைய ஆரம்பித்தன. கீழேயே விழுந்திருப்பார். ஆனால் எப்படியோ சமாளித்துக் கொண்டு அருகிலிருந்த மாதா கோவில் வராந்தாவை நோக்கி ஓடுவதுபோல் நடந்து, உட்காருவதுபோல் விழுந்தார்.

''சே! என்ன வாழ்க்கை! நடுத் தெருவிலேயே விழுந்திருந்தால் என்ன ஆவது!''

வாத்தியார் முகத்தைத் துடைத்துக்கொண்டார். குளிர்ந்த காலையும் மெல்லிய காற்றும் வழுவழுப்பான 'சிமிண்ட்'த் தரையும் சேர்ந்து அவருக்கு இதமூட்டின.




வே. கோவிந்தராஜன்



அங்கேயே சிறிது நேரம் படுத்துக் கொள்ளலாமா என்று ஒரு கணம் யோசித்தார். ஆனால் அவ்வாறு அவர் செய்யவில்லை.

தம்மைப் போன்ற ஒரு ஆசிரியர் அங்கு உட்காருவதுகூடக் கேவலம் என்று அவருக்குத் தோன்றியது. பொன்வெளி கிராமத்தின் சோம்பேறிகள் அந்த வராந்தாவில் உருண்டு கொண்டிருப்பதை அவர் எத்தனையோ முறை கண்டிருக்கிறார். அத்தகைய இடத்தில் எவ்வாறு படுப்பது? அங்கிருந்து எழுந்து செல்லவும் அவரால் முடியவில்லை. அவர் உடலில் படிந்திருந்த அளவு மீறிய சோர்வு அவர் உள்ளத்தில் எழுந்த கௌரவ உணர்ச்சியை அடக்கி விட்டது!

அங்கேயே அமர்ந்தவாறு மாதா கோவிலின் பக்கம் பார்வையைச் செலுத்தினார். கோவிலின் முன்புறம் கருணை பொழியும் முகத்தோடு நின்றுகொண்டிருந்த ஏசுநாதரின் சிலை இரக்கத்துடன் இவரைப் பார்த்துக்கொண்டிருந்தது. இரண்டே அப்பங்களைக் கொண்டு எண்ணற்ற உயிர்களின் பசியைப் போக்கினாராமே, ஏசுநாதர்! அவரே உயிர் பெற்று வாத்தியார் முன்பு தோன்றினால்...!



வாத்தியார் திரும்பவும் சிலையை நோக்கினார். உடனே அவருக்குத் தூக்கிவாரிப்போட்டது. அச்சிலை ஏன் அவ்வாறு வாத்தியாரையே கூர்ந்து கவனிக்க வேண்டும்? சிலை அசைவது போன்றும் இவரை நெருங்குவது போன்றும் தோன்றியது. எதிரே இருந்த சுவர் மெல்ல அவரைச் சுற்றி வர ஆரம்பித்தது. அருகிலிருந்த மரங்களும் கோவிலும் வேகமாக அவரைச் சுற்ற ஆரம்பித்தன. உலகமே அவரை விட்டுப் பிரிந்து 'ஙெர்' என்று சுழன்றது! வானத்தில் எங்கோ அவர் பறந்து சென்றுவிடுவார் போலிருந்தது. ஆனால் அவ்வாறு பறந்து விடாமல் வராந்தாவின் விளிம்பை இரு கைகளாலும் 'சட்'டென்று வாத்தியார் பிடித்துக் கொண்டார்!

'சில்'லென்று வீசிய மெல்லிய காற்று அவருக்குச் சிறிது தெளிவைக் கொடுத்தது. சிலையின்மீதே பதிந்து நிலைத்திருந்த தம் கண்களைச் சிரமப்பட்டு வேறுபுறம் திருப்பிக் கொண்டார். அவர் உடல் இலேசாக நடுங்கிக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் ஏசுவின் சிலை தமக்கேற்படுத்திய குழப்பத்தை எண்ணியதும் அவருக்குத் திகிலேற்பட்டது. வராந்தாவை விட்டு எழுந்துவிட வேண்டும் என்று அவர் எண்ணினார்; ஆனால் எழவில்லை. அவருடைய துவண்ட உடலை அசைக்கும் சக்திகூட அப்போது அவரிடம் இல்லை!

★

அவர் பார்த்து வந்த 'டிராயிங் வாத்தியார்' வேலை மாதா மாதம் நாற்பது ரூபாயை அவருக்கு அளித்து வந்தது. மனைவி, மக்கள் முதலியவையெல்லாம் மனிதனுக்குத் தேவையில்லாத ஆடம்பரங்கள் என்ற அசைக்க முடியாத கருத்து அவரிடம் வேரூன்றி இருந்ததால் அந்த நாற்பதைக் கொண்டே காலந்தள்ளுவது அவருக்குச் சிரமமாகத் தோன்றவில்லை. அப்படியும் சிற்சில சமயங்களில் அவருடைய தேவைகள் நாற்பதையும் மீறி விடுவதுண்டு. ஆனால் அவருக்குச் செலவு அதிகமாகும் மாதங்களில் அந்த 'நாற்பது' ஐம்பதாவதுமில்லை; செலவு குறையும்போது 'நாற்பது' முப்பதாவதுமில்லை! நாற்பது எப்போதும் நாற்பதுதான்! வாத்தியாரைப் பற்றியோ அவருடைய செலவைப் பற்றியோ அதற்குச் சிறிதளவும் கவலையே கிடையாது.

இந்த ஒரு சாதாரண உண்மை வாத்தியாரின் மூளைக்குத் தெரியாமற் போய் விட்டது! அது சிறிதும் இரக்கமின்றித் தன் மீது ஒரு மாபெரும் கட்டியை வரவழைத்துக் கொண்டதோடு மட்டுமல்லாமல் முப்பது ரூபாயையும் வேறு விழுங்கித் தொலைத்தது!

தம்முடைய வரவு செலவுகளை உன்னிப்பாக ஆராய்ந்து பொருளாதார நிலையை அமைதியாகக் காத்து வந்த அவருக்கு இந்த நிகழ்ச்சி பெரியதொரு 'சரிவை' உண்டாக்கிவிட்டது. இந்த நிலையில் மக்கடைக்கார நாயர் சாப்பாட்டையும் ஒரு பிரச்னையாக ஆக்கியதுதான் அவருக்குப் பேரிடியாக இருந்தது.

கடைக்கார நாயர் என்னவோ நல்லவன் தான். ஆனால் இருபது ரூபாய்க்கும் மேலாகக் கடன் கொடுப்பது அவனுடைய தரத்துக்கு மீறியதொரு சேவையாக அவனுக்குப் பட்டு விட்டது. உடனேதான் வாத்தியாருக்குச் சாப்பாடு ஒரு பெரும் பிரச்னையாக ஆயிற்று.

எத்தனையோ ஆண்டுகளாக வாத்தியாரின் ஆதரவில் வளர்ந்து வந்த அவருடைய வயிறு, இந்த நெருக்கடியான சமயத்திலும் சிறிதும் நன்றியின்றி ஒத்துழைக்க மறுத்தது. ஆகவே, அவர் பார்க்காதவர்களைப் பார்க்க வேண்டியிருந்தது; கேட்காதவர்களைக் கேட்கவேண்டியிருந்தது! வீட்டிலிருந்து விற்கக் கூடிய பொருள்களை விற்று, வெளியில் பணம் கொடுக்கக் கூடியவர்களிடமிருந்தெல்லாம் கடனை வாங்கி மாதத்தின் பெரும் பகுதியை ஓட்டி விட்டார்: மறு மாத முதல் தேதியைப் பிடிக்க, இன்னும் ஐந்தே நாட்கள் இருந்தன. பிறகு கவலையில்லை. அவருக்கு 'நாட்டது' கிடைத்து விடும். ஆனால் இந்த ஐந்து நாட்களும் உயிரோடிருப்பதற்குச் சாப்பாடு வேறல்லவா வேண்டியிருந்தது!

கடந்த இரு நாட்களை உருவது எப்படியோ வெறும் 'டீ'யுடன் தள்ள முடிந்தது. இன்று?

வாத்தியாரிடமிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு பிறந்தது.

★

எங்கிருந்தோ 'விர்'ரென்று பறந்துவந்த 'ப்யூக்' கார் ஒன்று தெருவிலிருந்த புழுதியையெல்லாம் வாரி, வாத்தியாரின் கண்களில் கொட்டி விட்டு வளைந்து, நெளிந்து, எங்கேயோ ஓடி மறைந்தது.

வராந்தாவின் மீது பலவீனமான நிலையில் அமர்ந்திருந்த வாத்தியார் திடுக்கிட்டு நிமிர்ந்து கண்களைத் துடைத்துக் கொண்டார். தெருவில் கார் வரைந்து விட்டிருந்த இரட்டைக் கோடுகள் 'டபிள்'சென்று தெருக்கோடி வரையில் சென்று நின்றிருந்தன. வாத்தியாரின் உள்ளமும் அவற்றுடனேயே சென்று ஒன்றியது.

கார் சுமந்து சென்ற கன்னியப்ப நாடார் தான் பொன்வெளி கிராமத்தின் பொன்னையெல்லாம் சுமந்து கொண்டிருந்த பெரிய மனிதர். வாயற்ற ஜீவன்களின்மேல் அக்கறை கொண்டுவிட்ட சில வாயுள்ள ஜீவன்கள் நடத்திவந்த ஜீவகாருண்ய சங்கத்துக்குக் கன்னியப்ப நாடார் வழங்கிய பொருளுதவி அவருடைய தயாள சிந்தனையைப் பொன்வெளி வாசிகளிடையே பறைசாற்றி விட்டு, அவருடைய புகழையும் வெகுவாக உயர்த்தி விட்டது. அந்தக் 'காருண்ய சங்கம்' சிறிது காலத்துக்குப்பின் என்னவாயிற்று, எப்படி மறைந்தது என்பதே யாருக்கும் தெரியாது. ஆனால் கன்னியப்பரின் புகழ் என்னவோ குறையவேயில்லை.

ஜீவகாருண்ய சங்கம் மறைந்து விட்டதில் வாத்தியாருக்குத்தான் பெருத்த ஏமாற்றம். அந்தக் கிராமத்தில் இருந்த இறைச்சி விற்கும் கடைகளையாவது அந்தச் சங்கம் ஒழித்திருக்கக் கூடாதா என்று அடிக்கடி அவர் எண்ணுவதுண்டு. கன்னியப்பர் போன்ற இரக்கஉள்ளம் கொண்டவர்கள் வாழும் இவ்வுலகத்திலேயே உயிர்களைக் கொன்று விற்பனை செய்யும் கொடியவர்களும் வாழ்கிறார்களே என்ற வியப்பும் வாத்தியாருக்கு எழுவதுண்டு.

ஆனால் கன்னியப்பர் மீது வாத்தியார் கொண்டிருந்த நல்லெண்ணத்தை மாற்றும் படியான சம்பவம் ஒன்று சிறிது நாட்களில் நிகழ்ந்தது.

ஒருநாள் வாத்தியார் ஒரு பிச்சைக்காரக் குடும்பத்தைச் சந்திக்க நேர்ந்தது. இளைத்தும், வளைந்தும், வாடியும் காணப்பட்ட மூன்று உருவங்கள். ஒரு பிச்சைக்காரன்; அரைகுறை ஆடையுடுத்திய அவன் மனைவி; அவர்கள் குழந்தை! இரக்கப்பட்டே பழகிப் போன வாத்தியாரின் உள்ளம் இந்த நடமாடும் குடும்பத்தைக் கண்டதும் நெகிழ்வடைந்தது. பட்டினி கிடந்தும், அதன் அருமையை அனுபவித்தும் இருந்த அவருக்கு அவர்களது நிலை நன்றாகப் புரிந்தது. பையிலிருந்த எட்டணா நாணயத்தை எடுத்து, சிறிதும் யோசிக்காது அவர்களிடம் போட்டு விட்டுச் சென்றார். அந்த எட்டணாவை இழந்ததால் பின்பு அவருக்கு ஏற்பட்ட பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் நெருக்கடிகளையும் அவர் பொருட்படுத்தவில்லை.

அன்னறயதினத்திலிருந்து வாத்தியாரைக் காணும்போதெல்லாம் அந்தப் பிச்சைக்காரக் குடும்பம் நன்றி ததும்பச் சிரிக்கும். பதிலுக்கு வெறும் புன்முறுவல் ஒன்றைமட்டும் அளித்து விட்டு வாத்தியார் நடந்து விடுவார்.

திடீரென்று ஒருநாள் அந்த நடமாடும் குடும்பத்துக்கு நல்லகாலம் பிறந்துவிட்டது! ஊர்க் கடைசியில் அன்று ஏதோ சிந்தனையோடு நடந்து கொண்டிருந்த வாத்தியார் அப்பிச்சைக்காரன் ஒரு மரத்தடியில் படுத்திருப்பதைக் கண்டார். 'பகலில் தூங்குகிறானே, சோம்பேறி! ஏன் பிச்சை கேட்க மாட்டான்?' என்று எண்ணிய அவர் மறுகணம் திடுக்கிட்டுத் திகைத்தார். 'இத்தனைய கொடுமைகளும் உலகில் நேரவேண்டுமா?' என்று அவர் உள்ளம் குமுறியது.

அச்சமயம் எதிரே இருந்த பங்களாவுக்குள்ளிருந்து வேகமாக வெளிவந்த கார், அவரை முட்டுவதுபோல் வந்து நின்றது. திடுக்கிட்டு ஒதுங்கிய வாத்தியார் காருக்குள், கன்னியப்பரும் அவருடைய நாயும் கம்பீரமாக அமர்ந்திருப்பதைக் கண்டார்.

"பங்களாவுக்கு எதிரே ஒரு ஆளும் குழந்தையும் செத்துக் கிடக்கிறாங்க..." ஒரு முக்கியமான அறிவிப்பை நிகழ்த்தும் தோரணையில் துவக்கினார் வாத்தியார்.

கன்னியப்பர் முகத்தில் சுருக்கம் ஒரு கணம் நிலவியது; மறைந்தது. "எவன் செத்துக் கிடந்தால் உனக்கென்ன ஐயா? அவனவன் பிழைப்பே பிச்சைக்காரப் பிழைப்பாயிருக்கு. காலை நேரத்திலே குறுக்கே வந்து நின்றாயே, மரம் மாதிரி...டிரைவர், ஓட்டப்பா!"

அடுத்த கணம் கார் மறைந்தது.

மரம் மாதிரியே அசைவற்று நின்றுவிட்டார் வாத்தியார்! கன்னியப்பரின் உள்ளம் என்ன இரும்பா, கல்லா, மரமா! அல்லது வாத்தியாரையும் ஒரு பிச்சைக்காரன் என்றே நினைத்துக் கொண்டாரா?

ஜீவகாருண்ய சங்கத்துக்கு நன்கொடை அளிக்கத் தயங்காத கன்னியப்பர், தம் இனத்

மலர்களைத் தாங்கக் கூந்தல் அவசியம் வேண்டும்

கூந்தலுக்குக் கேசவர்த்தினியின் பராமரிப்பு அவசியம். கேசவர்த்தினியால் உங்கள் கூந்தல் அழகையும், அடர்த்தியையும் அடையட்டும்! சிப்பில் வராமல் தடுங்கள்.



கேசவர்த்தினி

இந்த நக்ஷத்திரத்தைப்போல் உங்கள் கூந்தலைப் பிரகாசிக்கச் செய்யுங்கள். கூந்தலின் பெருமையை அடைய கேசவர்த்தினியைத் தேர்ந்தெடுங்கள்

[illegible]

எங்கள் இதர தயாரிப்புகள்:
அஞ்சன் கண் மை
வேணி சீயக்காய்பவுடர்

கேசவர்த்தினி

பிராடக்ட்ஸ்,
கோயமுத்தூர்

★

மலச் சிக்கல்

உங்களை சோர்வடையச் செய்கிறதா?



[illegible]

ப்ருக்லாக்ஸ்
ஒரே இரவில்
உங்களை குணமாக்கும்
[illegible]

இன்டெண்டிங் ஏஜண்டுகள்:
ஓரியண்டல் மர்க்கன்டைல் ஏஜன்ஸி
99-A, அரமனேக்காரத் தெரு, மதராஸ்-1


இந்தியாவில் முதல்...
பிரபாத்
ஸ்டவ்கள் · ஊது விளக்குகள்
· லாந்தர்கள் · மாண்டில்கள்
ஆறுலும் சிறந்தது!

தைச் சார்ந்த இரண்டு உயிர்கள், தம் வாசலுக்கருகிலேயே இறந்து கிடப்பதைப் பொருட்படுத்தாதது அவருக்கு விந்தையாகக் காணப்பட்டது. கன்னியப்பரின் உள்ளமே அவருக்கு ஒரு புதிராகத் தோன்றியது.

கிராமப் பஞ்சாயத்து ஊழியர்களைக் கண்டு ஆட்களை அழைத்து வந்து அந்த இரு உடல்களையும் அடக்கம் செய்வது அன்று வாத்தியாருக்குப் பெரும் பாடாக இருந்தது.

★

"என்ன வாத்தியார் ஐயா! சௌக்கியமா? என்ன இப்படி உட்கார்ந்திருக்கீங்க!"

இரண்டு ஆடுகளை ஒரு கையில் இழுத்துப் பிடித்துக் கொண்டு மற்றொரு கையில் புகையும் சுருட்டுடன் வாத்தியாருக்கு எதிரே வந்து நின்றான் மாபா சாயபு.

வாத்தியார் மெல்ல முகத்தை உயர்த்தினார். மலைபோல் தம்மெதிரே நிற்கும் உருவம் மாபா சாயபுதான் என்பதை அவர் மூளை அரைகுறையாக உணர்ந்தது.

மாபா சாயபு, அகன்று பருத்த ஒரு மரத் துண்டுக்கெதிரில், தானும் ஒரு மரத்தூண் போல் நின்று வாத்தியாரின் உள்ளத்திலே அச்சத்தை எழுப்பக் கூடிய 'கொலைவாளை'க் கையிலேந்தி 'மொட்டு, மொட்'டென்று இறைச்சியைத் துண்டு போட்டுக் கொண்டிருந்த காலம் வாத்தியாருக்குத் தெரியும். குறுகிய காலத்திலேயே மாபா சாயபுவுக்குப் பணத் தொந்தி வந்து விழுந்த நிகழ்ச்சியும், சாதாரணக் கறிக்கடை 'மாபா மட்டன் ஸ்டால்' ஆன நிகழ்ச்சியும் கூடத் தெரியும்.

'மாபா மட்டன் ஸ்டால்' என்ற பெயர்ப் பலகை எழுதிக் கொடுத்ததற்காகப் பணம் பெற்றுக் கொண்டபோது வாத்தியாருக்கு உள்ளம் கூசியது.


இத்தகைய கொடியவன், தம்மிடம் வந்து தாம் தெருவில் உட்கார்ந்திருப்பதைப் பற்றிக் கேட்க வந்து விட்டானே என்று மங்கியிருந்த அவரது மூளை மெல்ல உணர்ந்தது. வெறுப் புணர்ச்சி அவர் உள்ளத்தை நிறைத்தது.

தாம் அழைத்தும் பதில் கூறாது சுய உணர்வின்றி அமர்ந்திருந்த வாத்தியாரின் நிலையைக் கண்டதும் மாபா சாயபுவின் பெரிய முகத்தில் புதைந்து கொண்டிருந்த கண்கள் சிறிது விரிவடைந்திருந்தன. உடனே மாபா சாயபுவின் உள்ளத்தில் என்ன எண்ணம் ஓடிற்றோ, தெரியவில்லை. அவனுடைய பாத்த காதுகளில் ஒன்றுக்குள் செருகிக் கொண்டிருந்த எட்டணா நாணயமொன்று, காதிலிருந்து கைக்கு இறங்கியது.

"இதை வைத்துக் கொள்ளுவே, வாத்தியாரு. அந்த போர்டுக்கு அப்பவே 'ஜாஸ்தி' கொடுக்க நினைத்தேன். இப்ப வாங்கிக் கொள்ளுவே!"

வாத்தியாரிடம் காசைக் கொடுத்து விட்டு மாபா சாயபு போய்விட்டான்.

வாத்தியாரின் மங்கிய உணர்வின் ஏதோ ஒரு பகுதி மெல்ல உயிர் பெற்றது. அவருடைய கையில் மின்னிக் கொண்டிருந்த எட்டணா நாணயம் அவர் கண்களைக் கூசச் செய்தது. அவருடைய கண்களும் சிறிது ஒளி பெற்று அசைந்தன. சுய உணர்வு மெல்ல அவருக்கு ஏற்பட்டது.



"நீ சினிமா தியேட்டரில் வேலை செய்கிறாயே, நானும் சினிமா டிக்கட்டுகள் கொண்டு வரக் கூடாதா?"

"சரி, நீ பாங்கியிலே வேலை செய்கிறாயே, நானும் நூறு ரூபாய் நோட்டுக்களைக் கொண்டு வரக் கூடாதோ?"

தம்மருகில் எமனோ, எருமையோ, கன்னியப்பரோ அவரது காரோ, பிச்சைக்காரனோ, புத்தரோ ஒருவரும் இல்லையென்பதைக் கண்டவுடன் அவரிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. தாம் இறந்துவிடவில்லை என்பதைத் திரும்பத் திரும்ப எண்ணிக் கொண்டார். யதேச்சையாகத் தம் கையைப் பார்த்தவர் அதிலிருந்த எட்டணாவைக் கண்டு விழித்தார். எட்டணா நாணயம் அவரைப் பார்த்து விழித்தது!

"இந்த எட்டணா நாணயம் எப்படி என் கைக்கு வந்தது?"

உறங்கிக் கொண்டிருந்த அவருடைய மூளை சுறுசுறுப்படைந்தது. மாபா சாயபுவின் உருவமும் அவன் கூறிய வார்த்தைகளும் திரைப் படம் போன்று அவர் மனக் கண் முன் விரிந்தன. அவர் மயங்கிக் கிடந்த நேரத்தில் நடந்தவற்றை அவரால் உணர முடிந்தது.

"மாபா சாயபு ஏன் எட்டணாவைக் கொடுக்க வேண்டும்?"

போர்டு எழுதியதற்கான பணம் எப்போதோ வாங்கியாகி விட்டது. பின் எதற்காக இப்போது பணம் கொடுக்க வேண்டும்? ஒரு வேளை, தான் பட்டினி கிடப்பதை மாபா சாயபு தெரிந்து கொண்டிருப்பானோ என்ற எண்ணம் அவருக்கு எழுந்தது.

பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடலாமென்று சுற்றும் முற்றும் பார்த்தார். ஆனால் மாபா சாயபு சென்ற சுவடே தெரியவில்லை.

பிச்சைக்காரக் குடும்பத்துக்குத் தாம் ஒரு நாள் எட்டணா கொடுத்தது வாத்தியாரின் நினைவுக்கு வந்தது. அப்படியானால் வாத்தியாருக்குக் கிடைத்ததும் பிச்சைக் காசுதானா?

எட்டணா அவரைப் பார்த்துச் சிரித்து ஏளனம் செய்தது! பிச்சைக் காசாக இருக்

கட்டும்; உழைத்துப் பெற்ற காசாக இருக்கட்டும். எட்டணு எட்டணுத்தானே!

வாத்தியாரின் உள்ளம் நெகிழ்ந்தது. இந்த மாபா சாயபுக்குத்தான் எத்தகைய இரக்க உள்ளம்! வாத்தியார் கூறுமலேயே அவர் நிலையை உணர்ந்து கொண்டானே!

ஆடுகளைக் கொல்வதில் இரக்கம் காட்டாத அவனுடைய உள்ளம் மனிதன் பட்டினி கிடக்கும்போது இரங்கி யிருக்கிறதே! 'அவன் ஆடுகளைக் கொல்லட்டும், மாடுகளைக் கொல்லட்டும்—மனிதனைக் கண்டு இரங்கும் உள்ளம் அவனிடம் இருக்கிறது' என்று எண்ணும் போது வாத்தியாருக்கு மாபா சாயபு அன் புருவமாகக் காட்சியளித்தான்.

தூரத்தில் சின்னஞ் சிறு ஆடு ஒன்று மேய்ந்து கொண்டிருந்தது. ஒரு புத்தர் தோன்றி அதைத் தூக்கிச் செல்ல வேண்டும் என்று அவர் எண்ணவில்லை. அதை அவர் கவனிக்கவே யில்லை!

அவர் உள்ளத்தை முழுமையாக நிறைத்திருந்தது மாபா சாயபுவின் உருவம் தான்!

மூன்று மணி நேரத்துக்கும் மேலாகத் தாம் அமர்ந்திருந்த மாதாகோவில் வராந்தாவை விட்டு வாத்தியார் எழுந்து நடந்தார்.

அவர் கால்களி லிருந்து 'லொடக், லொடக்' என்று எழுந்த ஒலி கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து தூரத்தில் தெரிந்த 'ட'க்கடைக்குள் சென்று மறைந்தது!

அவர் சம்பளம் பெறுவதற்குத் தடையாக அவருக்கும் சம்பளத் தேதிக்கும் குறுக்கே நின்ற ஐந்து நாட்களில் ஒரு நாளை எட்டணு விரட்டி விட்டது. ஆனால்......பாக்கி நான்கு நாள் பொழுது இருக்கிறதே?....

படித்துப் பாருங்கள்

மகாத்மா

சில ஆண்டுகளுக்கு முன் ஒரு செய்தி கேள்விப்பட்டேன். அதாவது ஒரு புத்தகம், அது வெளியானவுடனேயே பல லட்சக் கணக்கான பிரதிகள் செலவாயினவாம். அதோடு பல மாதங்கள் தொடர்ந்தாற் போல் அமெரிக்க புத்தக மார்க்கெட்டில் அந்தப் புத்தகத்துக்கு அளவுகடந்த கிராக்கி யிருந்ததாம். இப்படி அமெரிக்க மக்களை அவ்வளவு கவர்ந்து விட்ட புத்தகம் என்ன வென்று விசாரித்துப் பார்த்தேன். வின்ஸென்ட் ஷீன் என்ற அமெரிக்க ஆசிரியர் மகாத்மா காந்தியைப் பற்றி எழுதிய புத்தகம்தான்!

காந்திமகானைப் பற்றிப் புத்தகங்கள் எத்தனையோ பேர்கள் எழுதியிருக்கின்றனர். அவற்றில் காந்தி மகான் தாமே தம்மைப் பற்றி எழுதியுள்ள சத்திய சோதனைக்கு அடுத்தாற்போல் உண்மைக்குப் பழுதில்லாமல் அற்புதமாக எழுதப்பட்ட புத்தகம் இது.

பொதுவாகவே மேல்நாட்டினருக்கு நமது பண்பாடு, நாகரிகம் யாவும் புரிவது கஷ்டம். அதிலும் காந்தி மகான் சத்தியத்தையும் தர்மத்தையும் அரசியலையும் கூட்டிப் பாரத நாட்டிலே மகத்தான ஞால வித்தைகள் புரிந்தார். 'விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசந் தன்னை' வாழ வைத்தார். இப்படிப்பட்ட மகானைப் புரிந்து கொள்ள முயல்வதற்கே துணிச்சலும் தைரியமும் வேண்டும். ஆனால் இந்த நூலின் ஆசிரியர், அமெரிக்கர், அற்புதமாகப் புரிந்து கொண்டு, படிப்பவர்களுக்கும் அற்புதமாக எழுதியிருக்கிறார். ஏசுநாதர், சோக்ரதர் ஆகிய இரு மகான்களுக்குப் பிறகு உலகம் கண்ட பெரிய மகான் காந்தி என்பதை உணர்ந்து எழுதியிருக்கிறார்.

காந்தி மகானுடன் நேரில் பல மணி நேரம் அளவளாவியவர். காந்தி மகான் பாதகனால் சுட்டுக் கொல்லப்பட்ட அன்று இந்த நூலாசிரியரும் அந்தப் பிரார்த்தனைக் கூட்டத்தில் இருந்திருக்கிறார். அதனாலேயே இவருடைய எழுத்தில் உள்ளத்தைத் தொடும் ஒரு வேகம் அமைந்திருக்கிறது. தமிழில் அந்த உள்ளத்தைத் தொடும் பாங்கு குறையாத வகையில் இதைத் திரு சி. சிவசாமி மொழிபெயர்த்திருக்கிறார்.

பிரசுரம்: ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை-1 விலை: ரூ. 2.

புன்சிரிப்பு

பதினொன்று கதைகள் அடங்கிய இந்தத் தொகுப்பில் ஒரு கதைக்குத்தான் 'புன்சிரிப்பு' என்ற தலைப்பு. ஆனால் தொகுப்பிலே இடம் பெற்றிருக்கும் பல கதைகளும், படிப்போர் முகத்திலே புன்முறுவலைப் படரவிட்டுப் புன் சிரிப்பு என்ற பெயரைத் தட்டிக் கொண்டு போகப் பார்க்கின்றன.

இதிலிருந்தே ஆசிரியரது கற்பனைத் திறனும் கதை சொல்லும் ஆற்றலும் எத்தகையதாக இருக்க வேண்டும் என்று விளங்கவில்லையா?

பஸ் ஸ்டாண்டிலே நிற்கும் பவானந்தர் தம்மைப் பார்த்து ஒரு யுவதி புன்முறுவல் பூப்பதைக் காண்கிறார்; தமது உள்ளத்தைப் பலவிதக் கற்பனைகளுக்கு உறைவிடமாக்கு கிறார். கடைசியில், குழந்தையை முத்தமிட்ட பொழுது தமது வலது கன்னத்தில் பதிந்து விட்ட தம்பிடி அகலக் குங்குமப் பொட்டுத் தான் யுவதியின் புன்முறுவலுக்குக் காரணம் என்பதை அறியும்பொழுது அவர்மட்டுமா புன்சிரிப்பு சிரிக்கிறார்? படிக்கும் நேயர்களும் அல்லவா தம்மை அறியாமல் உதடுகளிலே புன்முறுவலை வரவழைத்துக் கொள்கிறார்கள்!


பரசுராமன் 'கட்டாய ஜோதிடர்' ஆகும் கதையும் அதேபோல் கட்டாயம் சிரிப்பை வரவழைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

'சிதையின் தாய்' என்னும் கதை மாற்ருந் தாயின் உள்ளத்தைச் சித்திரிக்கும் கதையே யானாலும், ஆசிரியரின் கற்பனை வளத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

தெள்ளு தமிழில், அழகான நடையில் எழுதப்பட்டிருக்கும் 'புன்சிரிப்பு' கதைத் தொகுதிக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஆசிரியர்: வி. ரா. பிரசுரம்: பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-5; விலை ரூ. 2-52.

கார் டயர் தேய்ந்து வழுக்கையாவது இயற்கையே



மேலும் மேலும் தேய்ந்தால் அபாயம். புதிய டயர் வாங்கும் செலவும் அதிகம். சுமார் எட்டு அல்லது பத்தாயிரம் மைல் ஓடித் தேய்ந்த டயர்களை சுந்தரம் (T V S) புதுப்பித்து உருவாக்குவார்கள். செலவு படிக்குப்பாதி குறைவு. புது டயர் வாங்கும் அதிகச் செலவை தவிர்க்கலாம். விலைவாசி உயர்ந்த இக்காலத்தில் சிக்கன முறையே சிறந்த முறை. பதினைந்து வருடங்களில் கோடிக்கோடி மைல் உழைப்பில் உருவாகிய

TVSZ 94 TM

[illegible]

சுந்தரம் TVS புதுப்பிக்கும் முறை

சிக்கனம் பெரிது, உழைப்பும் உயர்ந்தது.

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்.
(டி. வி. எஸ். ஸ்தாபனம்)
புதுக்கோட்டை சென்னை



பிணைப்பு

ஜ. சாமிநாதன்

அன்றைக்கும் கிழவர் ஆறரை மணிக்கே கோவிலுக்குப் புறப்பட்டார். சம்பந்தன் ஓடிவந்து இடுப்பு மீது ஏறிக் கொண்டான்.

''தாத்தா, கோவிலுக்குத்தானே?''

''ஆமாண்டா, கண்ணு!''

''நானும் உன்கூடவா வரேன்?''

''சம்பந்தன் இல்லாத கோயில் உண்டோடா?''

கிழவர் பேரனை உச்சி முகர்ந்தார். இடுப்பிலே அவனைத் தூக்கிக்கொண்டு தெருவிலே போகும்போது அவருக்குப் பெருமிதத்தில் உள்ளம் பொங்கியது. சம்பந்தன் இல்லாவிடில் அவர் கோவிலுக்குப் புறப்பட மாட்டார். இது ஊர் அறிந்த உண்மை.

ஒட்டி உலர்ந்த உடல், கோடை காலத்துக் கிணறு போலக் கண்கள் ஆழப் பதிந்திருந்தாலும் அதிலே ஒரு ஒளி, நீண்ட பழுத்த கவரைப் போன்ற நெற்றியிலே பளிச்சென்று விபூதி — இந்தக் கோலம் கிழவருடையது!

கிழவர் இடுப்பின்மீது இருந்த சம்பந்தன் ஐந்து வயதுப் பாலகன். உலகிலே பாலகனுக்கு உற்ற தோழனாக இருப்பவர் இந்தக் கிழவர். இது விந்தைதானல்லவா?

கிழவர் வாய் ''முருகா முருகா'' என்று எப்போதும் சொல்லுவதால் பழகியிருந்தது. சம்பந்தன் கிழவரின் கழுத்தைக் கட்டிக்கொண்டிருந்தான்.

கிழவர் கோயில் வாசலில் நுழைந்து உள் பிராகாரத்தைச் சுற்ற ஆரம்பித்தார். சம்பந்தனும் சுற்றினான்.

''முருகா, முருகா என்று சொல்லுடா சம்பந்தா!''

''முருகா, முருகா...''

சம்பந்தம் தெய்வப் பிழம்பாக நடந்து வந்தான். வயது பெருகியதால் தள்ளாது குறுநடையிட்டார் கிழவர்.

முருகன் சந்நிதியிலே நின்றார் கிழவர். அவர் கண்களில் கண்ணீர் ஆறாகப் பெருகியது. வேலும் மயிலுமாக முருகன் நின்றிருந்த கோலத்தைக் கண்டு மனம் உருகினார். நடுங்கும் குரலில், முருகனைக் குறித்து ஒரு பாட்டுப் பாடினார். அதைப் பலர் பரவசத்துடன் கேட்டனர்.

பாடி முடித்ததும் கிழவர் நமஸ்காரம் செய்தார். சம்பந்தனும் அவர் செய்ததைப் போலவே மூன்று முறை நமஸ்காரம் செய்தான். கிழவர் சம்பந்தனைத் தூக்கிக் கொண்டு வெளிப் பிராகாரத்தைச் சுற்ற ஆரம்பித்தார்.

கிழவர் பிராகாரத்தைச் சுற்றி விட்டு மண்டபத்துக்கு வந்தார். தினமும் அவர் ஒரு தூண் அடியில் அமர்ந்து ஜபம் செய்வது வழக்கம். அத்தூணுக்கு அருகில் சென்று சம்பந்தனைக் கீழே இறக்கினார்.

''நீ ஏன் தாத்தா இந்தத் தூண் கிட்டேயே தினம் உட்காருகிறாய்?''

''இந்த இடத்திலேதான் என் அப்பாவும் ஜபம் செய்கிற வழக்கம்...''

கிழவர் தூணில் சாய்ந்து கொண்டார். சம்பந்தன் அவர் எதிரில் உட்கார்ந்து கொண்டான். ஞானசம்பந்தர் பாடலொன்றைப் பாடினார் கிழவர். சம்பந்தன் மனத்துக்குள்ளேயே அந்தப் பாடலைப் பாடிக் கொண்டான். பாடலை முடித்து விட்டுக் கண்களில் நீர் மறைக்கக் கண் திறந்தார் கிழவர். எதிரே பால்வடியும் முகத்துடன், ஒளி மின்ன, திருநீறு பளிச்சிட உட்கார்ந்திருந்த சம்பந்தன் திருஞான சம்பந்தனாகவே கிழவருக்குக் காட்சி யளித்தான்.

''ஞானசம்பந்தா...!'' கிழவர் கூவினார்.

''தாத்தா! எனக்குக்கூட நீ சொன்ன பாட்டு தெரியுமே!''

''தினம் தினம் கேட்டாயல்லவா, அதனால்தான் தெரிகிறது...''

''அப்புறம் நான் உன்மாதிரி நிறையப் பாட்டுக்களைப் பாடுவேன்.''

''ஞானசம்பந்தன் பாடுவதற்கு என்ன...?''

''நான் நீ இப்பொழுது பாடின பாட்டைப் பாடட்டுமா...?''

''பாடுடா என் செல்வமே!''

சம்பந்தனின் பிஞ்சுக் கரங்களைத் தம் சுருங்கிய தோலும், சதையற்றதுமாகிய உள்ளங்கையில் வைத்துக் கொண்டார் கிழவர். சம்பந்தன் கணீரென்று பாடினான்.

"கண்கண்டதெய்வமடா நீ, சம்பந்தா...!"

கிழவர் அவன் கன்னத்தை உள்ளங்கையால் பிடித்துத் திருஷ்டி கழித்தார்.

பிறகு கிழவர் சம்பந்தனைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டார். ஒரு பக்தர் கிழவரைச் சந்தித்தார்.

"உங்க பேரனை நாளைக்குப் பாடச் சொல்லுங்களேன். நாளைக்கு இங்கே அருணகிரி விழா நடக்கிறது!"

"சம்பந்தனையா சொல்கிறீர்கள்? பாடு கிறாயா, சம்பந்தா...?"

"யாரு தாத்தா, நானா?...நீ கூட இருந்தால் நான் எங்கே வேணுமானாலும் எப்போ வேணுமானாலும் பாடுவேன்."

கிழவர் கண்களில் கண்ணீர் வழிந்தது.

"ஏன் தாத்தா அழறே...நான் பாடறேன் தாத்தா!" கிழவர் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

கிழவர் 'முருகா முருகா' என்று ஜபம் செய்தார். தம் பேரனுக்கும், தம் மகன், மருமகளுக்குந்தான் என்ன வேற்றுமை என்று எண்ணி வியந்தார் கிழவர்.

ராமநாதனுக்கும், சாரதாவுக்கும் கோயில், குளம், ஜபம் முதலியவை பிடிக்காது. ஆனால் அவர்கள் பிள்ளை சம்பந்தன், ஞானசம்பந்தனாகவே இருந்தான்.

பச்சைப் பிள்ளை சம்பந்தன் எழுபது வயதுக் கிழவருடன் ஒட்டி விளையாடுவது உலகத்து இயற்கைக்கு மாறுபட்டதுதான்! ஆம்! உலகத்துப் பிள்ளைகளைப் போல இல்லை சம்பந்தன். ஆனால் அவன் அப்பாவுக்கோ இதெல்லாம் வெறும் பிதற்றல் என்பது எண்ணம். அவனுக்குத் தகுந்த ஜோடிதான் சாரதாவும்.

கிழவர் சம்பந்தனை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தார். சம்பந்தனைத் தோளில் தூக்கிப் பழக்கக் கூடாது என்பது அவன் தந்தையின் கட்டளை.

"இப்படிக் குழந்தையை அழைத்துக் கொண்டு போனால் அவனுக்கு எப்படிப் படிப்பு வரும்?" என்று இரைந்தாள் சாரதா. "அவனுக்கு அ, ஆ ஏதாவது சொல்லிக் கொடுக்கலாம் என்று நினைத்தால் இப்படி ஏதாவது ஒரு தொந்தரவு. அவனுக்கு உடம்பு வேறு சரியாயில்லை!"

கிழவர் உடலுக்கும் உள்ளத்துக்கும் ஏற்பட்ட நோயையும், பிறவி நோயையும் தீர்க்க வல்ல பெருமானைக் காட்டிலும் சிறந்த வைத்தியர் யார் உள்ளார் என்று எண்ணி, அவன் நினைவிலே சிந்தையைப்பறிகொடுத்து நின்றார்.

மறுநாள் காலை. கிழவர் எழுந்திருக்கும் போதே சம்பந்தன் மேடையேறப் போவதை நினைத்துக் கொண்டு எழுந்தார். சம்பந்தன் தூங்கிக் கொண்டிருந்தான்.

"சம்பந்தா...!"

"பூவான் மலி மணி நீர்ப் பொய்கை."

சம்பந்தன் தூக்கத்திலும் பாடிக் கொண்டிருந்தான். வறண்டு உலர்ந்து சுருங்கிய உதட்டைப் பட்டுப் போன்ற மிருதுவான கன்னத்தில் பதித்தார் கிழவர்.

சம்பந்தன் விழித்துக் கொண்டான்.

"தாத்தா...!"

"ஏண்டா கண்ணு?"

"நான் ஒரு சொப்பனம் கண்டேன்."

"என்ன சொப்பனண்டா?"

"ஒண்ணுமில்லே. நான் பாடுகிறபோது அம்மா அடிக்கிறமாதிரி."

"சீ அசடு! அதெல்லாம் ஒண்ணுமில்லே. இன்றைக்கு நீ கோயிலிலே பாடப் போகிறாயே. நான் சொல்லிக் கொடுத்த பாட்டிலே நாலு பாட்டுக்களைப் பாடு."

"சரி, தாத்தா!"

"சம்பந்தா! எழுந்தவுடன் என்ன பேச்சு?" என்று கடுகடுப்புடன் அங்கே வந்தான் ராமநாதன்.

"அப்பா, நான் இன்றைக்குக் கோயிலிலே பாடப்போகிறேன். நீ வருகிறாயா?"

"பாட்டும் வேண்டாம், கூத்தும் வேண்டாம்" என்றான் ராமநாதன்.

கிழவருக்கு வயிறு பகீர் என்றது!

"இன்றைக்குப் பள்ளிக்கூடத்திலே சேர்க்கப் போகிறேன். கோயிலுக்குப் போனால் உனக்குப் படிப்பு வருமா?"

"முடியாதப்பா. நான் இன்றைக்குப் பாடத்தான் போகிறேன்."

"கழுதை, வாய் மிஞ்சிப் போச்சு. இன்றைக்கு வெளியிலே போ, உன் காலை முறித்து விடுகிறேன்."

முருகன் திருவடிகளை என்று எண்ணி அவன் அடிகளை எப்போதும் வருடிக் கொண்டிருக்கும் கிழவர் இதைக் கேட்டு உருகினார்.

அன்று கோயிலிலே ஏகக்கூட்டம். கையில் அருச்சனை செய்த பூவும், பழமும், தேங்காயு



நிறைந்த கூடைகளை வைத்துக் கொண்டு நெற்றியிலே திருநீறுடன் அதன் நடுவில் குங்குமத்துடனும், முகத்திலே களை பொலியப் பக்தர்கள் மண்டபத்தில் குவிந்திருந்தனர். விழா ஆரம்பமாகிவிட்டது. சம்பந்தனை அழைத்துக் கொண்டு மேடைக் கருகில் சென்றார் கிழவர். சம்பந்தனிடம் தாம் சொல்லிக் கொடுத்த கந்தரலங்காரப் பாடல்களையும், தேவாரத்தையும், பெரிய புராணத்தில் ஒரு பாட்டையும் பாடச் சொன்னார்.

நுங்கு போன்ற இதழ் விரிந்து பாட ஆரம்பித்தான் சம்பந்தன். 'மொய்தாரணி குழல்' என்ற பாடலை ஆரம்பித்தான் சம்பந்தன். கணீரென்று, ஜலதரங்கத்தின் கடைசிப் பாத்திரம் போல, வளர்ச்சியடையாத குரல் முழங்கியது. கிழவர் பாடும்போது உள்ள அதே பாவம் அவன் முகத்திலே இருந்தது. சபையோர் மெய் மறந்தனர்.



'தோடுடைய செவியன்' என்ற பாட்டைப் பாடிய போது, அம்மையிடம் ஞானப் பால் உண்டு, பாட ஆரம்பித்த ஞான சம்பந்தனை எல்லோர்க்கும் நினைவூட்டியது. எல்லோரும் பக்தி பரவசமாயினர்.

கிழவர் அவனைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்கு விரைந்தார். மணி பத்து. மருமகள் சம்பந்தனை ஒன்றும் கூறக் கூடாதே என்று கவலைப் பட்டுக் கொண்டு நடந்தார்.

வீட்டுக்குள் நுழைந்தவுடன் சாரதாவின் குரல் வரவேற்றது!

''வாடா, வா! இன்றைக்கு அப்பா எப்படிப் போயிருக்கிறார் தெரியுமா? எல்லாம் அவர் வந்தால் தானே தெரிகிறது! பள்ளிக்கூடத்திலே சேர்க்கணும்னு இருக்கச் சொன்னால் கோயிலுக்கு இழுத்துண்டு போயிடறதும்...''

சம்பந்தன் கிழவரைத் தஞ்சமடைந்தான்.

''இன்றைக்கு அவன் என்ன அருமையாய்ப் பாடினான், தெரியுமா! எல்லோரும் கேட்டு விட்டு ஆச்சரியப்பட்டு விட்டார்கள். அங்கே வைச்சிருக்கேன் பார், புஷ்பமும் பிரசாதமும்....!'' என்றார் கிழவர்.

''ஆமாம், எல்லோரும் இன்றைக்கு ஆச்சரியப்படுவார்கள். நாளைக்கு, படிக்காமல் இருந்தால் அசடுன்னு சொல்லிக் கொண்டிருப்பார்கள். நீங்க சாஸ்வதமா என்ன? நாளைக்கு நீங்க கட்டையைச் சாய்த்து விட்டால்...''

'சிவ சிவ' என்று கூறிக் கொண்டே கொல்லைப்புறம் சென்று விட்டார் கிழவர்.

ராமநாதன் வந்ததும் வராததுமாக நேரே கிழவரிடத்தில் போனான்.

''அப்பா! நீங்கள் செய்கிறது ரொம்ப நன்றாகவேயில்லை. அவனை இன்றைக்குப் பள்ளிக்கூடம் அழைத்துக் கொண்டு போக வேணும்னு சொன்னேன். நீங்கள் அவனை அழைத்துக் கொண்டு போய் விட்டீர்கள். உங்களாலே லாபம் இல்லாவிட்டாலும் தொந்தரவு அதிகம். நீங்கள் இல்லாவிட்டால், அவன் இத்தனை நாட்கள் ஒழுங்காகப் படித்துக் கொண்டிருப்பான்.''

கிழவருக்கு அதற்குமேல் ஒன்றுமே காதில் விழவில்லை.

சம்பந்தன் ஏறும் இடுப்பில் துணி மூட்டை ஏறியிருந்தது. உடனே அவர் ராமநாதனின் அத்தை வீட்டுக்குப் புறப்பட்டு விட்டார்.

என்றைக்கும் சம்பந்தன் இல்லாமல் வெளியே கிளம்பாத கிழவர் இன்றைக்கு அவன் இல்லாமல் வெளியூர் செல்கிறார்.

* * *

''தாத்தா, எங்கே அம்மா?''

அம்மாவிடமிருந்து பதில் இல்லை.

''தாத்தா எங்கே போயிருக்கிறார், அப்பா?''


அப்பாவிடமிருந்தும் பதில் காணோம்!

கிணற்றடிக்கு ஓடினான் சம்பந்தன், தாத்தா குளித்துக் கொண்டிருக்கிறாரோ என்று பார்க்க! அங்கேயும் அவரைக் காணோம்.

''தாத்தா கோயிலுக்குப் போயிருக்கிறாரா, அம்மா?'' என்று கேட்டான்.

''இல்லேடா சம்பந்தா! தாத்தா ஊருக்குத் தான் போயிருக்கிறார்.''

சம்பந்தன் முற்றத்துக்கு ஓடினான்.




ஸெவன் ஓ'க்ளாக் பிளேடினால் அநேக தடவை க்ஷவரம் செய்து கொள்வதன் மூலம் பணத்தைச்

சேமியுங்கள்

மட்டரக பிளேடுகள் வாங்குவதால் பணம் சேமிக்கப்படுகிறது என்று நீங்கள் எண்ணுவது தவறு. குறைந்த விலைக்கு வாங்கப்படும் பிளேடு ஒரு க்ஷவரத்துக்குப் பிறகு மறுபடியும் உபயோகிக்க முடியாத நிலைமையை அடைவதால் பிரயோஜனமற்றதாக ஆகி விடுகிறது.

ஸெவன் ஓ'க்ளாக் பிளேடுகள் மிகவும் கூர்மையானவை என்பதை சொல்லவும் வேண்டுமோ. ஒவ்வொரு பிளேடும் அநேக தடவை க்ஷவரம் செய்துகொள்ளமட்டுமா உதவுகிறது. மழுமழுப்பான க்ஷவரத்தையும் அளிக்கிறது. ஆதலால்தான் ஸெவன் ஓ'க்ளாக் பிளேடுகள் வாங்குவதன் மூலம் பணத்தை சேமிக்கிறீர்கள்,



7 o'clock BLADES

இன்றே ஸெவன் ஓ'க்ளாக் பிளேடுகளை வாங்குங்கள்

அங்கே கொடியைப் பார்த்தான். அவனுக்குப் பகீரென்றது. தாத்தாவின் பழுப்பு நிற வேஷ்டி அந்தக் கொடியில் இல்லை.

''தாத்தா!'' என்று கூவினான் சம்பந்தன். ஓடிப் போய் வாசற்படியிலே உட்கார்ந்து கொண்டான் அவன்.

''என் தாத்தா என்னை விட்டுவிட்டுப் போக மாட்டார். இப்பொழுதே திரும்பிவந்து என்னை அழைத்துக்கொண்டு போவார், பார்'' என்று அம்மா உள்ளே கூப்பிட்டதற்கு அவன் பளிச் சென்று பதில் சொன்னான்.

ராமநாதன் இரண்டு நாட்களில் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைத்தான். அன்றைக்கே சம்பந்தனைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தான். பள்ளிக்கூடத்துக்குப் போகும் வழியில் கோயில் இருக்கிறது. அப்பாவை வாசலில் இருக்கச் சொல்லி விட்டுக் கோயிலுள்ளே ஓடினான் சம்பந்தன். தாத்தா வழக்கமாக உட்கார்ந்திருக்கும் தூணருகே போய்ப் பார்த்தான். அவனுக்குக் கிழவர் அங்கே இருப்பாரோ என்ற சந்தேகம்! அங்கேயும் அவரைக் காணவில்லை. உடனே அவன் துக்கம் பொங்கத் தூணைச் சிறிது நேரம் நின்று பார்த்து விட்டு வாசலுக்கு ஓடிவந்தான்.

''ஏண்டா, பள்ளிக்கூடத்துக்கு நேரமாச்சு; அங்கே உன்னைச் சேர்த்துவிட்டு நான் ஆபீசுக்குப் போக வேண்டாமா?'' சம்பந்தன் அவனைப் பின்தொடர்ந்தான்;

நான்கு நாட்கள் ஆயின. சம்பந்தன் தாத்தாவைக் காணாமல் ஏங்கிப் போனான்.

* * *

அன்று வெள்ளிக்கிழமை.

''டேய் வாடா, சம்பந்தா. உன்னைப் பள்ளிக்கூடத்திலே விட்டுட்டுப் போகிறேன்.''

சம்பந்தன் வந்தான். நடை, சம்பந்தன் நடையாக இருக்கவில்லை. ஏக்கத்தின் உருவாக நடந்தான் அவன்.

''அப்பா!''

''ஏண்டா?''

''இங்கே இரு. இன்றைக்கு வெள்ளிக்கிழமை. கோயிலுக்குள்ளே போய்ப் பார்த்து விட்டு வருகிறேன்.''

பதிலுக்குக் கூடக் காத்திராமல் கோயில் உள்ளே ஓடினான் சம்பந்தன். ராமநாதன் அதைக் கண்டு ஆச்சரியத்துடன் நின்றான்.

வெள்ளிக் கிழமையாதலால் கோயில் நிறைந்திருந்தது. எங்கும் ஆண்டவனுடைய தேஜஸ் பொலிந்திருந்தது! கோயிலுக்குள் சென்றவுடன் 'குப்' பென்ற தனி மணம்.

சம்பந்தன் நேரே சந்நிதிக்குச் சென்றான். சுவாமியை நமஸ்காரம் செய்து விட்டுத் தாத்தா உட்கார்ந்திருப்பதுபோல் தெரிந்தது. அது தாத்தாவோ!

அவன் உடலிலே ஒரு வேகம், உள்ளத்திலே உற்சாகம்!

உடனே அவன் வேகமாகத் தூணை நோக்கி ஓடினான். யாரோ போட்டிருந்த வாழைப் பழத்தோல் கீழே கிடந்தது. சம்பந்தனின் கால் அதிலே பதிந்தவுடன் 'சரக்'கென்று சறுக்கியது. தாத்தா உட்காரும் தூணிலே தலை...

''ஐயோ, தாத்தா!'' என்ற குரல் மண்டபத்திலே பேரிடியாக எதிரொலித்தது!

''ஐயோ! அதோ பாருங்கள்!'' என்று எல்லோரும் ஓடி வந்தனர். துண்டால் மண்டையைக் கட்டினார் ஒருவர். துண்டெல்லாம் துறவிக் கோலம் பூண்டது.

சம்பந்தனுக்குப் பிரக்ஞை இல்லை. ஒருவர் அவனைத் தூக்கிக் கொண்டு கோயிலுக்கு வெளியே ஓடி வந்தார்.

''யாரு சம்பந்தனுக்கா அடி? என் சம்பந்தனுக்கா?'' கதறித் துடித்தான் ராமநாதன்; ஜட்கா வண்டியில் ஏற்றிக் கொண்டு வீட்டுக்குச் சென்றான். டாக்டரை அவன் வீட்டுக்கு வரச் சொல்ல ஒருவர் பறந்தார்.

* * *

''ஸார்! இதுவரைக்கும் என் யத்தனமெல்லாம் செய்து பார்த்தேன். இனிமேல் தெய்வ யத்தனத்திலேதான் பிழைக்கணும்.'' டாக்டர் நீதிபதி சொல்லும் தீர்ப்பு போலக் கூறி விட்டார்.

''தாத்தா...'' சம்பந்தன் பிதற்ற ஆரம்பித்தான். டாக்டர் வியப்புடன் அவன் பேசுவதைக் கவனித்தார்.

''தாத்தா, எங்கே?''

''யாரு சார், அந்தத் தாத்தா?''

நெஞ்சு ஓர் அங்குலமாகக் குறுகியதுபோலத் திக்கித் திணறி, ''சம்பந்தனின் தாத்தா; என் அப்பா. ஊருக்குப் போய்ப் பத்து நாட்களாகின்றன!'' என்றான் ராமநாதன்.

டாக்டர் ராமநாதனை அழைத்தார்.

''இவன் தாத்தாவை நினைத்துக் கொண்டே விழுந்திருக்கிறான். அவர் நினைவாலே பிதற்றுகிறான். முதலிலே அவரைப் போய் அழைத்துக்கொண்டு வாருங்கள்!''

தன் பிள்ளையைக் குட்டிச்சுவராக்குகிறார் என்று சொன்னவன் அவரையே உயிர்ப் பிச்சை கொடுக்கக் கெஞ்சுவதற்கு வாடகைக் காரில் விரைந்தான்.

''அப்பா...!'' என்று அலறிக் கொண்டே காரை விட்டு இறங்கி ஓடிவந்தான் ராமநாதன். படுக்கையிலிருந்த கிழவருக்குத் தூக்கிவாரிப் போட்டது.

எதிரும் புதிருமாக இரண்டு ஊர்கள். இடையே ஒரு ஆறு ஓடிக் கொண்டிருந்தது. அதிலிருந்து நீர் எடுப்பது சம்பந்தமாக இரு ஊராருக்குமிடையே ஏற்பட்ட சச்சரவு சண்டையாகப் பரிணமித்தது. கடைசியில் அடி, தடி, கொலை என்ற நிலைக்குக் கொண்டு போய்விட்டது.

பகவான் புத்தருக்கு இந்தச் செய்தி எட்டியதும், சமாதானப்படுத்துவதற்காகப் போய்ச் சேர்ந்தார். இருதரப்புத் தலைவர்களையும் அழைத்து, "சகோதரர்களே! நீங்களே சொல்லுங்கள், தண்ணீர் அதிக மதிப்பு உள்ளதா, மானிடர்களின் ரத்தம் அதிக மதிப்பு வாய்ந்ததா?" என்று கேட்டார்.

மக்கள் அவர் கூறிய சொற்களின் பொருளை உணர்ந்து கொண்டார்கள். தங்களுக்குள் சண்டை போடுவது நல்லதல்லவென்று சமாதானமாகப் போய் விட்டார்கள்.

ஆனால் இன்றைய அரசியல்வாதிகளை யாராவது கேட்டுப் பாருங்கள்: "பெட்ரோல் அதிக விலைமதிப்புள்ளதா, மனிதனின் உயிர் அதிக மதிப்பு வாய்ந்ததா என்று!"

என்ன பதில் கூறுவார்கள், தெரியுமா? "இதைப் பற்றி யோசித்துத்தான் பதில் சொல்ல வேண்டும்!" என்பார்கள்.

— காகா காலேல்கர்

"அப்பா! சீக்கிரம் வாப்பா!" அவன் தொண்டையிலிருந்த வார்த்தைகளுக்குப் பதில் அழுகை வந்தது.

கிழவர் "என்னடா நடந்தது?" என்று பரபரப்புடன் கேட்டார்.

"சம்பந்தன் கோயிலிலே விழுந்து மண்டையை உடைத்துக் கொண்டு விட்டான்."

"என் இருளான சம்பந்தனா? ஐயோ!" கிழவர் கதறினார். ராமநாதனின் அத்தை விஷயம் தெரிந்து பதறிப் போனான்.

"இதோ வந்துட்டேன்டா" என்று காருக்கு ஓடினார் கிழவர். கிழட்டுக் கால்களுக்கு யார்தான் அந்த அசுர சக்தியைக் கொடுத்தார்களோ?

கார் விரைந்தது. கிழவருக்கு ஆசனத்தில் இருப்புக் கொள்ளவில்லை. கந்தரலங்காரம் பாடினார், அழுகைக் கிடையில்.

வீடுவந்தது. !"சம்பந்தா...என் செல்வமே" என்று கிழவர் நேரே படுக்கைக்கு ஓடினார்.

அங்கே தலையிலே கட்டுடன் படுத்திருந்த சம்பந்தனைக் கண்டு அலறினார் கிழவர்.

கிழவர் உத்வேகத்துடன் பாடினார். சூறாவளிக் காற்றைப் போன்ற சக்தியுடன் பாடினார். சம்பந்தன் கண்ணை அகல விழித்தான்.

"தாத்தாவா...?"

"ஆமாண்டா, கண்ணு!" குலுங்கிக் குலுங்கி அழுதார் கிழவர்.

"எ ... ன் ... னை ... விட்டுவிட்டுப் போக மாட்டாயே!"

"மாட்டேன்டா, சம்பந்தா!"

வெளியே ராமநாதன் தேம்பினான்.

"தாத்தா..." சம்பந்தன் தன் கையைத் தூக்கிக் கிழவரின் கண்ணைத் துடைக்க முயன்றான். கையைத் தூக்க முடியாமல் பாதியிலே அது விழுந்துவிட்டது. கிழவர் முகத்தை அவன் கை அருகில் கொண்டு போனார். சம்பந்தனின் கரம் கண்ணீரைப் பரிவுடன் துடைத்தது. உள்ளே வந்த டாக்டர் "எழுபது வயதுக் கிழவரிடம் இப்படிச் சின்னப் பையன் ஒட்டிக் கொண்டிருப்பது அபூர்வமாயிருக்கிறது..." என்றார்.

கிழவர் "உங்களுக்கெல்லாம் ஒன்றுமே புரியாது..." என்றார் பொங்கும் அழுகையை அடக்கிக் கொண்டு!

"தாத்தா! ஏன் தாத்தா என் தலையிலே கட்டுக்கட்டியிருக்கா...?"

"ஒண்ணுமில்லேடா, கண்ணு...!"

"நீ தூண்கிட்டே இருப்பதை நான் பார்த்தேன். உடனே உன்னிடம் ஓடிவந்தேன்."

"நான் அங்கேதான் உட்கார்ந்திருந்தேன்!"

"ராமநாதன்! இனிமேல் பயமில்லை. அந்தக் கிழவராலேதான் உங்கள் மகன் பிழைத்தான். நீங்கள் பக்கத்திலே போக வேண்டாம். அந்தக் கிழவரே அவன் பக்கத்திலே இருக்கட்டும்" என்று சொன்னார். "இந்தப் பிணைப்பு அதிசயமானது... சரி! நாளைக்குக் காலையிலே வருகிறேன்" என்று கூறிவிட்டுப் போய் விட்டார் டாக்டர்.

சம்பந்தன் சற்று நேரத்துக்கெல்லாம் அயர்ந்து தூங்கி விட்டான்.

சம்பந்தன் தலையில் கட்டியிருந்த கட்டிலே, நெற்றியின் நடுவிலே ரத்தம் தோய்ந்திருந்தது. அது திருநீற்றின் நடுவிலே குங்குமம் போலக் காட்சி யளித்தது.

கிழவருக்கு அதைக் கண்டவுடன் கண்களில் நீர் பொங்கியது.

அவருக்குத்திடீரென்று தலையைச் சுற்றியது. சம்பந்தனை ஆவல் ததும்பும் முகத்துடன் இரண்டு நிமிஷம் பார்த்தார். பிறகு அவன் படுக்கை அருகிலேயே துண்டை விரித்துப் படுத்துக் கொண்டார். சம்பந்தன் அரங்கேறியதும், தாம் ஊரை விட்டுப் போனதும் மனக் கண்முன் சுழலாகச் சுற்றின. உட்கார்ந்திருந்த தூண் எதிரே வந்து நின்றது.

அந்தத் தூண் லிங்கமாகக் காட்சியளித்தது.

விடிந்தது!

சம்பந்தன் விழித்தான்.

"தாத்தா...!"

"............"

"தாத்தா! நான் பாடினால்தானே கண்ணை மூடிண்டு இருப்பாய். இப்போ நான் பாடலையே."

"............"

"நேற்றுப் பாடின பாட்டின் மிச்சத்தைப் பாடினால்தான் எழுந்திருப்பாயா? இதோ பாடறேன்:

படங்கொள் பாயும் பூவணையும்
தருவாய் மதுரைப் பரமேட்டி
படங்கொள் பாயும் பூவணையும்
தருவாய் கையில் படுதலைகொண்டு
இடங்கள் தோறும் இரப்பாய்
என்று ஏகவார்க்கென் பேசுவனே

இப்போ எழுந்திரு. தாத்தா....தாத்தா..."

கிழவர் எழுந்திருக்கவே இல்லை!

Printed and Published by T. Sadasivam at the Kalki Press Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam

'அனஸின்'

ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பான
நான்கு மருந்துகள் சேர்ந்துள்ளது

1. க்வினைனின் சல்பேட் 2. காப்பின்
3. பினஸிடின் 4. ஆஸிடில்ஸாலிஸிலிக் ஆஸிட்



நான்கு
மருந்துகளின்
சேர்க்கையான
'அனஸின்'
வேண்டுமென்றே
கேளுங்கள்

Registered No. M. 4397
Registered as a Newspaper in Ceylon